






# மக்கள் நீதி மய்யம்

# தமிழக சட்டமன்றத் தேர்தல் பிரகடனம் 2021


நேர்மையைத்
தேர்ந்தெடுத்து
வாக்களிப்போம்.
நம்ம சின்னம் டார்ச் லைட்
தேர்தல் நாள்
ஏப்ரல்
06
நேர்மையாளர்களான எங்களது
வாக்குகள் விற்பனைக்கு அல்ல
உறுதிமொழி ஏற்க
கோவை மாநகராட்சி
கோவையின் குரலாய்
நம்மவர்

# மக்கள் நீதி மய்யம்
# 2021 தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் அறிக்கை

இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.
திருக்குறள் 385

-

பொருள் வரும் வழிகளை மேன்மேலும் இயற்றலும் வந்த பொருள்களைச் சேர்த்தலும், காத்தலும் காத்தவற்றை வகுத்துச் செலவு செய்தலும் வல்லவன் அரசன், என்கிறார் திருவள்ளுவர்.

அதிமுக, திமுக கட்சிகளின் மோசமான ஆட்சியாலும் தவறான நிதிநிர்வாகத்தாலும் தமிழகத்தின் கடன் சுமை 1 லட்சம் கோடி கடனில் இருந்து 5.75 இலட்சம் கோடிகளாய்ப் பெருகியது. அதிமுக திமுக கட்சிகள் ஒவ்வொரு முறை தேர்தல் அறிக்கை கொடுக்கும்போதும், தமிழகத்தின் கடன் சுமை அதிகரித்துக்கொண்டே போனது. அனைத்து தேர்தல் அறிக்கைகளும் சேர்ந்து தமிழர்களின் தலையில்; வரலாறு காணாத 5.75 கோடி கடன் சுமைகளை கொண்டுவந்தன. இந்த ஆண்ட கட்சிகளின் வரலாற்றைத் திரும்பிப் பார்த்தால், இவர்களின் தேர்தல் அறிக்கைகள் பெரும் கடன் சுமைகளையே தமிழர்களின் தலையில் ஏற்றி வைத்தன. கடன்சுமையின் விளைவுகள் ஒவ்வொன்றாக வெளிவர ஆரம்பித்திருக்கின்றன - அரசு ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாமை, ஓய்வூதியம் தருவதில் பிரச்சினை, வளர்ச்சித் திட்டங்கள் பின்தங்குவது, கல்வி நிலையங்களில் போதிய ஆசிரியர்கள் இல்லாமை, பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தேவையான கட்டமைப்பு இல்லாமை, வேலைவாய்ப்பின்மை, விவசாய மற்றும் தொழில் துறை நசிவு, பணப்புழக்கம் இல்லாமை, 50 ஆண்டுகளாக இன்னும் அடிப்படை வசதிகள் கூட நிறைவேற்றப்படாத நிலைமை, சுகாதார வசதிகள் குறைபாடு என்று சொல்லிக்கொண்டே போகலாம்.

ஒரு தேசத்தை வளர்ச்சிப்பாதையில் பயணிக்க, வளர்ச்சித்திட்ட அறிக்கைகள் மிக முக்கியமானவை. அதிமுக திமுக கட்சிகளின் தவறான அணுகுமுறையால் பொருளாதார வளர்ச்சித்திட்டங்கள் பின்னுக்குத்தள்ளப்பட்டு, தேர்தல் அறிக்கைகள் தேர்தல் முடிந்தவுடன் முக்கியத்துவத்தை இழந்து, தமிழகம் உற்பத்தி துறை, சேவைத்துறை, தொழில்துறை ஆகியவற்றில் பாதிக்கப்பட்டு நாளுக்கு நாள் கீழ் நோக்கி பயணித்துக்கொண்டிருக்கிறது.

மாறி மாறி ஆண்டிக்கொண்டிருக்கும் அதிமுக, திமுக கட்சிகளுக்கு தேர்தல் அறிக்கை என்பது வெறும் வெற்று காகித அறிக்கையாகி, அரைகுறையாக அமல்படுத்தப்பட்டு, வீணாகிப் போனதால், நிதியும் விரயமாகி கடனில் தள்ளப்பட்டு விட்டது. தமிழ்நாடு விஷன் 2023 மிகப் பெரிய கனவுடன் உருவானது, ஆனால் குறுகிய நோக்கங்களுக்காகவும், தவறான ஆட்சியாலும் தவறான நிதி நிர்வாகத்தாலும் குறை பிரசவமானது. அதே போல திமுக வின் 7 தொலைநோக்கு பார்வை திட்டத்தில் கடந்த 50 ஆண்டுகளில் ஒவ்வோரு 10 ஆண்டுகளில் பொருளாதாரத்தை 4 மடங்காக உயர்த்தியவர்கள் கலைஞர், எம்.ஜி.ஆர், ஜெயலலிதா அவர்கள். இதை கூட 2031ல் எய்தும் இலக்கை நிர்ணயிக்காமல், அடுத்த 10 ஆண்டுகளில் 1.7 மடங்கு தான் திரு ஸ்டாலினால் எய்த முடியும் என்ற இலக்கை நிர்ணயித்திருக்கிறது திமுக.

எனவே அதிமுகவும், திமுகவும் வரிவருமானத்தை மட்டுமே நம்பி, மாநில நிர்வாகத்தை நடத்துவதற்கு கடன் வாங்கித்தான் நடத்தமுடியும் என்ற நிலையில் தான் இருக்கிறார்கள் என்பது வெளிப்படையாக தெரிகிறது.

தொலை நோக்குப் பார்வை இல்லாத தலைவர்களால் வளர்ச்சித் திட்டங்களை எடுத்துச்செல்ல முடியாது. வெறும் ஓட்டுக்காக தேர்தல் அறிக்கைகளை கொடுத்துவிட்டுச் செல்லும் கட்சிகளால் எந்த ஒரு தொலை நோக்குத் திட்டங்களையும் தர முடியாது, தந்தாலும் அந்த திட்டத்தின் தன்மை மாறாமல் அமல்படுத்த முடியாது. அரைகுறையாக உருவாக்கப்பட்ட தேர்தல் அறிக்கைகளால் தமிழ்நாடு தாழ்ந்தும் கடன் சுமையால் வீழ்ந்தும் போனது இந்த ஆண்ட கட்சிகளால்.

எனவே இவர்களது பிடியில் இருந்து தமிழகத்தை மீட்டெடுக்க இரண்டாவது சுதந்திர போராட்டத்தை மக்களாகிய நாம் நடத்தவேண்டும். அந்த வேள்வியில் ஒரு அங்கம் தான் தமிழ்நாடு 2021 சட்டமன்ற தேர்தல்.

எனவே, தமிழகத்தை வளமான நாடுகளுக்கு இணையான நாடாக உருவாக்க, எங்களது அடுத்த 10 ஆண்டுகளுக்கான மக்கள் நீதி மய்யத்தின் தேர்தல் அறிக்கை 2021

# உள்ளடக்கம்

1. பொருளாதாரம்
2. வெண்மைப் புரட்சி – நேர்மை காத்தல் மற்றும் ஊழல் ஒழிப்பு
3. நீலப்புரட்சி\
4. நிரந்தர பசுமை புரட்சி
5. தமிழ் மொழி வளர்ச்சி
6. கிராமப்புற சுயசார்பிற்கும், மறுமலர்ச்சிக்கும் அப்துல் கலாமின் இலட்சிய புரா திட்டம்
7. செழுமைக் கோடு
8. ஒன்றியம், பேரூராட்சி, நகராட்சிகளில்
9. கல்விக்கொள்கை
10. மருத்துவக் கொள்கை
11. எரிசக்தி சுதந்திர கொள்கை
12. போக்குவரத்து கொள்கை
13. நகர்புற மேம்பாடு
14. பிளாஸ்டிக் மற்றும் பாலிதீன் பைகள் தடை

15. பொருளாதார வளர்ச்சிக்கான பொருளாதார கட்டமைப்பு கொள்கை
16. தொழில்துறை சீரமைப்பு
17. தொழில் மற்றும் தொழிலாளர்கள் நலன்
18. பெண்கள் நல்வாழ்வுக்கான 7 செயல்திட்டங்கள்
19. பத்திரிகையாளர் நலன்
20. திரைப்படத்துறை
21. தகவல் தொழில் நுட்பத் துறை மேம்பாடு
22. ஜவுளி துறை
23. காவல்துறை சீரமைப்பு
24. அரசு ஊழியர்கள் நலன்
25. தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் அறிவுத்திறன்
26. பால் வளத்தில் மீண்டும் ஒரு வெண்மை புரட்சி
27. அறநிலையத்துறை
28. விளையாட்டுத்துறை
29. சுற்றுலா மேம்பாடு
30. முதியோர்கள் மற்றும் ஆதரவற்றோர் நலன்

31. தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினர் நலன்
32. வரிச்சீரமைப்பு
33. வணிகர்கள் நலன்
34. தமிழ்நாடு தினக்கடன் மற்றும் மேம்பாட்டு வங்கி
35. தமிழ்நாடு அறிவுசார் சொத்து மேம்பாட்டு வங்கி
36. தனித்திறன் பெற்றவர்கள்
37. மணல் கொள்கை.
38. சுற்றுச்சூழல்பாதுகாப்பு
39. கனிம வள மேம்பாட்டு கொள்கை
40. தீர்க்க முடியாத பிரச்சனைகளுக்கு தீர்வு
41. இலவசம் அல்ல சமூக, பொருளாதார மேம்பாட்டு திட்டங்கள்

## பொருளாதாரம்

- விவசாயம், தொழில்துறை மற்றும் உற்பத்தி துறை, சேவைத்துறையின் பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்து 15 முதல் 20 சதவிகித வளர்ச்சியை அடுத்த 10 ஆண்டுகளுக்கு நிலையாக தொடர நடவடிக்கை எடுத்து, தமிழகத்தின் ஒட்டு மொத்த பொருளாதாரம் $1 டிரில்லியன் (ரூ 70 லட்சம் கோடி) அளவில் இன்றைய நிலையில் இருந்து சுமார் 4 மடங்கு உயர்த்தி தமிழ்நாட்டை வளர்ந்த நாடுகளுக்கு இணையான நாடாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம் தனிநபர் வருமானத்தை ரூ 7 முதல் 10 லட்சமாக உயர்த்துவோம்.
- முதல் 5 ஆண்டுகளில் தமிழகத்தின் 5.7 லட்சம் கோடி கடனை அடைக்கும் விதத்தில், பொருளாதாரக் கொள்கைகளை வகுத்து விவசாயம், தொழில் துறையில் மிகப்பெரும் மாற்றத்தை உருவாக்கி வரிஇல்லா வருமானத்தை உறுதி செய்து. அதன் மூலம் தமிழ்நாட்டின் கடனை குறைக்க கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.
- அடுத்த 5 ஆண்டுகளில் வரிக்கு நிகரான வருமானத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.
- முதல் 3 ஆண்டுகளில் நட்டத்தில் இயங்கும் தமிழக பொதுதுறை நிறுவனங்கள் முற்றிலும் சீரமைக்கப்படும், அதில் பணியாற்றும் பணியாளர்களை அதன் பங்கு தாரர்களாக்குவோம். உலக தொழில் நுட்பம், மேலாண்மை, சிக்கனம், உற்பத்தி திறன் அதிகரிப்பு, தனியார் முதலீடு போன்ற நடவடிக்கைகளை எடுத்து நட்டத்தில் இயங்கும் அனைத்து நிறுவனங்களையும் லாபமாக்கும் நடவடிக்கை தீவிரமாக எடுக்கப்படும்.
- நிரந்திர பசுமைப்புரட்சிக்கு வித்திடுவோம். படித்த மாணவர்களுக்கு பிடித்த துறையாக விவசாயத்தை உருவாக்குவோம். SRI, SSI, PRECISION FARMING தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நெல், கரும்பு மற்றும் பணப்பயிர்கள் உற்பத்தியை இரண்டு மடங்காக்கி, விவசாயிகளுக்கு வேளாண் விஞ்ஞானி டாக்டர் M.S. சுவாமிநாதன் பரிந்துறைத்த (MSP) குறைந்த பட்ச ஆதார விலையை தமிழகத்தில் உறுதி செய்து அமுல் படுத்துவோம்.
- கார்ப்பரேட்டுகளுக்கு ஆதரவான இந்திய ஒன்றிய அரசின் FARM BILL 2020 யால் பாதிக்கப்படும் விவசாயிகளை மீட்டெடுக்கவும்,

மாநில சுயாட்சியை மீட்டெடுக்கவும், மாநில பட்டியலில் இருக்கும் விவசாயத்தை - மாநில அரசின் விவசாய மேம்பாட்டு சட்டமியற்றி தமிழக விவசாயிகளை பாதுகாக்க உறுதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

- விவசாயிகளை பங்கு தாரர்களாக கொண்டு வெறும் விவசாய உற்பத்தி நிறுவனங்களாக இயங்கும் FPO வை, விவசாய உற்பத்தி, விற்பனை மற்றும் ஏற்றுமதி நிறுவங்களாக மாற்றி அமைத்து (FPMEO - FARMER PRODUCER, MARKETING AND EXPORT ORGANISATION) - பாரம்பரிய விவசாயத்தோடு, நவீன அறிவியல் சார்ந்த இயற்கை வேளாண்மை - SMART CLIMATE CHANGE AGRICULTURE FARMING ஊக்குவிக்கப்படும். அதில் விவசாயிகள் பங்குதாரர்களாக ஆக்கி அவர்கள் உலகளாவிய வர்த்தகத்தில் ஈடுபட்டு மேம்பாடு அடைய வழிவகை செய்யப்படும், இதில் வர்த்தகர்களும் பங்குதாரர்கள் ஆக்கப்படுவார்கள். ஒட்டு மொத்த வருமானம் அதில் வரும் லாபம் அரசிற்கும், விவசாயிகளுக்கும் மற்றும் வர்த்தகர்களுக்கும் சென்று சேரும் வகையில் - சிறப்பாக செயல்படும் அரசு லாபம்தரும் உலக நிறுவனங்களோடு போட்டி போடும் அரசு-விவசாயிகள் கார்ப்பரேட் நிறுவனமாக உருவாக்கப்படும். 234 தொகுதிகளிலும் 10 FPMEO உருவாக்கப்பட்டு - 2340 FPMEO க்களில் 10,000 விவசாயிகள் முதல் கட்டமாக இதில் பங்கு தாரர்களாக இணைக்கப்படுவார்கள்.
- எங்கெல்லாம் வறட்சி, தண்ணீர் குறைபாடு இருக்கிறதோ அங்கெல்லாம், குறைந்த தண்ணீரை பயன்படுத்தி அறிவியல் சார்ந்த இயற்கை விவசாயம் - SMART AGRICULTURE - HYDROPONICS, AEROPHONICS, AQUAPHOMICS போன்ற தொழில் நுட்பங்களை பயன்படுத்தி இரசாயண உரம் இல்லா, பூச்சி கொல்லி மருந்தில்லா - மண்ணில்லா விவசாயம், நேர் அடுக்கு விவசாயம் - VERTICAL FARMING IN GREEN HOUSE முறையில் செயல்படுத்துவோம். அதன் மூலம் விவசாய உற்பத்தியை பன்மடங்கு உயர்த்தி - உள் நாட்டு தேவைக்கும், ஏற்றுமதிக்கு தேவையான ஒரு பொருளாதார மேம்பாட்டு விற்பனை சங்கிலியை உருவாக்கி விவசாயத்தை மீட்டெடுத்து 2 இலக்க பொருளாதார வளர்ச்சியை உறுதிசெய்வோம்.
- ஆட்டோமோபைல் துறை, டெக்ஸ்டைல் துறை, ஆயத்த ஆடை துறை, பின்னலாடை துறை, லெதர் தொழில் துறை, பவுண்டரி தொழில், ஜிவல்லரி தொழில், இலகுரக மற்றும் கனரக

இயந்திரங்கள் துறை, தொழில் டூல்ஸ் தொழில், எலக்ட்ரானிக்ஸ் துறை, சாப்ட்வேர் துறை, தகவல் தொழில்நுட்ப துறை, பட்டாசு தொழில், தீப்பெட்டி தொழில், பிரிண்டிங் தொழில் போன்ற அனைத்து தொழில் துறைகளையும் 3 மடங்கு உயரும் வகையிலும், உலகத்தோடு போட்டி போட்டு வளரக்கூடிய தொழில்நுட்பத்தையும், உற்பத்தி திறன் மேம்பாட்டையும், அன்னிய முதலீட்டையும் கொண்டு வருவோம்.

- தரமான மூலப்பொருள்களை அரசு ரேஷன் முறையில் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு குறைந்த விலையில் தொடர்ந்து கிடைக்கும் வகையில் ஒரு MSME SUPPORT SYSYTEM உருவாக்கப்பட்டு, ரூ 1000 கோடி முதலீட்டில் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- GST - வரியை 16% க்குள் கொண்டு வரவும், தவறான GST filling system மாற்றி அமைக்கப்படவும், GST RETURNS ஒவ்வொரு மாதமும் கிடைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.
- ஜி.எஸ்.டி வரியால் நசிவடைந்த தொழிலை மீட்டெடுக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம். அதிகமான தொழில்களை ஏற்றுமதிக்கு முக்கியத்துவம் கொடுத்து அதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் தொழில்துறை மற்றும் உற்பத்தி துறையினருக்கும், சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கும் டான்சியா, கொடிசியா, மட்டிசியா, சேம்பர் ஆப் காமர்ஸ் போன்ற அமைப்புகளின் ஆலோசனை பெற்று 3 மடங்கு உயர நடவடிக்கை எடுக்கப்படும், அதற்கு தேவையான பட்ஜெட் ஒதுக்கப்படும்.
- இந்திய ஒன்றிய மற்றும் மாநில அரசு நிறுவனங்கள் MSME செக்டாருக்கு நிலுவைத்தொகை வைக்காமல் உடனடியாக வழங்க சட்ட நடை முறை உருவாக்கப்படும். SARFASI ACT ன் கால அளவு 2 மடங்காக உயர்த்த ஒன்றிய அரசை வலியுறுத்தி அரசியல் சட்ட போராட்டம் நடத்தப்படும்.
- உலகளாவிய சன் ரைஸ் செக்ட்டாரை தேர்ந்தெடுத்து, INDUSTRY 3.0 TO INDUSTRY 5.0 தொழில்நுட்ப தரம் உயர்ந்த தொழிற்சாலைகள் தமிழகத்தில் கொண்டு வரப்படும். முக்கியமாக விவசாய உற்பத்தி பன் மடங்கு அதிகரிப்பு மற்றும் விவசாய உற்பத்தி பொருள்கள் மதிப்பு கூட்டுதல் மும்முரமாக செயல்படுத்தப்படும். தொழில் மேம்பாடு, உற்பத்தி மேம்பாடு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, வேலைவாய்ப்பு பன்மடங்கு உயர்த்தப்படும்.

- தொழில் நுட்ப மேம்பாட்டை ARTIFICAL INTELLIGENCE, ROBOTICS, MACHINE LEARNING, BLOCK CHAIN, BIOTECHNOLOGY, QUANTUM COMPUTING
போன்ற உலகளாவிய தீவிர நவீன தொழில்நுட்பங்களை (DEEP TECHNOLOGIES) அனைத்து துறைகளிலும் கொண்டுவந்து பொருளாதார மேம்பாட்டையும், படித்த மாணவர்களை இந்த தொழில்நுட்பத்தில் உலகஅளவில் சிறந்த தனித்திறன் பெற்றவர்களாக உருவாக்கி, அவர்களுக்கு உலக தரத்தில் மதிப்பு கூட்டப்பட்ட வேலைவாய்ப்பையும் அதற்கேற்ற மதிப்பு கூட்டப்பட்ட ஊதியத்தையும், நவீன தொழில் முனைவோர்களையும் உருவாக்குவோம்.
- முக்கியமாக எங்களது இலக்கு - உயிரி எரிபொருள், எத்தனால், விமான எரிபொருள், பார்மச்சூட்டிகள் துறை, எலக்கட்டிரிக்கல் வாகனம் மற்றும் பேட்டரி உற்பத்தி, சோலார் செல் மற்றும் பேனல் உற்பத்தி, செமி கண்டக்டர், 5G துறை சார்ந்த தொழில்கள், AI HUB, AUTOMATION & ROBOTICS, DATA CENTRE, OIL & GAS, ENERGY & UTILTIES, SMART WASTE MANAGEMENT, LOGISTICS AND SUPPLY CHAIN MANAGEMENT, WORLD LEVEL TOURISM INFRASTRUCTURE, IOT &IIOT RESEARCH HUB, SMART VILLAGES, FINTECH CAPITAL, SAAS CAPITAL, AERO DEFENCE & MRO HUB, RETAIL HUB, TRAVEL & TRANSPORT, CULTURAL HUB மற்றும் நவீன புது மருந்துகள் கண்டுபிடிப்பு, சித்த மருத்துவம் மற்றும் ஆராய்ச்சி மேம்பாடு உறுதி செய்ப்பட்டு சித்த மருத்துவம் உலக தரம் வாய்ந்த மருத்துவமாக உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும். எலக்ட்ரானிக் சிப் வடிவமைப்பு மற்றும் உற்பத்தி துறைக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படும். இதை எல்லாம் உலகதரம் வாய்ந்த நிறுவனங்களோடு இணைந்து உருவாக்கப்படும்.
- இறக்குமதிக்கு இணையான பொருள்களை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு துறையுடன் இணைந்து புது கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கப்படும். அப்துல்கலாமின் இலட்சிய புராதிட்டத்தை ஒருங்கிணைந்த கூட்டு பண்ணையங்கள் (ஆட்டு பண்ணை, மாட்டு பாண்ணை, கோழி பண்ணை, மீன் பண்ணை, SMART AGRICULTURE FARMING - அதிதிறன் வேளாண்மை பண்ணை) மூலம் செயல்படுத்துவோம். அதோடு சேர்த்து இறக்குமதிக்கு இணையான பொருள்களை உலகதரம் வாய்ந்த தொழில்நுட்டபத்தை பயன்படுத்தி FMGC/RETAIL துறையில்

உற்பத்தியை உலகத்தரத்தில் கிராமப்புரத்தில் பரவலாக உற்பத்தி செய்ய அப்துல் கலாம் புராதிட்டத்தின் (PURA - PROVIDING URBAN AMENITIES IN RURAL AREAS) மூலம் 234 தொகுதிகளிலும் ஆளும் கட்சி, எதிர்கட்சி என்ற வேறுபாடு கருதாமல், 234 PURA CLUSTERS உருவாக்கப்பட்டு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஏற்றுமதி வர்த்தகத்தின் கிராமப்புற தற்சார்பு பொருளாதாரம் உறுதி செய்யப்படும்.

- UNO MODEL - UNORGANISED TO ORGANISED. அனைத்து அமைப்பு சாரா தொழிலாளர்களையும் அமைப்பாக மாற்றியமைக்கப்படும். அனைத்து தொழிலாளர் நலவாரியங்களும், நல மேம்பாட்டு நிறுவனங்களாக மாற்றியமைத்து அவர்களுக்கு சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மேம்பாடு மற்றும் அதிகாரம் உறுதி செய்யப்படும். அமைப்பு சாரா தொழில்கள் பெயர் மாற்றி அமைக்கப்படும், அது மட்டுமல்ல அவர்களது வாழ்க்கை தரம் உயரும் வகையில் தனித்திட்டம் கொண்டு வரப்பட்டு, அதன் மூலமாக நிறுவனங்கள் உருவாக்கப்பட்டு அதில் இந்த தொழிலாளர்களை பங்குதாரர்களாக ஆக்குவோம். வேலைக்கு சம்பளம், லாபத்தில் பங்கு. Carpenter to Space Saving furniture makers, Potters to World Earth ware makers, Brick & Tiles makers to Latest Construction materials makers, Barbers to Style makers, Weavers to Fashion Designers, Fishermen to Sea Fearers, Jewelry makers to Fashion makers, Dhobi to Hygiene Providers, Construction workers, Fitters, Electricians & Plumbers to Lifestyle improvers, Diploma holders (Civil, Electronics, Electronics, Computer, textile etc) to Industry 5.0 creators, Salt workers to health enhancers, Drivers and conductors to Transport Ambassadors, Municipal workers to Clean Green Ambassadors, Media personal & Jornalists to Awakening Ambassoders ஆக மாற்றுவோம்.
- குடிசையில்லா தமிழகத்தை உருவாக்க தமிழ்நாடு வீட்டு வசதி கார்ப்பரேஷன் - நவீன பசுமை வீடுகள் கட்டமைப்பு நிறுவனமாக மாற்றி அமைக்கப்பட்டு அதன் மூலம் ஆயத்த கட்டமைப்புகளை நவீன முறையில் செயல்படுத்தி - 20 லட்சம் நவீன பசுமை வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டு குடிசையில்லா தமிழகத்தை உருவாக்குவதோடு, நடுத்தர மக்களுக்கு பலன் அளிக்கும் வகையிலும் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு, தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடும். இதற்கான மானியம் ரூ 4 லட்சம் வழங்கப்படும். ஏற்கனவே குடிசை மாற்று வாரியம் கட்டிய இடியும் நிலையில் உள்ள வீடுகளுக்கு பதில் அடுக்குமாடி

பசுமை வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும். ஆற்றங்கரையோரம் வசிக்கும் குடிசை வாசிகளுக்கு அந்த ஆற்றங்கறையில் அடுக்கு மாடி வீடுகள் கட்டிக்கொடுத்து அவர்கள் வாழ்வாதாரத்தை பாதுகாப்போம். அதில் விளையாட்டு மைதானம், பள்ளி, மருத்துவமனை மற்றும் வர்த்தக நிறுவனங்கள், ஜமேக்ஸ் சினிமா தியேட்டர் உட்பட வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும்.

- மேற்கண்ட வளர்ச்சிக்கான திட்டங்களின் மூலம் அடுத்த 10 ஆண்டுகளில் விவசாயம், உணவு பதப்படுத்துதல், மதிப்பு கூட்டுதல், வாகனம் மற்றும் விமானத்திற்கான உயிரி எரிபொருள் மற்றும் ஏற்றுமதி துறையில் வருடத்திற்கு ரு 1 லட்சம் கோடி வரியில்லா வருமானத்தை தமிழக அரசிற்கு வரும்படி உறுதிசெய்வோம். தொழில் மற்றும் உற்பத்தி துறையில் பல்வேறு துறைகளில் உலகளாவிய நிறுவனங்களோடு இணைந்து வருடத்திற்கு ரூ 2 லட்சம் கோடியை வரியில்லா வருமானமாக தமிழகத்திற்கு கொண்டு வந்து அதிமுக, திமுக அரசுகளால் ரூ 5.7 லட்சம் கோடி கடனாளியாக்கப்பட்ட தமிழகத்தின் ஒட்டுமொத்த கடனை அடைத்து முதல் 5 ஆண்டுகளில் அடைத்து, அடுத்த 5 ஆண்டுகளில் வரிக்கு நிகரான வருமானத்தை உறுதி செய்வோம்.
- இதன் மூலம் 15-20 சதவிகித பொருளாதார வளர்ச்சியை உருவாக்கி, தமிழகத்தின் ஒட்டு மொத்த பொருளாதாரத்தை $1 TRILLION (சுமார் ரூ 70-80 லட்சம் கோடி) அளவில் எட்டுவோம். தனிநபர் வருமானம் 7-10 லட்சமாக உயர்த்தி அனைத்து தரப்பு மக்களின் வளமான வாழ்க்கைக்கு உத்திரவாதம் கொடுப்போம்.
- மேற்கண்ட நடவடிக்கைகள் மூலம் 50 லட்சம் முதல் 1 கோடிப்பேருக்கு மதிப்புக்கூட்டப்பட்ட நேரடி வேலைவாய்ப்பும், மற்றும் 1 கோடிப்பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் அடுத்த 10 ஆண்டுகளில் உருவாக்கப்படும்.
- அப்துல்கலாம் கனவு கண்ட NPI - NATIONAL PROSPERITY INDEX ஐ எட்டும் வகையில் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி மேடு பள்ளம் இல்லாமல், பணக்காரர், எழை என்ற நிலமையில்லாமல் - அனைவரும் ஒருங்கிணைந்து வளர்ச்சியின் பலனை அனுபவிக்க, நேர்மையான முறையில் மக்களாட்சியை தருவோம்.

## வெண்மைப் புரட்சி - நேர்மை நேர்மை காத்தல் மற்றும் ஊழல் ஒழிப்பு

- நேர்மையான, ஊழலற்ற, விரைந்து செயல்படக்கூடிய தூய ஆட்சி முறை நிர்வாகம் அமைக்கப்படும்.
- ஊழலுக்கு வழிவகுக்கும் சட்டங்களின் ஓட்டைகளும் கண்டறிந்து ஒழிக்கப்படும். ஊழலை ஒழிக்க வெளிப்படையான கொள்கைகள், சட்டங்கள் உருவாக்கப்படும்.
- ஊழலை ஒழிக்க கிராம நிர்வாக அலுவலர் முதல் முதல்வர் வரை காகிதம் இல்லா பாதுகாப்பான, வெளிப்படையான, உடன் பதிலளிக்கும், பொறுப்பான, விரைந்து நடவடிக்கை எடுக்கும் மின்ஆளுமை அரசாட்சி திட்டம் (e-Governance) அமலாக்கப்படும்.
- ஊழல் புகார்களை தெரிவிக்க கால் சென்டர் மற்றும் நடவடிக்கை மையம் முதல்வர் அலுவலகம் முதல், மாவட்ட ஆட்சிதலைவர் அலுவலகம் வரை இணைக்கப்படும்.
- நாட்டின் எந்த மூலையில் இருந்தாலும் மக்கள் சென்னை நோக்கி தங்கள் பணிக்காக அரசின் தலைமைச்செயலகம் வரத்தேவையில்லை. எல்லாம் உங்கள் கைபேசியிலேயே, வீட்டில் இருக்கும் கணிணியில் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.
- லோக் ஆயுக்தா சட்டம் சீர்திருத்தம் செய்யப்பட்டு மீண்டும் கொண்டு வரப்படும்.
- அரசு ஊழியர்களின் பணி வயதை குறைக்க SPECIAL APPRAISAL முறை கொண்டுவரப்படும். லஞ்சம் பெறாமல் நேர்மை மற்றும் திறமையுடன், அரசுக்கு நட்டம் ஏற்படாமல் பணி புரியும் அரசு ஊழியர்களுக்கு, அவர்களது 2-5 ஆண்டுகள் பணி நீட்டிப்பு, பணி ஓய்வுக்கு பின் சிறப்பு சலுகைகள் அறிவிக்கப்படும்.
- அரசு பணியில் இலஞ்சம், ஊழலுக்காக தாமதம் செய்து, அரசு திட்டங்களை செயலிலக்க செய்து, நீதிமன்ற வழக்கை சந்திக்கும் நிலைமையை உருவாக்கும் அலுவலர்கள், அதிகாரிகள் தக்க தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்கள். அதே போல நேர்மையாக இருப்பேன் என்று சொல்லிக்கொண்டு அரசின் எந்த திட்டத்தையும் செயல்படுத்த விடாமல் செயல்படும் அதிகாரிகளும் தக்க தண்டனைக்கு உள்ளாவார்கள். அரசின் சட்ட திட்டங்களை பயன்படுத்தி நேர்மையாக செயல்படுத்தும் அதிகாரிகள், அரசு ஊழியர்கள் கௌரவிக்கப்படுவார்கள். இந்த

பழிவாங்கும் அதிகாரிகளை கண்டறிய குழு அமைக்கப்பட்டு உடனடி நீதி (ADMINISTRATIVE JUSTICE) வழங்கப்படும்.

- படித்த இளைஞர்களுக்கு வாய்ப்பு உருவாக்கி தரப்படும், அனைத்து அரசு பணிகளும் தமிழக அரசின் சமூக நீதியின் அடிப்படையில் நிரப்பபடும்.
- தரமான சேவை உரிமைச்சட்டம் (RTQOS -Right to Quality of Service) கொண்டு வரப்படும். ஒவ்வொரு சேவைக்கும் காலநிர்ணயம் செய்யப்படும், அதை கொடுக்க தவறும் பட்சத்தில் நடவடிக்கை அவர்கள் PAR - PERFORMANCE APPRIASAL REPORTல் மதிப்பெண் குறைக்கப்பட்டு, அதற்கேற்ப அவர்கள் அரசு பணிக்காலம் குறைக்கப்படும்.
- அரசு வேலையை குறித்த நேரத்தில் செய்து முடிக்க தெரியாதவர்களுக்கு மாற்று திறன் பயிற்சி அளிக்கப்பட்டு, அரசின் மற்ற துறைகளில் அவர்களது திறமைக்கேற்ற வகையில் பணிமாற்றம் செய்யப்படுவார்கள்.
- அரசு ஊழியர்கள் - லஞ்சம், ஊழலில் ஈடுபடுபவர்கள், எந்த வேலையையும் குறித்த காலத்தில் செய்யாதவர்கள், பழிவாங்கும் நோக்கில் செயல்படுபவர்கள், திறமையற்றவர்கள், மக்களுக்கு விரோதிகளாக எண்ணப்பட்டு, 3 முறை எச்சரிக்கைக்கும், பணி மாறுதலுக்கும் உள்ளாக்கப்படுவார்கள், அதிலும் திருந்தவில்லை என்றால் பணி நீக்கம் செய்யப்படுவார்கள்.
- நீதித்துறை முற்றிலும் கணிணி மயமாக்கப்பட்டு, தேங்கும் வழக்குகளை விரைந்து முடிக்க தேவையான நடவடிக்கைகள் சாத்தியமுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படும். நீதிதுறைக்கு தேவையான கட்டமைப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு அது மேம்படுத்தப்படும். வழக்கறிஞர்களின் சேம நல நிதி 2 மடங்காக உயர்த்தப்படும்.

## நீலப்புரட்சி

- தண்ணீர் புரட்சி ஒன்றே தமிழகத்தில் மறுமலர்ச்சியை உருவாக்கும்.
- நீலப்புரட்சிக்கு தனி அமைச்சகம் மற்றும் சிறப்பு பட்ஜெட் ஒதுக்கீடு செய்யப்படும்.
- அனைத்து நீர்நிலை ஆக்கிரமிப்புகளும் இரும்புக்கரம் கொண்டு அகற்றப்படும்.
- தமிழக நதிகளை இணைத்து தமிழ்நாடு அதிதிறன் நீர்வழிச்சாலையை அமைப்போம். அண்டை மாநிலங்களுடன் (ஆந்திரா, கேரளா, கர்நாடகம்) இணக்கமான சூழலை ஏற்படுத்தி அதிதிறன் நீர்வழிச்சாலை உருவாக்க முயற்சி எடுத்து வீணாக கடலுக்குச் செல்லும் 3000 TMC வெள்ள நீரை பகிர்ந்து கொள்ள முயற்சிப்போம். .
- **இந்த திட்டம் ஐந்து கட்டங்களாக நிறைவேற்றப்படும்.**
  - *முதல் கட்டத்தில் மேட்டூரும், வைகையும் 350 கி.மீ நீர் வழியால் இணைக்கப்படும்.*
  - *இரண்டாம் கட்டமாக மேட்டூரையும் பாலாறையும் 250 கி.மீ தூரத்தில் இணைக்கப்படும்*
  - *மூன்றாம் கட்டமாக 130 கி.மீ நீளத்தில் வைகையும், தாமிரபரணியும் இணைக்கப்படும்.*
  - *நான்காம் கட்டத்தில் தாமிரபரணியையும் பெருஞ்சாணியையும் இணைக்கப்படும்.*
  - *ஐந்தாம் கட்டத்தில் சமகாலத்தில் ஆறுகள், துணை ஆறுகள், ஏரிகள் இணைக்கப்படும்.*
- இந்த திட்டம் பத்தாண்டுகளில் ரூபாய் 50,000 கோடி செலவில் ஆண்டுக்கு 5,000 கோடி என்ற அளவில் கட்டி விடுவோம். தமிழ்நாடு அதிதிறன் நீர்வழிச்சாலை திட்டம் (Tamilnadu Smart Waterways Grid) இயங்கினால் ஆண்டொன்றுக்கு ரூ.5000 கோடி லாபம் கிடைக்கும். இதில் மின்சக்தி ஆதாயம் ரூ.2350 கோடி, போக்குவரத்து ஆதாயம் ரூ.1450 கோடி, குடிநீர், மீன்வளம் சுற்றுலா ஆதாயங்கள் ரூ.1200 கோடியாகும்.

- இந்த திட்டத்தினால் கூடுதலாக 2150 மெகாவாட் நீர் மின் சக்தி, 900கி.மீ நீள நீர் வழித்திட்டம் சரக்கு போக்குவரத்துக்காக பயன்படுத்தப்படும். சாலைகளோடு ஒப்பிடுகையில் நீர் வழிப்போக்குவரத்துக்கான எரிபொருள் 90 சதவிகிதம் மிச்சமாகும்.
- இந்த நீர் வழிச்சாலையில் நீர் வழி போக்குவரத்து பெருக்கப்பட்டு வியாபாரம் குறைந்த செலவில் இரு மடங்காக பெருகும்.
- பத்தாண்டுகளுக்கு மேலாக கிடப்பில் போடப்பட்டுள்ள பின்வரும் பாசன கால்வாய் திட்டங்களை நான்கு ஆண்டுகளில் செயல்பாட்டிற்கு கொண்டு வர ஆவண செய்யப்படும்.
    - அத்திக்கடவு, அவினாசி திட்டம் - வரன்முறை படுத்தப்பட்டு முழுமையாக செயல்படுத்தப்படும்
    - கோதவரி - காவேரி இணைப்பு குழாய்கள் மூலம் இணைக்கப்பட விரைந்து நடவடிக்கை எடுப்போம்.
    - தாமிரபரணி - 6 ஆறுகள் இணைப்பு
    - மேட்டூர் - எடப்பாடி - நாமக்கல் திட்டம்
    - வைகை - குண்டாறு திட்டம்
    - சென்னம்பட்டி கால்வாய் திட்டம் சீரமைக்கப்பட்டு - தோணுகால் வரை இணைக்கப்படும்.
    - உசிலம்பட்டி - 58 கிராம கால்வாய் பாசன திட்டம் சீரமைக்கப்பட்டு உண்மையாக தண்ணீர் வர நடவடிக்கை எடுக்கப்படும்.
    - கம்பிகுடி - நிலையூர் கால்வாய் திட்டம் செயல்படுத்தப்பட்டு சீரமைக்கப்பட்டு தண்ணீர் வர நடவடிக்கை எடுக்கப்படும்.
    - பாண்டியாறு - புன்னம்புழா திட்டம்
    - நந்தன் கால்வாய் திட்டம்
    - என்னேகோல்புத்தூர் பாசன திட்டம்
    - படே தலா கால்வாய் திட்டம்
    - பாலே குனி பாசன திட்டம்

- ஏரிகள், கண்மாய்கள், ஊருணிகள், குளங்கள் மற்றும் அனைத்து நீர் நிலைகளும் தூர் வாரப்படும்.
- தமிழக ஆறுகளில் தேவையான தடுப்பணைகள் கட்டுவதன் மூலம் வெள்ளநீரை வரன்முறைப்படுத்தி நீர்பாசானத்தை கண்மாய்கள்,

குளங்கள், ஏரிகள், ஊரணிகள் மூலம் நிரப்புவோம். நிலத்தடி நீரை உயர்த்தி சுத்தமான குடிநீரை தருவோம்

- 30 ஆண்டுகளாக நிறைவேற்றப்படாத நீர்ப்பாசன திட்டங்கள் விரைவில் முடித்து பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படும்.
- நீர்மேலாண்மையை கடைப்பிடித்து நீர் நிலைகளுக்கு உயிரூட்டுவோம். மழையால் வரும் தண்ணீரை வீணாக கடலில் கலக்க விடமாட்டோம், அது விவசாயத்திற்கும், குடிதண்ணீருக்கும் பயன்பட வைப்போம். அதன் அவசியத்தை மக்களுக்கு வலியுறுத்துவோம், செயல்படுத்துவோம்.
- அதிதிறன் நீர்வழிச் சாலை திட்டத்தை செயல்படுத்துவோம். ஒவ்வொரு வருடமும் வீணாகும் 50 டி.எம்.சி வெள்ள நீரை சேமித்து விவசாய உற்பத்திக்கு, வழி வகை செய்யப்படும்.
- அனைத்து நீர் வழித்தடங்கள், கால்வாய்கள், ஊரணிகள், குளங்கள், குட்டைகள், கண்மாய்கள், ஏந்தல்கள், தாங்கல்கள், மழை தண்ணீர் தேங்கும் இடங்கள், சுரங்கப்பாதைகள், கிராம ஊராட்சி தெருக்கள், வார்டுகள், நகராட்சி மற்றும் மாநகராட்சி வார்டுகளில் INJECTION BOREWELL உருவாக்கப்படும். நிலத்தடி நீரை சேமிக்கும் வகையில் 20 அடி ஆழத்தில், 20 அடி நீளத்தில், 6 அடி அகலத்தில் ஆழ்துளை கிணறுகள் தமிழகம் முழுவதும் உருவாக்கப்பட்டு, தமிழ்நாட்டின் ஒட்டு மொத்த நிலத்தடி நீர் ஆண்டுதோறும் பெய்யும் 900 மி.மீ மழையை பூமிக்கு அடியில் சேமித்து, உப்பு தண்ணீரை நல்ல தண்ணீராக மாற்றி அமைத்தும், பொது குடிதண்ணீர் டேங்க் மூலமும் - ஒவ்வொரு வீட்டிலும் குழாய் மூலம் நல்ல தண்ணீர் கிடைக்க செய்வதே இலட்சியம். இதை செய்யாமல் நல்ல குடிதண்ணீரை குழாய் மூலம் கொடுப்பதென்பது கனவு தான். இதை சாத்தியப்படுத்தி நல்ல குடிதண்ணீரை இலவசமாக ஒவ்வொரு வீட்டிற்கும் குழாய் மூலம் வழங்குவோம்.
- குளங்களை சுற்றியுள்ள வீடுகளில் வரும் மழை நீரை குளங்களில் சேமிக்கும் கட்டமைப்பு கிராமங்கள் மற்றும் நகரங்கள் தோறும் உருவாக்கப்படும்.

**நகரங்களில் ஓடும் சாக்கடைகளான நதிகள்.**

- நகரங்களில் சிக்கலில்லா பாதாள சாக்கடைத் திட்டம் மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்படும்.
- நகரத்தில் ஓடும் நதிகளில் சாக்கடை கழிவுகள் கலக்கா வண்ணம் நதிகளின் இரு கரைகளிலும் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, சாக்கடை வடிகால்கள் உருவாக்கப்பட்டு அதை சுத்திகரித்து, சுத்திகரிக்கப்பட்ட நீர் மட்டுமே ஆற்றில் கலக்கும் வண்ணம் திட்டம் செயல்படுத்தப்படும். நகரப்பகுதிகளை கடக்கும் இந்த நதிகளில் தடுப்பணைகள் கட்டப்பட்டு தண்ணீர் முகப்பு சுற்றுலா தளங்களாக மாற்றப்படும். அது கீழ்கண்ட நதிகளில், நகரங்களில் செயல்பாட்டிற்கு வரும்.
  - **சென்னை கூவம், அடையாறு, பக்கிங்காம் கால்வாய் - சாக்கடை**
  - **நொய்யலாறு - சாயக்கழிவு**
  - **கெடிலம் ஆறு - கழிவு நீர்**
  - **குண்டாறு, வைகை, வேம்பாறு, பச்சையாறு, பாலாறு**
- மனிதக்ககழிவுகளை மனிதனே அகற்றும் முறை ஒழிக்கவும், பாதாள சாக்கடைகளை சுத்தப்படுத்த பாண்டிக்கோட் ரோபட் போன்ற தொழில் நுட்பம் உடனடி செயலாக்கத்திற்கு வரும்.

## நிரந்தர பசுமை புரட்சி

வெண்மை புரட்சி மற்றும் நீலப்புரட்சி சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டால் தான் அது நிரந்தர பசுமைப் புரட்சிக்கு வழி வகுக்கும். அறிவியல் மற்றும் இயற்கை சார்ந்த நவீன வேளாண்மைக்கான அடிப்படை கொள்கைகள் உருவாகும்.

- இயற்கை வேளாண்மை திட்டம் மற்றும் அறிவியல் சார்ந்த வேளாண்மை புரட்சிக்கு வித்திடும் வகையில், கட்டமைப்பு, ஆராய்ச்சியுடன் கூடிய செயலாக்க தனி பிரிவு.
- விவசாயத்தை மையமாக வைத்து விவசாயம் சார்ந்த தொழில்துறை, உற்பத்திதுறை, சேவைத்துறை ஊக்குவிக்கப்பட்டு" பொது பொருளாதார கொள்கை" வகுக்கப்படும்.
- தரமான விதைகள், உரம், மற்றும் இடு பொருட்கள் , உயிர் உரங்கள் விவசாயத்திற்கு ஏற்ற வேளையில் குறைவின்றி, நியாயமான விலையில் கிடைக்க வழிவகை செய்யப்படும்.
- விளை நிலங்களை மறு நில பாகுபாடு செய்ய தடை விதிக்கப்படும். விவசாய நிலங்கள் எப்போதுமே விவசாயத்திற்கு மட்டுமே என்கிற நிலையை எட்ட பாடுபடுவோம்.
- சமூக பொருளாதார கூட்டுப்பண்ணை (Sustainable Socio - Economic Natural Farming) அறிமுகப்படுத்தப்பட்டு அதில் விவசாயிகள் பங்குதாரர்களாக ஆக்கப்படுவார்கள். .
- நெல் (SRI) மற்றும் கரும்பு (SSI) உற்பத்தி திறனில் வளர்ந்த நாடுகளைவிட தமிழ்நாடு திறமை வாய்ந்த நாடு. திருந்திய நெல் சாகுபடி பரப்பளவை 20 லட்சம் எக்டேருக்கு படிப்படியாக விரிவு படுத்துவோம். SSI மூலம் கரும்பு உற்பத்தியை உயர்த்துவோம்.
- எத்தனால் கொள்கையை அமல்படுத்தி - 20 முதல் 50 சதவிகிதம் வரை எத்தனாலை எமல்ஸிபிகேஷன் முறையில் வாகனம் கெடாத வகையில் உபயோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- கரும்பு டன் ஒன்றுக்கு ரூ 5000 ம் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். விவசாயிக்கு விலை நிர்ணய உரிமை பரவலாக்கப்படும்.

- பருத்தி உற்பத்திக்கென்று தனி திட்டம் உருவாக்கப்பட்டு, இன்றைக்கு 1.4 லட்சம் ஹெட்டேரில் விளையும் பருத்தி உற்பத்தியை 10 லட்சம் ஹெட்டேர் நிலத்தில் பயிரிட நடவடிக்கை எடுக்கப்படும். பி.டி காட்டன், சீட் காட்டன் போன்ற உற்பத்திதிறனை மேம்படுத்தும் அறிவியல் சார்ந்த முறையில், நீலமான பஞ்சு, நூல் உற்பத்தியாகும் ரகங்களை பயிரிட்டு, சொட்டு நீர் பாசனம் போன்றவற்றை உபயோகித்து பருத்தி உற்பத்தி மற்றும் திறன் அதிகரிக்கப்படும். அனைத்து நெசவு மில்களின் உற்பத்தி திறனை மேம்படுத்தி - டெக்ஸ்டைல், பின்னலாடை, ஆயத்த ஆடைகள் உற்பத்தி நிறுவனங்களை உலகத்தோடு போட்டி போட்டு ரூ 140 லட்சம் கோடி வர்த்தகம் உள்ள இந்த துறையில் 5 முதல் 10 சதவிகிதத்தை சந்தையை தமிழ்நாட்டின் சந்தையாக்க சிறப்பு திட்டம் அமலாக்கப்படும்.
- சிறு, குறு தானியங்கள் இயற்கை வேளாண்மை முறையில் பயிரிட்டு அதை சந்தைப்படுத்துவதற்கு ஊக்கப்படுத்தப்படும்.
- அனைத்து விவசாய பம்புசெட்களுக்கு தேவையான சூரிய மின் சக்தி இணைப்பு விலையில்லாமல் கொடுக்கப்படும்.
- விதை முதல் உலக சந்தை வரை விவசாயிகள், தொழில் துறையினர், சேவைத் துறையினர் இணைப்பு சங்கிலி கட்டமைப்பு உருவாக்கப்படும்.
- விவசாய விளை பொருட்கள் வீணாகாமல் சேமிக்க சைலோஸ் (SILOs) என்ற தானிய கிடங்குகள் நவீன முறையில் விவசாயத்திற்கு ஏற்படுத்தப்படும். முறையான குளிர்பதன சேமிப்பரங்கங்கள் எல்லா மாவட்டங்களிலும் அரசு அமைத்துக்கொடுத்து விவசாயிகள் நல்ல விலையில் விற்பனை செய்வதற்கு வழிவகை அமைத்து தரப்படும்.
- விவசாய உற்பத்தி பொருள்கள் வீணாகாமல் பதப்படுத்தி, மதிப்பு கூட்டும் தொழிற் சாலைகள் மாவட்டம் தோறும் அமைத்து, ஏற்றுமதி நிறுவனங்கள் உருவாக்கப்படும்.
- விவசாய உற்பத்தி பொருள்களான பழங்கள், காய் கனிகள், எண்ணெய் வித்துக்கள், சிறுதானியப் பயிர்கள், தென்னை இளநீர், பனை, நொங்கு, பதனீர், மீன்கள் மற்றும் இறைச்சி மதிப்பு கூட்டும் தொழிற் சாலைகள் மாவட்டம் தோறும்

அமைக்கப்படும், அதை பதப்படுத்தப்படும் தொழிற்சாலைகள் அமைக்கப்படும், ஏற்றுமதி நிறுவனங்கள் உருவாக்கப்படும்.

- இந்த மண்ணின் மருத்துவம் விஞ்ஞான முறையில் மேம்படுத்தப்படும். மூலிகைகள் வளர்ச்சி, பாதுகாப்பு, மேம்பாடு, மற்றும் ஆராய்ச்சி மருத்துவத்திட்டம் வகுத்து பரம்பரை சித்தர்கள் மூலம் வந்த சித்த மருந்து, ஆயுர்வேத மருத்துவம், அதை அறிவியல் சார்ந்து அறிவியல் முறையில் வியாதிக்கு ஏற்ற மருந்தாக உருவாக்கத்திற்கு ஏற்ற ஆராய்ச்சிக்கு முதலீடு செய்யப்படும்.
- மரபணு மாற்றப்பட்ட பயிர் (GM Crops) தமிழ்நாடு விவசாய பல்கலைகழக ஆராய்ச்சி மூலம் உருவாக்கப்படும். இதன் மூலம் விவசாயத்தை பூச்சி கொல்லி மருந்து உபயோகத்திலிருந்து, பயிரையும் மனித உயிரையும் காப்போம். பூச்சிக்கொல்லி மருந்து கம்பெனிகள் முன்னெடுக்கும் தவறான பிரச்சாரத்தை முறியடித்து, விவாசாயிகளின் அச்சம் போக்கப்பட்ட பிறகு நமது வேளாண் விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி ஊக்குவிக்கப்பட்டு, விவாசயப்பொருள்களின் உற்பத்தி திறன் மேம்பட நடவடிக்கை எடுக்கப்படும். நம் நாட்டின் மரபணு மாற்ற அறிவியல் ஆராய்ச்சியை தடை செய்து பன்நாட்டின் கார்ப்பரேட்டுகளுக்கு துணையாக இருக்கும் RSS ன் துணை அமைப்பு எதிர்ப்பதாலும், காங்கிரஸ், பி.ஜே.பி அரசுகள் இதை தடை செய்வதாலும் ஒரு உண்மை விளங்கும்,. இது நடைமுறைக்கு வந்தால், பூச்சி கொல்லி மற்றும் இராசாயண உரக்கம்பெனிகளின் ஆதிக்கம் குறையும், விவசாயிகள் வளம் பெறுவார்கள்.
- தமிழ்நாட்டுக்கு தேவையான உணவு உற்பத்தி அரிசி 15%, உணவு எண்ணெய் 60%, பருப்பு 50%, பருத்தி 90%, உற்பத்தி பற்றாக்குறையினால் வெளிமாநிலங்களில் இருந்தும், மத்திய தொகுப்பில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் வாங்கும் அவல நிலை நிலவுகிறது. இந்தியா உணவு உற்பத்தியில் தன்னிறைவடைந்த நிலையில், இதை உற்பத்தி செய்ய வாய்ப்பிருந்தும், அடுத்த மாநிலத்தை, நாட்டை நம்பி தமிழகத்தை

வைத்திருக்கும் நிலையை மாற்ற உணவுப்பாதுகாப்பு திட்டம் பூரணமாக அமல்படுத்தப்படும்.

- இயற்கை முறையில் பருத்தி உற்பத்தி பெருக்க சிறப்பு திட்டம். இயற்கை முறை காய்கறிகள், பழங்கள், பூக்கள் மற்றும் வீட்டுத்தோட்டம், ஹைரோபோனிக் முறையில் செய்யப்படும் விவசாயம் ஊக்குவிப்பு. இயற்கை வேளாண்மை அங்காடிகள் கிராமம் முதல் நகரம் வரை.
- இவை அனைத்தையும் உருவாக்கும் அடிப்படை கட்டமைப்புகளை அரசு செய்து தரும். ஆனால் இந்த தொழிலை விவசாயிகளும், இளைஞர்களும் உலக சந்தையில் போட்டி போடும் விதத்தில் செய்ய ஆக்கமும், ஊக்கமும் கொடுக்கப்படும்.
- தொழில்துறை, உற்பத்தித் துறை மற்றும் சேவைத்துறைகளை ஒருங்கிணைத்து முறைப்படுத்திய வேளாண்மைப் பொருளாதாரம் காண்பதே நிரந்தர பசுமைப் புரட்சியை உருவாக்கும்.

**விவசாயக்கடன்**

தமிழக விவசாயக்கடன் அடைத்தால் அவர்களுக்கு வட்டி 4 சதவிகிதம் மட்டுமே. ஆனால் சரியான விளைச்சல் இல்லை. ஒரு போகம் கூட விளைச்சல் சரியாக இல்லை. எனவே விவசாயக்கடன் தள்ளுபடி என்ற கோரிக்கை நியாயமான கோரிக்கை. ஆனால் தமிழநாட்டை 5.70 லட்சம் கோடி கடனில் தத்தளிக்க விட்ட அரசு எப்படி அதை தள்ளுபடி செய்யும். ஆனால் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் வாங்கிய ரூ 12,000 கோடி உடனே தள்ளுபடி செய்வோம் என்று முதல்வர் அறிவித்து விட்டார். இதில் பெரும்பாலும் பயன் அடைவது ஆளும் கட்சியை சேர்ந்த விவசாயிகள் தான், அனைத்து தரப்பு விவசாயிகள் அல்ல.

விவசாயிகளுக்கு நதிகளை இணைத்து, எரி குளங்களை தூர்வாரி, மழைநீரையும், வெள்ள நீரையும் சேமித்து அவர்களது விவசாய விளைச்சலை 2 போகமாவது வெற்றிகரமாக விளைவித்து, அவர்கள் உற்பத்தி பொருள்களை, அவர்களே விலை நிர்ணயம் பண்ணும் உரிமையை ஏற்படுத்தி கொடுக்கும் வரை - கடன் வசூல் நிறுத்தம், அதுவரை வட்டி தள்ளுபடி. - இது சாத்தியம். இதற்கு

மேல் விவசாய பொருளாதார வளர்ச்சியை உருவாக்கி விவசாயிகளின் வாழ்வாதாரம் உயர்ந்தால், விவசாய கடன் தள்ளுபடி பண்ண வேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் கடனை கட்டியபின் லாபம் உருவாக்கி கொடுப்பதே எங்கள் இலட்சியம். ஆனால் இதை செய்வதற்கு 3 ஆண்டுகள் ஆகும். இதை செய்ய முடியும் என்ற நம்பிக்கை கொண்ட நாங்கள் ஆட்சிக்கு வந்தால், அனைத்து வங்கிகளிலும் உள்ள சிறு, குறு விவசாயிகளின் கடனை தள்ளுபடி செய்வோம். அடுத்த முறை கடனை கட்டும் வகையில் விவசாயிகளை உருவாக்குவோம்.

## மலைகளில், காடுகளில், நீர் நிலைகளில் மரம் வளர்ப்பு சிறப்பு திட்டம்

- Forest Cover of the State is 26,364 sq.km which is **20.27%** of the State's geographical area. In terms of forest canopy density classes, the State has 3,605 sq.km (2.77 % of GA) very dense forest, 11,030 sq.km (8.48% of GA) moderately dense forest and open forest and 11,729 sq.km (9.02 % of GA) respectively.
- மலைகளில் மரம் வளர்த்தால் மழை வரும், மலைகளில் மரம் அடர்த்தியாக வளர்க்க சிறப்பு திட்டம் செயல்படுத்தப்படும்.
- காடுகள், மலைகள், ஏரிகள், குளங்கள், ஆற்றங்கரையோரங்கள், வனங்கள் போன்றவற்றில் மரத்தின் அடர்த்தியை கூட்டுவதற்கு கொள்கை வகுக்கப்பட்டு, வளம் கொடுக்கும், நிழல் கொடுக்கும் மரங்கள் நட்டு, வளர்த்து, பாதுகாக்கப்படும்.
- அடர்வனம் மற்றும் காடுகள் வளர்ப்பு திட்டத்தின் கூடுதலாக கீழ் 5000 சதுர கி.மீ காடுகள் (VDF/MDF/OF) வளர்க்கும் சிறப்பு திட்டம் செயல்பாட்டிற்கு வரும்.

## சமூக பொருளாதார மேம்பாட்டுக்கு தேவையான சிறப்பு மரம் வளர்ப்பு திட்டம் செயல் படுத்தப்படும்.

## சந்தன மரம், செம்மரம் வளர்க்க சிறப்புத்திட்டம்.

கீழ்க்கண்ட மாவட்டங்களில் சமூக நல காடுகள், வீடுகளில் நட்டு வளர்த்து பின் அரசின் அனுமதியோடு விற்க பொருளாதார மேம்பாட்டு சிறப்பு திட்டம் செயல்படுத்தப்படும்

| சந்தனமரம் | செம்மரம் |
|---|---|
| கோவை, ஈரோடு, சேலம், தர்மபுரி | செங்கல்பட்டு, வேலூர், திருவள்ளூர், சேலம், கோயம்புத்தூர் |

விவசாய மேம்பாட்டிற்காக விவசாய அமைச்சகத்தின் கீழ், கீழ்க்கண்ட துறைகள் ஒருங்கிணைக்கப்படும்.

- அணைகளின் தண்ணீர் மேலாண்மை, நீர் திறப்பு, அடைப்பு, நதிநீர் மேலாண்மை கால்வாய் மேலாண்மை.
- விதை மற்றும் இடுபொருட்கள் கொள்முதல், விவசாய உற்பத்தி
- தமிழ்நாடு சிவில் சப்ளை கார்பரேசன்
- விவசாய உற்பத்தி பொருட்கள் கொள்முதல்
- விவசாய சிறப்பு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கவுன்சில்.

**மதிப்புக் கூட்டப்பட்ட வேலை வாய்ப்பு**

- விவசாயம் படித்த மற்றும் அனைத்து துறை சார்ந்த மாணவர்களுக்கும் அவர்கள் படித்த முக்கிய அடிப்படைத் துறையிலேயே மதிப்புக் கூட்டப்பட்ட வேலை வாய்ப்பு வழங்கப்படும்.
- கல்வியில் இடை நின்ற இளைஞர்களுக்கு பயிற்சியளித்து அவர்களுக்கு மதிப்புக் கூட்டப்பட்ட வேலை வாய்ப்பு வழங்கப்படும்.விவசாயம் அது சார்ந்த தொழில்கள் உற்பத்தி மற்றும் சேவை துறைகளில் வேலை வாய்ப்புகள்உருவாக்கப்படும்.
- விவசாயம் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட உணவு உற்பத்தி தொழில், விவசாயம் சார்ந்த தொழில், விவசாயம் சார்ந்த உற்பத்தி தொழில், விவசாயம் சார்ந்த சேவைத்துறையில் ரூ 1 லட்சம் கோடி முதலீடு ஈர்க்கப்படும், இதன் மூலம் 45 லட்சம் பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும், 65 லட்சம் பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் உருவாக்கப்படும்.

- இனிமேல் விவசாய நிலங்களை அரசு வாங்கி தொழில் துறையினருக்கு கொடுப்பது தடுக்கப்படும். இந்த காலகட்டத்தில் எந்த ஒரு தொழிலுக்கும் சுயவாழ்வு குறைவு என்ற காரணத்தால், விவசாய நிலங்களை தொழிலுக்கு பங்குதார்களாக மட்டுமே சேர்க்க முடியும். தொழிற்சாலைகளுக்காக வாங்கவோ, விற்கவோ, குத்தகைக்கோ விடுவது தடை செய்யப்படும். தொழிலில் இருந்து வருமானம், பங்குத்தொகை விவசாயிகளுக்கு வருடா வருடம் அவர்கள் பங்கிற்கேற்ப பிரித்து கொடுக்கப்படும்.

## தமிழ் மொழி வளர்ச்சி

- எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்பது கட்டாயமாக்கப்படும். தமிழ் மொழி ஆட்சி மொழி, அறிவியல் மொழி, தொழில் நுட்ப மொழி, ஆராய்ச்சி மொழி, சட்ட மொழி, அன்றாட பயன்பாட்டு மற்றும் அரசு மொழியாக்குவோம்.
- இரு மொழிக்கொள்கை தொடரும்.
- தமிழில் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படும். தமிழ்மொழி மூலம் உலகம் சந்திக்கும் பிரச்சனைகளுக்கு அறிவுசார் தீர்வுகாண ஆராய்ச்சி கல்வி மூலம் கட்டமைக்கப்பட்டு ஆக்கபூர்வ நடவடிக்கை எடுக்கப்படும்
- தமிழ் பண்பாடு, நாகரீகம், கலாச்சாரம், வரலாறு போற்றி பாதுகாக்கப்படும், வளர்க்கப்படும், மேம்படுத்தப்படும்.
- தமிழ் மொழியை - அறிவியல், தொழில் நுட்பம், மருத்துவம், சட்டம் போன்ற மேல் படிப்புக்கான மொழியாக, ஆராய்ச்சி மொழியாக மாற்றம் செய்து, அதை படிப்படியாக அம ல்படுத்துவோம். அதே நேரத்தில் உயர்கல்வியில் தமிழில் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படும்.
- தமிழ்வழி கல்வி மற்றும் ஆராய்ச்சி மூலம் அறிவு சார்ந்த கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்போம்.
- சீனா, ஜெர்மனி, ரஷ்யா போன்ற நாடுகள் தங்கள் மொழியில் பள்ளி படிப்பு முதல் ஆராய்ச்சி படிப்பு வரை கற்று அறிவியல் ஆராய்ச்சியில் சாதனை படைக்கும் போது, சொந்த தாய் மொழி தமிழ் மொழியால் படிக்கவும், கற்பனை செய்யவும், சிந்திக்கவும் செய்தால்தான், புது வித கண்டுபிடிப்புகள், உலகை வெல்லும் அறிவு சார்ந்த கண்டுபிடிப்புகள் சாத்தியம். அது தான் தமிழகத்தை உலக நாடுகளோடு போட்டி போட வைக்கும் அடிப்படை வாய்ப்பை உருவாக்கும், தமிழகத்தை அறிவார்ந்த நாடாக உருமாற்றும்.
- எனவே தமிழ் மொழியை தேர்வு நிலை பாடமாக உயர் கல்விக்கு கணக்கீடு செய்யப்படும்.

- மாநிலங்களின் மொழியையே அதிகாரபூர்வ மொழியாக ஒவ்வொரு மாநிலத்திலும் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
- வெவ்வேறு மொழி பேசும் மக்களிடம் ஒற்றுமையையும், ஒருங்கிணைந்து வலிமையாகச் செயல்படும் உணர்வையும் உருவாக்க, மொழிவாரி மாநிலங்களின் மொழியையே அந்த மாநிலத்தின் அதிகாரபூர்வ மொழியாக அறிவிப்பதற்குத் தேவையான அரசியல் சட்டத்திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
- நீண்ட காலமாக ஆங்கில மொழி நம் பயன்பாட்டில் வேரூன்றி இருப்பதைக் கருத்தில் கொண்டு மொழிவாரி மாநிலங்களுக்கிடையிலும், மத்திய மாநில அரசுகளுக்கிடையிலும், ஆங்கிலத்தைத் தகவல் பரிமாற்ற மொழியாகத் தொடரும்.
- ஆங்கில மொழி அறிவு, பேச்சுத்திறன், எழுத்து திறன், வாதாடும் திறன், அனைத்து அரசு பள்ளிகளில் 8ம் வகுப்புக்குள் பெறும் வகையில் புது வித ஆங்கில மொழி பாட திட்டம் அறிமுகப்படுத்தப்படும். 8 ம் வகுப்பு முடித்து வெளியே வரும் அரசு பள்ளி மாணவர்கள் சரளமாக ஆங்கிலம் பேச முடியும் என்ற நிலை வரும்.
- இந்தி, கன்னடம், மளையாளம், தெலுங்கு, மாராட்டி, ஒடிஸா போன்ற மொழி வழி மக்கள் தங்கள் மொழியை விருப்ப பாடமாக எடுத்து படிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- அனைத்து மக்களுக்கும் சமமான வாய்ப்புகளை ஏற்படுத்தி பரஸ்பர ஒத்துழைப்பு, விட்டுகொடுத்தல், கொள்கையினை ஏற்படுத்தி அதன் மூலம் அரசியல், பொருளாதார, சமுக துறைகளின் நீடித்த வளர்ச்சியினை ஏற்படுத்த தீவிர முயற்சி எடுக்கப்படும்.

## கிராமப்புற சுயசார்பிற்கும், மறுமலர்ச்சிக்கும் அப்துல் கலாமின் இலட்சிய புரா திட்டம்

- கிராமப்புற மறுமலர்ச்சிக்கு அப்துல் கலாமின் புரா திட்டம். (PURA - Providing Urban Amenities in Rural Areas) உருவாக்கப்படும்.
- புரா திட்டத்தில் (பெரு நிறுவன சமூக பொறுப்பு) தொழில் தொடங்குவோருக்கு வரிச்சலுகையும், CSR மூலம் சேவைகள் செய்வோருக்கு சலுகைகள் கொடுக்கப்படும்.
- 30 முதல் 50 கிராமங்களை இணைத்து 234 புரா கிராம குழுமங்கள் உருவாக்கப்படும். நீடித்த, நிலையான வளர்ச்சி, வேலை வாய்ப்புடன் கூடிய வருமானம். தூய்மையான, பசுமை கிராமங்கள் உருவாக்கப்படும். ஒவ்வொரு கிராமமும் புரா திட்ட குழுமங்களுக்கு கீழ் கொண்டு வரப்படும்.
- கிராம குழுமங்களில் இருக்கும் இளைஞர்கள், சுய உதவிக்குழுக்களை வைத்து இலாப நோக்கமற்ற சமூக நிறுவனம் தோற்றுவிக்கப்படும். அது கிராம பஞ்சாயத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு 75:25 விகிதத்தில் லாபத்தை சமூக நிறுவனமும், கிராம பஞ்சாயத்தும் பங்கீடு செய்து வேலை வாய்ப்பையும், கிராம வளர்ச்சிக்கு உதவும் வகையிலும் செயல்படுத்தப்படும்.
- சிக்கலில்லா நவீன சாக்கடை, மழைநீர் வடிகால், மின்சாரம் மற்றும் கேபிள் இணைப்புகள் அனைத்தும் சர்வதேச தரத்திற்கு நவீனமயமாக்கப்படும். அதன் பின் கிராமங்கள் தோறும் பிளாஸ்டிக் ரோடு போடப்படும்.
- அப்துல் கலாமின் புரா கனவு திட்டங்களை (Physical, Electronic, Knowledge and Economic Connectivity) புரா குழுமத்தில் நிறைவேற்றுவதின் மூலம், கிராம பஞ்சாயத்தில் மாதம் தோறும் ரூ 3 லட்சம் முதல் 5 லட்சம் வரை புதிய வருமானம் பெற வழி வகை செய்யப்படும். கீழ்கண்ட திட்டங்கள் அரசு மற்றும் தனியார் துறையின் சமூக கடமை உதவியுடன் நிறைவேற்றப்படும்.
- சாக்கடையும், கழிவு நீரும் கிராம ஊரணியில் கலப்பது தடுக்கப்பட்டு இயற்கை முறையில் சுத்திகரிக்கப்படும். மழைநீர் சேகரிப்பு மையப்படுத்தப்பட்டு ஊரணியில் சேமிக்கப்படும்.

ஊரணிகள், குளங்கள் ஏரிகள் பாதுகாப்பு சுவர்கள் மூலம் பாதுகாக்கப்படும். அதைச் சுற்றி மரங்கள் நட்டு பாதுகாக்கப்படும்.

- ஒவ்வொரு கிராமத்திற்கும் 20,000 முதல் 50,000 லிட்டர் சுத்தமான குடி தண்ணீர் சவ்வூடு பரவல் மூலம் உற்பத்தி செய்யப்படும். இத்திட்டத்தின் மூலம் கிராம பஞ்சாயத்திற்கு மாதம் தோறும் ரூ 1,20,000 வரை வருமானமும், ஒரு கிராமத்திற்கு 10 பேருக்கு வேலைவாய்ப்பும் உருவாகும்.
- கழிவறை கழிவுகள் மையப்பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டு பயோ டைஜஸ்டர் முறையில் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும். குறைந்தது 1000 வீடுகளை கொண்ட கிராமத்தில் இது முதல் கட்டமாக நடைமுறைக்கு வரும். இதன்மூலம் 50 கி.வாட் முதல் 100 கி.வாட் வரை பயோ எரிசக்தி மின்சாரம் உற்பத்தி செய்யப்படும்.
- குப்பையை பிரித்து திட மற்றும் திரவ பொருள்கள் மேலாண்மை திட்டம் (SLRM) மூலம் சுத்தமான கிராமம் மற்றும் நிரந்தர வருமானத்திற்கு வகை செய்யப்படும்.
- SLRM திட்டத்தின் மூலம் கிராம பஞ்சாயத்திற்கு மாதம் தோறும் ரூ 9 லட்சம் வரை வருமானமும், ஒரு பஞ்சாயத்திற்கு 10 பேருக்கு வேலைவாய்ப்பு உருவாகும்.
- சீமைக்கருவேல மரம் மற்றும் இலை, தழை மற்றும் பயோமாஸ் பொருள்கள் மூலம் 0.5 மெ.வாட் முதல் 1 மெ.வாட் வரை மின்சாரம் உற்பத்தி செய்யப்படும்.
- தெருக்களுக்கும், கிராமப்புற வீடுகளுக்கும், விவசாயத்திற்கும் அரசு செலவில் சூரிய ஒளி மின்சாரம் கொடுக்கப்படும்.
- கிராமப்புற விவசாய உற்பத்தி பொருள்களுக்கு ஏற்றுமதி பொருளாதார மண்டலங்கள் அமைத்து பயிற்சி மையங்கள் உருவாக்கப்படும்.அறிவுசார் மையங்கள் ஏற்படுத்தப்படும் - இதன் மூலம் அரசிற்கும், மக்களுக்கும் நேரடி தொடர்பு நடைமுறைக்கு வரும்.
- தொலைத்தொடர்பு மருத்துவ வசதி அனைத்து கிராமங்களுக்கும் ஏற்படுத்தப்படும்.

- கிராமப்புறத்திலே விளைவிக்கப்படும் விவசாய உற்பத்தி பொருள்கள் -

  பனை, தென்னை, வாழை, சணல், மூங்கில், மண்பாண்டங்கள், டெர க்கோட்டா

  சிற்பங்கள், சிலைகள், செங்கல், ஒடு, கைத்தறிநெசவு, கைவினைப்

  பொருள்கள், பால் பழங்கள், காய்கறிகள் மற்ற அனைத்து கைவினை பொருள்களையும் சர்வ தேசத்திலும் போட்டியிடும் தொழில்நுட்பத்தால் மதிப்பு கூட்டி, அதை விற்கும் விற்பனை மையங்கள், மற்றும் ஏற்றுமதி பொருளாதார மண்டலங்கள் ஒவ்வொரு புரா குழுமத்திலும் நிறுவப்படும். இதற்கு தனித்திறன் பயிற்சி மையங்கள் உருவாக்கப்படும்.
- இதன் மூலம் கிராமப்புறத்திலே வேலை வாய்ப்பை எதிர் நோக்கி இருக்கும் அத்துணை பேர்களுக்கும் வேலை வாய்ப்பு. கிராமத்தில் வாழும் ஒவ்வொரு குடும்பத்தின் தலைவியான **மகளிரின் மாத வருமானத்தை ரூ 20,000 முதல் ரூ 30,000 வருமானம்** பெறும் வகையில் புரா திட்டங்கள் செயல்படுத்தப்படும்.
- இந்த புரா திட்டங்கள், பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகளிலும் செயல்படுத்தப்படும் - இளைஞர்களுக்கும், மக்களுக்கும் வேலைவாய்ப்பையும், நிரந்தர தொடர்ந்த வருமானத்தையும் உறுதிப்படுத்துவோம். அது மட்டுமல்ல, இது வரை வரி வருமானத்தை மட்டுமே நம்பி இருந்த இந்த கிராம, நகர, மாநகர பஞ்சாயத்து அமைப்புகள் வருமானம் உருவாக்கும் அமைப்புகளாக மாற்றப்படும்.
- ஒவ்வொரு கிராம பஞ்சாயத்திலும் சமூக நீதியை உறுதிசெய்ய வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மக்களுக்கு 100 வீடுகளைக் கொண்ட ஒரு நவீன பசுமை குடியிருப்பு வளாகம் கட்டப்படும். அங்கே 1 முதல் 7 வயது வரை உள்ள கற்கும் இளம்கல்வி பள்ளி ஏற்படுத்தப்படும், சகல வசதிகளோடு விளையாட்டு மைதானம் ஏற்படுத்தப்படும். அங்கே ஒரு திருமண மண்டபமும் கட்டித்தரப்படும்.
- ரேஷன் கடைகளை நவீனமாக்கி மின் ஆளுமையில் சூப்பர் மார்கெட் பல்பொருள் அங்காடிகளாக மாற்றப்படும். ரேஷன்

அட்டைதாரர்களுக்கு சுமார்ட் ரேஷன் கார்டு வழங்கப்படும். நடுத்தர மக்களுக்கு சந்தை விலையை விட குறைவான விலையில் தரமான பொருட்கள் சுமார்ட் கார்டு மூலம் விற்கப்படும். தேவையானவற்றை மக்கள் அலைபேசி மூலம் வீட்டுக்கு ஆர்டர் செய்தால், வீட்டிலேயே அந்த பொருள்கள் டெலிவரி செய்யப்படும். இது அனைத்து மக்களுக்கும் பொருந்தும்.

- அரசு வழங்கும் ரேசன் பொருட்கள் குடும்பத்திற்கு தனித்தனியாக சரியான எடையில் பாக்கெட்களில் அடைத்து வழங்கப்படும்.

## செழுமைக் கோடு :

வறுமைக்கோட்டிற்கு கீழே இருக்கும் மக்களை செழுமைக்கோட்டிற்கு கொண்டு வரும் முதல் அரசாக எங்கள் அரசு செயல்படும். ஒவ்வொரு குடிமகனின் அறிவும், திறனும் சரிவர வெளிக் கொண்டுவரப்பட்டு அதற்கு ஏற்ற வகையிலான திட்டங்கள் அமைக்கப்படும்.

## ஒன்றியம், பேரூராட்சி, நகராட்சிகளில்

- ஒரு நவீன ஸாப்பிங் மால், அதாவது புரா வணிக மற்றும் ஏற்றுமதி வளாகம் கட்டப்படும்அதோடு ஒரு திருமண மண்டபமும் கட்டப்படும்.
- 300 சீட் கொண்ட iMax தியேட்டர் - சினிமா மற்றும் தனித்திறன் கல்வி பயிற்சிக்கு கட்டப்படும். அது தமிழகம் முழுவதும் மின்அணு முறையில் இணைக்கப்பட்டு, புரா கல்வி - மற்றும் பொழுதுபோக்கு நெட்ஒர்க் ஏற்படுத்தப்படும்.
- பல்கலைக்கழகங்கள், மற்றும் தொழில் நுட்ப கல்வி, மருத்துவ கல்வி மற்றும் தனித்திறன் மேம்பாட்டு பயிற்சி மையங்கள் (Cloud Computing) மேக கணிணி செயல்பாட்டு மையம் மூலம் செயல்படும் .மாணவர்கள் இதில் இணைந்து கல்வி மற்றும் தனித்திறன் பயிற்சி, வேலைவாய்ப்பிற்கான பயிற்சி, போட்டித்தேர்வுகளுக்கான பயிற்சி, மேல்பட்ட படிப்பிற்கான பயிற்சி போன்றவைகளை கற்றுக்கொள்ள முடியும்.
- அதே நேரத்தில் இரவில் சினிமா ஒளிபரப்பு சென்னையில் இருந்து நேரடி ஒளிபரப்பு வீட்டிற்கு கண்ணாடி கம்பி வழி இணைப்பு (பைபர்-டூ-கோம் - FTH) மூலம், புதுவித தொழில் நுட்பத்தில், பாதுகாப்பான களவாடாத முறையில் ஏற்படுத்தப்பட்ட தொழில் நுட்பத்தில் செயல்படுத்தப்படும்.
- அனைத்து கிராம, நகர, மாநகர பஞ்சாயத்துக்களில் பைபர் கேபிள் கட்டமைப்புகள் மற்றும் வை-பை (Wi--fi) இணைய தள வசதி ஏற்படுத்தப்பட்டு, அதன் மூலம் வீடுகள், பள்ளிகள் மற்றும் விற்பனை வளாகங்களுக்கு எலக்ட்ரானிக் இணைப்பு பரவலாக்கப்படும்.

- அது மட்டுமல்ல கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் பசுமையான, தூய்மையான, சுத்தமான குடிநீர் கிடைக்கும், அமைதியான, நீடித்த, நிலையான வளர்ச்சி பெறும் கிராமமாக மாறும். அப்துல் கலாமின் கனவான கார்பன் நியூட்ரல் கிராமங்கள், நகரங்கள் உருவாக்கப்படும். முதல் முயற்சியாக இது வடிவம் பெறும்.

## கல்விக்கொள்கை

- கல்வித்தர மேம்பாட்டுக்கு தமிழக ஒட்டு மொத்த பொருளாதார உற்பத்தி மதிப்பில் 6% (GSDP) ஒதுக்கப்படும்.
- கல்வியை மாநில பட்டியலுக்கு கொண்டுவரும் வகையில் அரசியல், சட்ட நடவடிக்கைகள், கொள்கை கூட்டணிகள் மூலம் முன்னுரிமையளித்து நடவடிக்கை எடுக்கப்படும்.
- தமிழ்நாட்டை அறிவார்ந்த நாடாக உலகத்தின் வளர்ந்த நாடுகளுடன் போட்டிபோடும் வகையில் மாற்ற தேவையான கல்வியை அடிப்படைக் கொள்கையாக கொண்டு, தமிழ்நாட்டை உலக பொருளாதரத்தின் பன்முகத் தன்மையோடு போட்டி போட்டு வெற்றி பெறும் மனித வளத்தை உருவாக்குவோம் வகையிலும் கல்விக்கொள்கை வகுக்கப்படும்..
- தரமான கல்வியை அரசு பள்ளியிலும், கல்லூரியிலும் அரசு கொடுத்தால் தனியார் கல்விக்கு ஏன் போட்டி? மக்களுக்கு ஏன் செலவு? இதை உடனடியாக மாற்றுவோம்.
- அனைவருக்கும் தரமான இலவச கல்வி இலட்சியம் அதை தமிழ்நாட்டின் கடனை அடைத்த பிறகு தான் படிப்படியாக அந்த இலக்கு அடுத்த 10 ஆண்டுகளில் நிறைவேற்றப்படும்.
- அரசின் இலவச கல்வியை தரமான கல்வியாக மாற்றி அரசு பள்ளியிலேயே தமிழகம் முழுவதும், ஒரே மாதிரியாக தொழில் நுட்ப உதவியுடன் உலக தரத்துடன் கூடிய செயல்திட்டக் கொள்கை வகுப்போம்.
- தமிழர் வரலாறு, பண்பாடு, கலாச்சாரம், நாகரீகம், இலக்கண, இலக்கியங்கள், திருக்குறள் முதல் அனைத்து தமிழ் நன்நெறி நூல்கள், அதை உருவாக்கியவர்களின் வரலாறு, நாட்டு நலனுக்குத் தங்களை முற்றாக அர்ப்பணித்த தலைவர்களின் வாழ்க்கை வரலாறு பள்ளி பாடத்தில் சேர்க்கப்படும். பல்வேறு துறைகளில் தமிழர்களின் வெற்றி வரலாறு பள்ளிப்பாடங்களில் சேர்க்கப்படும்.
- சென்னையில் டாக்டர் கலாம் அறிவுசார் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் மற்றும் டிஜிட்டல் நூலகம் அமைக்கப்படும்
- பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் - தங்களை சர்வ தேச தரத்துடன்கூடிய கட்டமைப்போடு தகுதிப்படுத்திக்கொள்ள

தேவையான கற்றல், பயிற்சி, ஆராய்ச்சி, சர்வ தேச தகுதித் சான்றிதழ் பெற்று மேம்பாடு அடைய தேவையான சீர்திருத்த கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்படும்.

- இலவசமான அரசுக்கல்வியை தரமான அரசுக் கல்வியாக மாற்றி, மக்கள் விரும்பும் கல்வியாக மாற்றி அமைக்கப்படும். மக்கள் குழந்தைகளை அரசுப்பள்ளியில் போட்டி போட்டு சேர்க்கும் விதமாக தொழில்நுட்பத்தின் உதவி கொண்டு மாற்றி அமைக்கப்படும்..
- மனப்பாட கல்வியை அகற்றி, CBSE பாடத்திட்டம் மற்றும் சர்வ தேச பாடத்திட்டங்களின் மேம்பட்ட கற்றல் வழிமுறைகளை அடிப்படையாக கொண்டு நமது தமிழகத்தின் கல்விக்கொள்கைக்கு ஏற்ற அடித்தளத்தோடு, இந்தியாவின் பன்முகத்தன்மையையும் பிரதிபலிக்கும் வண்ணம், அடிப்படை அறிவியலை உணர்ந்து ஆராய்ந்து, கற்பனையின் சக்தி கொண்டு புது கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் கல்விமுறை உருவாக்கப்படும்.
- தமிழ்நாட்டின் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும், நாகரீகத்தையும், வரலாற்றையும், தமிழ் இலக்கியத்தையும், இலக்கணங்களையும், திருக்குறளையும், பாரதியையும், பாரதிதாசனையும் மற்ற தமிழ் சான்றோர்கள், கவிஞர்களையும் படித்து தமிழின் பெருமையை உணரும் வகையிலும் பாடத்திட்டங்கள் மாற்றி அமைக்கப்படும்.
- யாதும் ஊரே. யாவரும் கேளிர் - என்ற பண்பாட்டை மதிக்கும் வகையில் மற்ற மாநிலத்தவரையும், அடுத்தநாட்டவரையும், அவர்தம் கலையையும், கலாச்சாரத்தையும் போற்றும் வகையிலும் பாடத்திட்டங்கள் தேர்ந்தெடுத்து கற்றல் பளு இல்லாத வகையில் அறிமுகப்படுத்தப்படும். .
- ஆசிரியர்களுக்கு சர்வ தேச தரத்தில், சர்வதேச கற்பித்தல் முறையில் சிறப்பு பயிற்சி கொடுக்கப்படும். சிறப்பாக

பணியாற்றி, மாணவர்களுக்கு முன்னுதாரணமாக விளங்கும் ஆசிரியர்களுக்கு சிறப்பு ஊக்கத்தொகை வழங்கப்படும்.

- ஆசிரியர் பணியை அறப்பணியாக்கி, ஆசிரியர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். ஆசிரியர்களுக்கு டாக்டர்கள், வக்கீல்கள் போன்று சிறப்பு சீருடை கொடுத்து தனி மரியாதை ஏற்படுத்தப்படும்.
- ஆசிரியர்களுக்கு இப்போது இருக்கும் சம்பந்தமில்லாத வேலைப்பளு முற்றிலுமாக அகற்றப்படும். ஆசிரியர்கள் ஆசிரியப்பணி மட்டும் பார்த்தால் போதும்.
- மத்திய அரசுக்கு இணையான ஊதியம் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும். ஆசிரியர்கள் கணவனும், மனைவியும் ஒரே இடத்தில் இருக்க வழி வகை செய்யப்படும். பணிமாற்றம் நேர்மையாக வெளிப்படையாக நடைபெறும்.
- ஆசிரியர்கள் தங்களது தனித்திறமைகளை வளர்த்துக்கொள்ளும் பயிற்சி கொடுக்கப்படுவார்கள். பள்ளி கல்வி, மேல்நிலைக்கல்விக்கான ஆசிரியர்கள் தகுதிகள் உயர்த்தப்படும், பயிற்சியின் தன்மை கல்விக்கொள்கைக்கேற்ற படி மாற்றியமைக்கப்படும்.
- தமிழகத்தின் கடனை அடைத்து வரிக்கு நிகரான வருமானத்தை உருவாக்கினால் தான் ஆசிரியர்களின் நீண்டநாள் கோரிக்கையான புது பங்களிப்பு ஓய்வூதியத்திட்டத்தை ரத்து செய்யவும், பழைய ஓய்வூதிய திட்டத்தை புதுப்பிக்கவும் முடியும். அதோடு ஊதிய முரண்பாடுகளை களையவும் முடியும். இதை மக்கள் நீதி மய்யத்தின் கொள்கைகளை, திட்டங்களை செயல்படுத்தினால் மட்டுமே முடியும். அஇஅதிமுக, திமுக கொடுக்கும் வெற்று வாக்குறுதிகளால் இது சாத்தியம் இல்லை.
- கற்றலில் கேட்டலே நன்று, கேட்டலின் பார்த்தலே நன்று, பார்த்தலின் பகிர்தலே நன்று என்ற நிலை ஒவ்வொரு வகுப்பறையிலும் நவீன தொழில் நுட்பத்துடன் உருவாக்கப்படும்.
- மாணவர்களுக்கு மேகக் கணிணிமுறையில் நவீன டேப்லட் வை-பை வகுப்பறைகள் அனைத்து அரசு பள்ளியிலும் உருவாக்கப்பட்டு, தமிழக அரசு பள்ளிகள் இணைக்கப்படும். அதன் மூலம் ஆசிரியர்-மாணவர் விகிதம் 1:1 என்ற அளவில்

எய்தப்படும்.
ஆசிரியர்களையும், பெற்றோர்களையும், மாணவர்களையும் இணைத்து, கற்றல் முறை சுலபமாக்கப்படும். கற்றல் திறன் மேம்படுத்தப்படும். 9-12ம் வகுப்பு மாணவர்களுக்கு 10 இஞ்சு டேப் விலையில்லாமல் வழங்கப்படும். மாணவர்களுக்கு மேகக் கணிணிமுறையில் நவீன டேப், வை-பை(Wi-fi) வகுப்பறை அமைக்கப்பட்டு கற்றல் திறன் மேம்படுத்தப்படும்.

- கல்வி மேலாண்மை, சுலபமாக்கப்பட்டு, கற்றலுக்கும், கற்பித்தலுக்கும், மேற்பார்வைக்கும் இன்டெர்நெட் மூலம் கணிணி முறையில் இணைக்கப்படும்.
- அரசு பள்ளிகளில் யோகா, தியானம், மற்றும் தனித்திறன் பயிற்சி அளிக்கப்படும்.

**கல்வி கடன்**

- மாணவர்கள் கல்வி கடன் பெறுவதும் திரும்ப செலுத்துவதும் எளிதாக்கப்படும்.
- 15 மார்ச் 2021ல் தமிழ்நாட்டில் சுமார் 10 லட்சம் மாணவர்கள் ரூ 17,193 கோடி கல்விக்கடன் பெற்றிருக்கிறார்கள். இதில் 3 லட்சம் மாணவர்களுக்கு வேலை இல்லாததால், அவர்கள் ரூ 3,490 கோடி NPA (Non Performing Asset), அதாவது பயனில்லா சொத்தாக அறிவிக்கப்பட்டு இன்றைக்கு வேலைக்காக நடுத்தெருவில் இருக்கிறார்கள்.
- மாணவர்கள் அனைவருக்கும் அவரவர் படிப்பிற்கேற்ற வேலை வாய்ப்பை அரசு தனது பொருளாதார மேம்பாட்டு கொள்கை செயல்திட்ட அமலாக்கத்தால் ஏற்படுத்தி கொடுக்கும் வரை அடுத்த 3 ஆண்டுகளுக்கு கல்விக்கடன் வசூல் நிறுத்தி வைப்பு, அதுவரை வட்டி தள்ளுபடி - இது சாத்தியம்.
- 3 ஆண்டுகளுக்கு மேல் பொருளாதாரத்தை மேம்படுத்த காலதாமதம் ஏற்பட்டால் அனைத்து கல்விகடனும் வட்டியோடு தள்ளுபடி செய்யப்படும்.
- அரசு பள்ளி மாணவர்களுக்கு பள்ளி சென்று வர தனி பேருந்து வசதி.

- வறுமை கோட்டிற்க்கு கீழ் உள்ள குழந்தைகள் தங்கி கல்வி பயில உண்டு, உறைவிட பள்ளி (Residential School) மாவட்டம் தோறும் உருவாக்கப்படும்.
- அரசு பள்ளி மாணவர்கள் 8-ம் வகுப்பு முடிப்பதற்குள் சரளமாக ஆங்கிலம் பேச புது வித ஆங்கில மொழி பாட திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.
- பிற மொழி மாணவர்கள் தங்கள் மொழியை விருப்ப பாடமாக படிக்க ஆவன செய்வோம்.
- அரசு பள்ளி அமைந்திருக்கும் இடத்தில் இருந்து 5 கி.மீ சுற்றளவில் தனியார் பள்ளி தொடங்க அனுமதியில்லை.

## இளம் கல்வி

- Pre KG, LKG, UKG, 1 மற்றும் 2ம் வகுப்புகள் மாற்றப்பட்டு 7 வயது வரை இளம்கல்வி ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு வளர்ப்பு மையம் (Integrated Child Development Care Centre) புதிய பாடத்திட்டத்துடன் அரசு செலவில் செயல்படுத்தப்படும். பெற்றோர்களுக்கு இனிமேல் இதில் எவ்வித செலவும் இல்லை.
- மருத்துவ பரிசோதனை, ஊட்டச்சத்து, தனித்திறன் வளர்த்தல், நீதி போதனை, பார்த்து கற்றுக்கொள்ளும் முறை போன்றவை ஒருங்கிணைந்த கவனிப்புடன் ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து வளர்க்கப்படும்.
- நற்பண்புகள் என்பது வெறும் கற்றல் மூலம் வருவதில்லை, நாம் அதை வாழ்வில் கடைப்பிடிப்பதன் மூலம் வருங்கால சந்ததிகளால் உணர்ந்து, கடைப்பிடிக்க வைக்கும். அதை நடைமுறையாக்குவோம்.
- நற்பண்புகள், கற்பனைத்திறன், மொழித்திறன், பாட்டுத்திறன், பேச்சுத்திறன், எழுத்துத்திறன், வரைவுத்திறன், தனித்திறன், விளையாட்டுத்திறன், யோகா மற்றும் மனஅமைதி திறன், போட்டித்திறன் போன்றவை பழக்க வழக்கமாக்கப்படும்.

## இடை நிலைக் கல்வி

- 3 முதல் 8 ம் வகுப்பு வரை அடிப்படைக்கல்வி - அறிவியல் கல்வியாக, சமூக பொருளாதார கல்வியாக, ஆதாரக்கல்வியாக, தனித்திறன் வளர்ப்பு கல்வியாக, வேலை செய்து தெரிந்து கற்றுணரும் கல்வியாக மாற்றப்படும்.
- அனைத்து மாணவர்களும் 8ம் வகுப்பிற்குள் சரளமாக ஆங்கிலம் படிக்க, பேச, எழுத, விவாதிக்கும் திறன் பெற்றவர்களாக மாறும் புது வித கற்பித்தல் திட்டம் அமல்படுத்தப்படும்.
- தமிழ் கட்டாயம், ஆங்கிலம் இணைப்பு மொழி, விருப்ப மொழியா ஏதாவது ஒரு இந்திய மொழி - மும்மொழி கொள்கை அமல்.
- 25 சதவிகித மாணவர்களுக்கு கல்வி உரிமைச்சட்டம் செயல்பாட்டில் இருக்கும் குழப்பம் கலையப்பட்டு, முழுமையாக அமல்.
- நூலகத்தில் படிப்பது, வாசிப்பது வாரத்தில் 4 மணி நேரம் கட்டாயமாக்கப்படும்.

## மேல் பட்டப்படிப்புக்கு தகுதிக்கல்வி

- இன்றைய மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் மனஅழுத்ததை கொடுக்கும் 10ம் வகுப்பு (SSLC), +2 தேர்வு பொதுத்தேர்வு முறை ஒழிக்கப்பட்டு 9-ம் வகுப்பு முதல் 4 வருடத்திற்கு பருவமுறை பாடத்திட்டம் (Pre Graduation Course) சர்வ தேச தரத்தில் உருவாக்கப்பட்டு, அதில் பல்வேறு விருப்ப பாடங்கள் ஏற்படுத்தப்படும். பொதுத்தேர்வு மற்றும் நுழைவுத்தேர்வு - இரண்டும் கூடுதல் சுமை. ஏதாவது ஒன்று தான் முடிவு. நுழைவுத்தேர்வுதான் என்றால் பொது தேர்வு ஒழிக்கப்படும். பொதுத்தேர்வை ஒழித்து எந்த நுழைவுத்தேர்வையும் எழுதும் வகையில் மாணவர்கள் அடிப்படை கல்வி மேம்படுத்தப்படும். பொதுதேர்வுதான் என்றால் நுழைவுத்தேர்வு ஒழிக்கப்படும்.
- அதுவரை மாநில அரசின் மாநில சுயாட்சிக்கான சட்ட மற்றும் அரசியல் போரட்டத்தின் மூலம் நீட் (NEET) தேர்வு ரத்து செய்ய,

சட்டமன்றத்தில் சட்டம் இயற்றி, SEET தேர்வு முறை சட்டம் கொண்டு வரப்படும். சீட் நுழைவு தேர்வு மாநில அரசின் பாடத்திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு 100 சதவிகிதம் (85:15) மருத்துவ மாணவர்கள் தமிழ்நாட்டின் மருத்துவகல்லூரிகளில் படிக்கும் வாய்ப்பு உருவாக்கப்படும். 7.5 சதவிகிதம் என்ற உள்ஒதுக்கீடு ஏமாற்று முறை ஒழிக்கப்பட்டு 85% MBBS ஒதுக்கீட்டில் 100 சதவிகதம் பெறும் நிலை உருவாக்கப்படும்.

- மாணவர்களின் திறனறிந்து பாடம் படித்து வெற்றி பெறும் சூழல் உருவாக்கப்படும். மதிப்பெண் முறை ஒழிக்கப்படும், கிரேடு முறையில் மதிப்பீடு செய்யப்படும். .
- 15 சதவீகித மதிப்பெண் விளையாட்டு, யோகா, நீதி போதனை, தனித்திறன் தொழிற் பயிற்சி, பேச்சு, மேலாண்மை பயிற்சி, சமூக பணி, சுற்றுப்புற சுகாதாரம், அடுத்தவரை போற்றும் பண்பு, ஒழுக்கம் சார்ந்த நடைமுறைக்கு பன்முக தேர்வு முறை அறிமுகப்படுத்தப்படும்.
- போட்டி தேர்வில் சர்வ தேச மாணவர்களுடன் போட்டி போட்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு தனித்திறன் பயிற்சி அளித்து அவர்களை சர்வ தேச அளவில் கல்வி தகுதிப்படுத்தப்படும். வெளிநாட்டு மாணவர்களும் நம் நாட்டில் படிக்கும் வகையில் கல்விக்கொள்கையை மாற்றி அமைப்போம்.
- மருத்துவம், பொறியியல், வேளாண்மை கல்லூரிகளுக்கு தமிழக அரசு நடத்தும் நுழைவுத்தேர்வு நடத்தப்படும். தமிழக மாணவர்கள் அகில இந்தியாவின் கல்வி நிறுவனங்களிலும் அவர்கள் போட்டி தேர்வெழுதி வெற்றி பெற தயார் செய்யப்படுவார்கள்.
- அரசு பள்ளியிலே ஐ.ஐ.டி, ஐ.ஐ.எம், போன்ற கல்வி நிறுவனங்களின் நுழைவு தேர்வுகளுக்கும், அகில இந்திய மருத்துவ கல்லூரிகளுக்கான போட்டி தேர்வுகளுக்கும் தயார்படுத்திக்கொள்ள 9-ம் வகுப்பு முதல் சிறப்பு பயிற்சி.

## கமாண்டோ பயிற்சி

- பள்ளிப்படிப்பை விட்டு இடைநிற்கும்இளைஞர்கள் அனைவருக்கும் 4 வருட கட்டாய கமாண்டோ பயிற்சி கொடுக்கப்படும். அதோடு தனிதிறன் மேம்பாட்டு பயிற்சி கொடுக்கப்படும், அவர்கள் அரசின் ஆக்க பணியில் ஈடுபடுத்தப்பட்டு, பின்னர் தனித்தொழில் தொடங்குவதற்கும், அரசுப்பணிகளுக்கு தயார் செய்வதற்கும், அவர்களுக்கு பயிற்சி கொடுக்கப்படும்.

## உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி

- ஆராய்ச்சி சார்ந்த கல்வியாக பல்கலைக்கழகங்கள் தரம் உயர்த்தப்படும். பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சிக்கு மட்டும் தான். பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரிகள் படிப்பிற்கு மட்டும்தான் என்று பாகுபாடு செய்யப்படும். அதற்கேற்ப பல்கலைழக்கழக சீர்திருத்த சட்டம் நிறைவேற்றப்படும்.
- கலை, அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் படிப்புகளில் ஒரு வருடம் (1 Year) கூட்டப்பட்டு, தனித்திறன், நேரடி தொழில் மற்றும், வேலைவாய்ப்பு பயிற்சி கொடுக்கப்படும்.
- IAS, IPS போன்ற அரசு பணி தேர்வுகளுக்கு புதிய தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் சிறப்பு பயிற்சி அளிக்கப்படும்
- அங்கீகாரம் இல்லாத பள்ளி, கல்லூரிகளுக்கு அனுமதி ரத்து செய்யப்பட்டு மாணவர்களுக்கு மாற்று ஏற்பாடு செய்யப்படும். அரசு நிர்ணயித்த கட்டமைப்பு தரம் இருந்தால் ஒரு மாதத்தில் அங்கீகாரம் வழங்கப்படும். அங்கீகாரம் இல்லாமல் பள்ளி, கல்லூரிகள் செயல் பட அனுமதி இல்லை
- பல்கலைகழக பேராசிரியர்கள், பணியாளர்கள் தேர்விற்கு தனி ஆணையம் அமைக்கப்படும். இவர்களை தேர்வு செய்வது வெளிப்படையாகவும், நேர்மையாகவும் நடக்க வழிவகை செய்வோம்.
- வேலைவாய்ப்புக்கு ஒவ்வொரு படித்த மாணவனும் தகுதி திறன் ஏற்படுத்தப்படுவார்கள். அனைவருக்கும் வேலை கொடுக்கும்

கொள்கை வகுக்கப்பட்டு அதற்கேற்ற வகையில் 3 பொருளாதர துறைகள் பலப்படுத்தப்படும்.

- மாநில Ease of Doing Business Index தரம் உயர்த்தும் வகையில் ஆட்சி முறை நிர்வாகம் சீரமைக்கப்பட்டு, உயர்கல்வி கற்ற மாணவர்களுக்கு வேலை கிடைக்கும் வகையில் 3 பொருளாதார துறைகளில் தொழிற்சாலைகள் உருவாக்கம், அன்னிய முதலீடுகள் ஈர்க்கப்படும்.
- கல்லூரிகளின் சிறந்த ஆராய்ச்சி துறைகள் மட்டும் பல்கலைக்கழகத்தோடு இணைந்து செயல்படும். ஒவ்வொரு கல்லூரி மாணவனும், பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிதுறையில் ஆராய்ச்சி தொடர்பான சிறப்பு படிப்பை 3 மாதம் பல்கலைக்கழகத்தில் சென்று கற்க வேண்டும். .
- ஒவ்வொரு மாணவனும் பல்கலைக்கழக ஆராய்ச்சிதுறையோடு இணைந்து Scopus Journalsல், high citation index உள்ள ஆராய்ச்சி ஜெர்னல்களில் ஒரு ஆராய்ச்சி கட்டுரையாவது சமர்பிப்பது கட்டாயமாக்கப்படும்.
- அதுமட்டுமல்ல, ஒவ்வொரு மாணவனும் தனது துறையின் மேம்பாட்டுக்காக ஒரு அறிவுசார் சொத்தை உருவாக்க ஊக்குவிக்கப்படுவார்கள்.

## துணைவேந்தர் தேர்வு முறையில் அடிப்படை மாற்றம்

- பல்கலைகழக துணைவேந்தர்கள் நியமனத்தில் நேர்மையான, வெளிப்படையான கொள்கைகள் கடைபிடிக்கப்படும் .
- பல்கலைக்கழக ஆராய்ச்சி மேம்பாட்டிற்கு தொலைநோக்கு திட்டங்கள் சமர்பிக்கப்பட்டு, இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அதை அடையும் வல்லமை பெற்றவர்களை தேர்வு செய்து துணைவேந்தர் தகுதி குழுமம் உருவாக்கப்படும். அதில் இருந்து பல்கலைக்கழகங்களுக்கு துணைவேந்தர்கள் பரிந்துரைக்கப்பட்டு, தேர்வு செய்யப்படுவார்கள். அதற்கேற்ப தேர்வுக் கொள்கை மாற்றி அமைக்கப்படும்.

- ஆராய்ச்சிக்கு முக்கியத்துவம். அறிவு சார் சொத்து உருவாக்க கொள்கை, அறிவை விரிவு செய்வோம், விசாலப்பார்வையால் உலகை வெல்ல புது கொள்கை வகுப்போம். பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் செயல் பாட்டை ஆராய குழு அமைத்து, அது கொடுக்கும் பரிந்துரையை சட்டமாக்கி 12 அம்ச திட்டங்களின் அடிப்படையில் அறிவுசார் ஆணையம் (Knowledge Commission) அமைக்கப்படும்.
- நிரந்தர விவசாய புரட்சி கொள்கைக்கு ஏற்ப பொறியியல் கல்லூரிகளை 250 விவசாயம் சார்ந்த பொரியியல் கல்லூரிகளாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலமாக நிரந்தர விவசாய புரட்சி திட்டங்கள் செயல்பாட்டுக்கு கொண்டு வரப்படும்.
- தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழகத்தில் மரபணு மாற்ற ஆராய்ச்சி ஊக்குவிக்கப்படும். அதை படிப்படியாக கொண்டு வந்து விவசாயம் செழிக்கவும், உலகநாடுகளோடு போட்டியிடும் வல்லமையை உருவாக்க பாடுபடுவோம்.
- தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சி மேம்பாட்டு மையம் (TNSIR) அமைக்கப்படும். அதற்கு முதன்முதலாக ரூ 1000 கோடி நிதி ஒதுக்கப்படும். இந்தியாவின் வளர்ச்சிக்கு, வளரும் நாடுகளுக்கின் வளர்ச்சிக்கேற்ற முக்கிய ஆராய்ச்சி தொலைநோக்கு பார்வை உருவாக்கப்படும்.
- இந்த மையத்தின் கீழ், தொலைநோக்கு பார்வையின் அடிப்படையில் அனைத்து பல்கலைக்கழகங்களின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு வளர்ச்சி இணைக்கப்படும். ஒவ்வொரு பல்கலைகழகத்தின், கல்லூரியின் தனித்துவம் கண்டறியப்பட்டு, ஆராய்ச்சி தொலை நோக்கு இலக்குகள் அடுத்த 15 ஆண்டுகளுக்கு வகுக்கப்படும். பல்கலைக்கழகம், தொழிற்சாலை இணைப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு திட்டங்கள் சர்வ தேச அளவில் ஊக்குவிக்கப்படும்.
- பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் அரசு மற்றும் தனியார் என்று வித்தியாசம் பார்க்காமல், ஆராய்ச்சியின் தன்மை மற்றும் திறமையை கண்டறிந்து, ஆராய்ச்சி மேம்பாடு ஊக்குவிக்கப்படும்.

- TNSIRல் - 1000 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் உலகத்தில் தலைசிறந்த ஆராய்ச்சி பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சி, மேல் பட்ட ஆராய்ச்சி செய்ய அனுப்ப படுவார்கள். அவர்களது பணி, தேர்ந்தெடுத்த 10 முக்கிய அறிவியல் ஆராய்ச்சி துறைகளிலே குறைந்தது 1000 உலகளாவிய அறிவுசார் சொத்துரிமைகளை TNSIR உடன் இணைந்து உருவாக்குவதுதான் அவர்களது பணியாகும். அந்த அறிவுசார் சொத்தை, தொழில்நுட்பமாக, உலக தரம் வாய்ந்த பொருள்களாக மாற்ற தமிழக அரசு உதவும்.
- இந்த திட்டத்தின் வெற்றிதான் தமிழக பல்கலைக்கழகங்களை அகில உலகதரத்திற்கு ஆராய்ச்சியில் உயர்த்தும். இது அனைத்து பல்கலைக்கழகத்தையும் ஒரு துறையில் முதலில் ஆராய்ச்சியில் சிறந்து விளங்க வழி வகைசெய்யும்.

## விவசாய கல்வி மற்றும் ஆராய்ச்சி

- நிரந்தர விவசாய புரட்சி கொள்கைக்கு ஏற்ப பொறியியல் கல்லூரிகளில் பாதியை விவசாய கல்லூரிகளாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும். அதன்படி விவசாய கல்லூரிகளுக்கு உபயோகப்படுத்தப்படாத நிலங்களை, நிரந்திர விவசாய புரட்சி திட்டங்களில் ஈடுபடுத்தி, விவசாயிகள் பங்கு தாரர்களாக ஆக்கப்படுவார்கள்.
- விவசாய புரட்சி இலக்கை எட்ட விவசாய நிலங்கள் நிரந்திர பசுமைப்புரட்சி உற்பத்தி பொருளாதார மண்டலங்களுடன் இணைக்கப்படும்.
- விவசாய ஆராய்ச்சி, தமிழ்நாட்டின் சொந்த பயிர்களின் மரபணு மாற்ற ஆராய்ச்சி தமிழக விவசாய பல்கலைக்கழகத்தில் ஊக்குவிக்கப்படும்.
- விவசாய உற்பத்தி பொருள்களை மதிப்பு கூட்டும் நவீன தொழில் நுட்ப ஆராய்ச்சி, மேம்பாடு, வடிவமைப்பு வளர்ந்த நாடுகளோடு இணைந்து செயல்படுத்தப்படும்
- பூச்சிகளில் இருந்தும், பூச்சிக்கொல்லி மருந்துகளில் இருந்தும் பயிர்களை காப்பதற்கு மரபணு மாற்று ஆராய்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்து, பூச்சிக்கொல்லி மருந்து

கம்பெனிகளின் ஆதிக்கத்தில் இருந்து விவசாயிகளை காப்பது மிகவும் முக்கியம். அதற்கு நம் நாட்டில் மரபணு ஆராய்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுப்போம்.

- மரபணு மாற்றப்பயிர்களைப்பற்றிய அச்சங்களை போக்கி, அதன் மூலம் விளையும் நன்மைகளை நம் நாட்டு மரபணு ஆராய்ச்சியின் மூலம் விவசாய மேம்பாடு அடைந்து உலக நாடுகளோடு போட்டி போட வழிவகை செய்யப்படும்.
- BT Cotton, BT Brinjaal, BT Rice, பருத்தி, மக்காசோளம் போன்ற GMCrops TNAU மூலம் உருவாக்கி பயன்பாட்டிற்கு கொண்டு வருவோம்.
- உலக வெப்பமயமாதலினால் வெப்பம் அதிகரித்து பயிரின் உற்பத்திதிறன் மாறும், அதற்கேற்ற சூழலில் விளையும் பயிர்களை பல்வேறு உற்பத்தி அறிவியல், தொழில்நுட்ப பரிணாமங்களில் உருவாக்கும் ஆராய்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். வெப்பத்தை தாங்கி வளரக்கூடிய கால்நடை ஆராய்ச்சிக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும்.
- விவசாய வீழ்ச்சிக்கு கடந்த கால அரசுகள் வித்திட்டதால், விவசாய தொழிளார்கள் குறைந்து விட்டார்கள், இப்பொழுது விவசாயம் நடவு முதல் அறுவடை எந்திரமயமாக்கப்பட்டு வருகிறது. ஆனால் எந்திரமயமாக்கலுக்கு உட்பட்ட பயிர் ரகங்களும், தொழில் நுட்பங்களும் உருவாக்கப்பட வேண்டும்.
- நீலப்புரட்சியும், நிரந்திர பசுமைப்புரட்சியும் வரும்போது, ஏற்றுமதிக்கான பயிர் ரகங்களையும், தொழில்நுட்பங்களையும், நானோ தொழில்நுட்பத்தின் மூலமாக பாதுகாக்கப்பட்ட பெட்டிகளில் அடைக்கும் தொழில் நுட்பத்தையும் உருவாக்க வேண்டும்.
- பொதுவாக அரிசியின் மேற்பரப்பில் இருக்கும் விட்டமின்-ஏ, அரிசி அரவை மில்லில் நீக்கப்படுகிறது, அதனால் அரிசி உண்பவர்களுக்கு விட்டமின்-ஏ குறைபாடு ஏற்பட்டு கண் பார்வை குறைகிறது. இதை விட்டமின்-ஏ ஐ அரிசியின் உள்ளே செறிவூட்டப்பட்ட ரகங்களை உருவாக்குவோம்.

- சிறு, குறு தானியங்களை இயற்கை வேளாண்மை முறையில் அதிகளவில் பயிரிடுவதற்கும், அதை சந்தைப்படுத்துவதற்கும் ஊக்கப்படுத்தப்படும். வாழைப்பழம், இளநீர், பதனீர் மதிப்பு கூட்டப்பட்டு நமது பயன்பாட்டிற்கும், ஏற்றுமதிக்கும் ஊக்குவிக்கப்படும்.
- சர்க்கரை நோயாளிகள், இதய நோயாளிகள், உடல் பருமன், கண் பார்வை போன்ற குறைபாடு உள்ளவர்களுக்கு சிறுதானிய டிஸைனர் உணவு பொருள்கள், அதை சமையல் குறிப்போடு, ஒவ்வொரு மாதத்திற்கும், அவர்களது தேவைக்கேற்ப அனைத்து தரப்பினருக்கும் ரேஷன் கடைகளில் நியாய விலையில் கிடைக்கும். இந்த சிறுதானியங்களை, அலைபேசி மூலமாக ஆர்டர் செய்தால், அவர்கள் வீட்டிற்கே டெலிவரி கொடுக்கப்படும். வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ள மக்களுக்கு விலையற்ற முறையில் ரேஷன் கடைகளில் கிடைக்கும்.

## மருத்துவக் கொள்கை

- மருத்துவ கல்வி மாநிலபட்டியலுக்கு கொண்டு வரும் வகையில் அரசியல், சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
- அரசு மருத்துவமனையை சர்வ தேச தரத்திற்கு தரம் உயர்த்தி தரமான மருத்துவ சேவை மக்கள் அனைவருக்கும் சமூக, பொருளாதார வேறுபாடின்றி கிடைக்கும் கொள்கை உருவாக்கப்படும். மாவட்ட அரசு மருத்துவமனைகள் சூப்பர் ஸ்பெஷாலிட்டியாக தரம் உயர்த்தப்படும்.
- மாவட்டத்திற்கு இரண்டு மருத்துவ கல்லூரிகள் தனியார் பங்களிப்போடு தொடங்கப்படும். அவை அரசு மாவட்ட மருத்துவமனையை அடிப்படையாக கொண்டு தொடங்கப்படும்
- திருப்பூரில் ரூ 250 கோடி மதிப்பில் அரசு பல்நோக்கு மருத்துவமனை அமைக்கப்படும். .
- மருத்துவம் படிக்க விரும்பும் தகுதியுள்ள அனைவருக்கும் வாய்ப்பு அளிக்கப்படும் . மருத்துவ உயர்கல்வியில் இட ஒதுக்கீடு கொண்டுவரப்படும்.
- தனியார் மருத்துவ கல்லூரிகள் அரசு மருத்துவமனைகளை, ஆரம்ப சுகாதார நிலையங்களை தத்து எடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- ஒவ்வொரு கிராமத்திற்கும் தொலை தொடர்பு மருத்துவமனை மற்றும் நடமாடும் மருத்துவ பணியாளர்கள். ஒவ்வொரு புரா கிராம குழுமத்திற்கும் நடமாடும் மருத்துவமனை மற்றும் மருத்துவ பரிசோதனை மையம் அமைக்கப்படும்.
- அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் அது இல்லாத ஊர்களில் கிராமத்தில் டெலிமெடிசன் சென்டர் ஐந்து வருடங்களில் தொடங்கப்படும். இந்த வசதியை பெற்று 24மணி நேரமும் மருத்துவம் மற்றும் அவசர முதலுதவி சிகிச்சையும் கிடைக்கும் வகையில் அமைப்போம் .
- தரமான மருந்து குறைந்த விலையில் கிடைக்க ஜெனிரிக் மருந்துகள் உபயோகம், கலப்பட மருந்து விற்பனை சட்டம் தீவீரமாக அமல்படுத்தப்படும். தடை செய்யப்பட்ட மருந்துகள், போலி மருந்துகள் விற்பனையை தடுக்க ஆயுள் தண்டனை சட்டம் கொண்டு வரப்படும்.

- அரசு மருத்துவர்கள் தன்னிடம் வரும் நோயாளிகளை அரசு மருத்துவமனையிலே வைத்து தரமான சிகிச்சை அளித்து குணப்படுத்தும் கணக்கு எடுக்கப்பட்டு, ஒவ்வொரு வருடமும் சிறப்பு ஊக்கத்தொகை பாரபட்சமின்றி அளிக்கப்படும். அந்த ஊக்கதொகை தனியார் மருத்துவமனையில் கிடைப்பதை விட அதிகமாக வழங்கப்படும்.
- அனைத்து தரப்பினருக்கும் மருத்துவ காப்பீட்டு திட்டம் வேறு பாடின்றி மறு சீரமைக்கப்படும்.
- ஆண்டுதோறும் மாணவ, மாணவியர்களுக்கு ஆயுள் காப்பீடு மற்றும் முழு உடல் பரிசோதனை வழங்கப்படும்.
- ஆண்டுதோறும் பொது மக்கள் அனைவருக்கும் அரசு செலவில் முழு உடல் பரிசோதனை கட்டாயம் ஆக்கப்படும்.
- ஹெலிகாப்டர் ஆம்புலன்ஸ் மருத்துவ சேவைகள் அறிமுகப்படுத்தப்படும்.
- விரைந்த உடனடி மருத்துவ சேவைக்கு ஆளில்லா விமானம் பயன் படுத்தப்படும்.
- புற்று நோய் மற்றும் இதர கொடிய நோய்களுக்கு அதிக விலை கொண்ட மருந்துகள் அரசு மருத்துவமனைகளில் கிடைக்க செய்யப்படும்.
- மருத்துவ பேராசிரியர் பற்றாகுறையை போக்க அரசு மருத்துவ கல்லூரிகள் இந்திய மற்றும் சர்வதேச மருத்துவமனைகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டு தொடர் மருத்துவ கல்வி பயிற்சி (Continue Medical Education) மூலம் மருத்துவம் பயிலும் மாணவர்களுக்கு சர்வதேச தர மருத்துவ கல்வி வழங்கப்படும். மருத்துவ படிப்பிற்கான இடங்கள் அதிகரித்து, மருத்துவம் படிக்க விரும்பும் தகுதியுள்ள அனைவருக்கும் வாய்ப்பு.
- தொலை தொடர்பு மருத்துவம்(Tele-Medicine) மூலம் சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளுக்கு மருத்துவ சேவையும், பாதுகாப்பும் உறுதிசெய்யப்படும்.
- அரசு மாவட்ட மருத்துவமனைகளிலேயே பெரிய டையக்னாஸ்டிக் வசதி - PET SCAN and Linear Accelerator வசதி செய்யப்படும்.

- தமிழக அரசு காப்பீட்டு கழகம் உருவாக்கப்படும். மருத்துவ காப்பீட்டு திட்டம் மறு சீரமைக்கப்படும். மருத்துவ காப்பீடு குடும்பத்திற்கு ரூ 10 லட்சமாக உயர்த்தப்பட்டு, அனைவருக்கும் தரமான மருத்துவம் இலவசமாக வழங்கப்படும்.
- வறுமைக்கோட்டிற்கு கீழ்வாழும் 82 லட்சம் ஏழைகளுக்கு - ஆண்டு பிரிமியம் அரசே செலுத்தும்.
- நடுத்தர குடும்பத்தில் வசிக்கும் அனைவருக்கும் நவீன மருத்துவ காப்பீட்டு திட்டம். ஒவ்வொருவரும் ஒரு நாளைக்கு ரூ 10 என்ற அளவில், ஆண்டு பிரிமியம் செலுத்தி உலக தரம் வாய்ந்த மருத்துவத்தை அரசு மருத்துவமனைகளில் பெறலாம்.
- அனைவருக்கும் தரமான மருத்துவ வசதி அவர்கள் வீட்டிலேயே கிடைக்கும் வழி வகை செய்யப்படும்.
- ஒவ்வொரு மருத்துவ மனையிலும் ஒரு நோயாளி வரும் போது அந்த நோயாளியை ஆலோபதி, சித்தா, ஆயுர் வேதம், வர்மா, அக்குபிரஷர், அக்குபஞ்சர், பஞ்சபூத மருந்தில்லா மருத்துவம் போன்ற பல் துறை நிபுணர்கள் நோயாளியை பரிசோதித்து, எந்த முறை வைத்தியம் இப்பொழுது இவருக்கு சரியாக இருக்கும் என்று முடிவெத்து அதற்கேற்ற மருத்துவ முறையை பின் பற்ற வழி வகை செய்யப்படும்.

## எரிசக்தி சுதந்திர கொள்கை

- தமிழ்நாடு எரிசக்தி சுதந்திர கொள்கை வகுக்கப்படும். அதற்கேற்ற மின்சார, எரிபொருள் உற்பத்தி மேம்பாட்டு கட்டமைப்பு உருவாக்கப்படும். 35,000 மெகாவாட் உற்பத்தி இலக்கு நிர்ணயிக்கப்படும்.
- மின்சாரத்துறை ஒட்டு மொத்த மறு சீரமைப்பு. கடனில் இருந்து மீட்க அவசர கால அறிவார்ந்த நடவடிக்கை.
- மின்சார உற்பத்தி, மின்சார டிரான்ஸ்மிஷன், மின்சார பகிர்மானம் ஆகியன தனியாக பிரிக்கப்படும்.
- பைபர் ஆப்டிகல் கேபிள் மற்றும் மின்சார கேபிள் சேர்ந்த இணைப்பு ஏற்படுத்தி சுமார்ட் கிரீடு (SMART GRID) மூலம் பாதாள மின்சார கேபிள் பதிப்பு வரைவு திட்டம் செயல்படுத்தப்படும். இது வெற்றி பெற்றால் தமிழகம் முழுவதும் செயல்படுத்தப்படும்.
- மின்சார கட்டமைப்பு வலுவுட்டப்படும், மின் அனுப்புதல் (Transmission) மற்றும் பகிர்மான (Distribution) இழப்பு குறைக்கப்படும். துணை மின் நிலையங்கள் நவீனப்படுத்தப்பட்டு, அதன் திறன் அளவு மேம்படுத்தப்படும். மின்சார திருட்டு கண்டறிந்து தடுக்கப்படும்.
- தற்போதய மின்சார உற்பத்தி திட்டங்களின் செயல்பாட்டு திறனை மேம்படுத்த மேலாண்மை திட்டம். மின்சார வாரியம் நஷ்டமில்லாமல் செயல்படும் வாரியமாக மாற்றப்படும், இல்லையென்றால் கலைக்கப்பட்டுவிட்டு, விரைந்து செயல்படும் புதிய நிர்வாக அமைப்பு ஏற்படுத்தப்படும். மின்சார பணியாளர்கள் பணி வரன் முறை செய்யப்பட்டு, அவர்கள் TNEB ல் பங்குதாரர்கள் ஆக்கப்படுவார்கள்.
- வீட்டு மின் விநியோகத்திற்கு 100 யூனிட் இலவசம், 500 யூனிட் வரை ஒரே ஸ்லாப், வியாபாரத்திற்கும், தொழிலுக்கும் மின்சார கட்டணம் 1000 யூனிட் வரை ஒரே ஸ்லாப் முறை 3 வருடத்திற்குள் அமுல்படுத்தப்படும். வீட்டுக்கும், தொழிலுக்கும் சோலார் மின் சக்தி ஊக்குவிக்கப்படும். மாதம் தோறும் மின் கட்டணம் கணக்கீடு செய்யப்படும்.

- காற்றாலை மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் இடத்தில் இருந்து மின் கட்டமைப்புக்கு கொண்டு செல்ல உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் .
- பெரிய காற்றாலைகளுக்கு இடையில் பக்கவாட்டில் சுற்றும் புதுவித சிறு காற்றாலை மின்சார உற்பத்தி நடைமுறைக்கு கொண்டு வந்து காற்றாலை மின் உற்பத்தி பெருக்கப்படும்.
- நீர் மின் நிலையங்கள் செயல்படும் திறன் கூட்டப்படும். நீர் வழிச்சாலைகள் உருவாக்கப்பட்டு நீர் மின்சார உற்பத்தி திறன் அதிகரிக்கப்படும். நீர்வழிச்சாலைகள், கால்வாய்கள், நீர் நிலைகளின் மேல் சூரிய ஒளி உற்பத்தி செயல்பாட்டிற்கு வரும்.
- செயல்படும் சூரிய ஒளி மின்சார கொள்கை உருவாக்கப்படும். சூரிய மின் உற்பத்தியில் தமிழகத்தின் தன்மைக்கேற்ப சரியான தொழில்நுட்பங்கள் SPV, Thermal concentrator technologies such as Tower, A dish Stirling, Parabolic trough, Fresnel reflectors, novel solar CPV/CSP hybrid systems and Solar Cascade Systems ஆராயப்பட்டு தேர்ந்தெடுக்கப்படும்.
- மின் நிலையங்கள், அணுமின் நிலையங்கள், பயோ கேஸ் மற்றும் மரபு சாரா எரிசக்தி மின் நிலையங்கள் கட்டமைப்பு உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்படும்.
- எரிபொருளில் எத்தனால் உபயோகம் 10-50 சதவிகிதம் வரை படிப்படியாக உயர்த்தப்பட்டு 10 ஆண்டுகளில் அந்த இலக்கை எட்ட முயற்சிக்கப்படும். எத்தனால் கொள்கைக்கேற்ப கரும்பு உற்பத்தி, மக்காச்சோளம் உற்பத்தி, ஸ்டார்ச் பொருள் உள்ள உணவுப்பொருள் உற்பத்தி ஊக்கு விக்கப்படும்
- நவீன அனல்மின் நிலையங்கள்- தூய நிலக்கரி மற்றும் வாயு மூலம் உற்பத்தியாகும் வாய்ப்புகள் ஆராயப்பட்டு செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.
- கழிவுப் பொருள் இல்லா கரும்பு ஆலைகள் உருவாக்கப்படும், செயல்படும் கரும்பு ஆலைகள் நவீனப்படுத்த ஊக்கப்படுத்தப்படும்.
- விமான எரிபொருளுக்கு தேவையான பயோ எண்ணை தயாரிப்பு ஊக்கப்படுத்தப்படும்.

## போக்குவரத்து கொள்கை

- சுமார் 1.7 கோடி பயணிகள் 20,944 அரசு பேருந்தில் பயணம் செய்கிறார்கள், அதில் 1448 ஸ்பேர் பஸ்கள்.
- போக்குவரத்து கழகத்திற்கு வருமானம் சுமார் ரூ 35000 கோடி. டிக்கெட் விற்பனை மூலம் தினமும் ரூ 25 கோடி வருமானம் வருகிறது. மார்ச் 2019 வரை தேய்மான இழப்பு ₹4,650 கோடியை கழித்தபின் மொத்த நட்டம் ₹21,530 கோடி. லாக்டவுன் காலத்தில் நட்டம் ரூ 1000 கோடி.
- மே 2019 வரை கிட்டதட்ட 6200 ஒய்வுபெற்ற டிரைவர்கள், கண்டக்டர்கள், அலுவலர்களுக்கு ஒய்வூதிய பலன்கள் கொடுக்காமல், பல பேர் மரணித்து விட்டார்கள்.
- அரசு போக்குவரத்து துறை ஒரு பேருந்தை 6.48 நபர்கள் மூலம் தமிழக அரசின் எட்டு போக்குவரத்து கழகங்களை மேலாண்மை செய்து, ரூ 1,200 கோடி ரூபாய் நஷ்டத்தில் இயங்குகிறது.
- 2017ல் ஒரு நாளைக்கு 90 லட்சம் கிமீ பேருந்துகள் இயக்கப்படுகிறது. 2020ல் 80 லட்சம் கி.மீ ஆக குறைந்து விட்டது. ஒரு லிட்டருக்கு 5.30 கி.மீ எரிபொருள் சிக்கனம் 0.05 மிச்சம் 2011ல் இருந்து எட்டப்பட்டிருக்கிறது.
- ஒரு கி.மீ பஸ் ஒட்ட ரூ 40 ஆகிறது, ஒரு கி.மீ வருமானம் ரூ 25, ஒவ்வொரு கி.மீ நட்டம் ரூ 14. இதில் நட்டத்திலிருந்து லாபம் ஈட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
- மொத்த செலவில் 53% சம்பளம் & ஒய்வூதியமும், 33.5% டீஸலுக்கும் செலவிடப்படுகிறது. ரிப்பேருக்கும், பராமரிப்புக்கும் 4.1 %.
- ஒரு நாளைக்கு 1 லட்சம் பயணிகளுக்கு தமிழ்நாடு மாநில விரைவு போக்குவரத்து சேவையளித்து வருகிறது.
- ஆனால் மக்களுக்கு கிடைப்பது தரம் குறைந்த பேருந்து சேவை, பயத்துடன் பயணம், மழை பெய்தால் ஒழுகும், வெயிலில் காய்ந்து கொண்டு செல்லும் நிலைமை. புது பேருந்துகள் அரசு வாங்கி கொடுத்தாலும், அதை ஒழுங்காக பாரமரிக்காததால், புதிய பேருந்துகள் சீக்கரம் பழைய பேருந்துகளாக மாறிவிடுகிறது.
- பேருந்துகள் வாங்குவதில் இருந்து தேவையில்லை என்று விற்கும் வரை ஊழல், திறமையின்மையின்

மையப்பொருளாக, மின்சார வாரியத்திற்கு பிறகு போக்குவரத்து துறை இயங்குகிறது.

- மின் வாரியத்தின் துணை நிறுவனமான, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் நஷ்டம், 11000 கோடி ரூபாய், தமிழக அரசின் எட்டு போக்குவரத்து கழகங்களின் நஷ்டம், 1,200 கோடி ரூபாய். இந்த இரண்டு நிறுவனங்கள் மூலம், 13 ஆயிரம் கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுஉள்ளது.
- போக்குவரத்து கழகங்களின் நிர்வாக மேலாண்மை அதிகாரம் சீர்திருத்தப்பட்டு மாற்றி அமைக்கப்படும். பேரூந்து பராமரிப்பு நிர்வாகம் முற்றிலும் சீரமைக்கப்படும். போக்குவரத்து கழகம் நட்டத்தில் இருந்து மீட்க அதி தீவிர நடவடிக்கை எடுக்கப்படும்.
- மாற்று எரிபொருள் உபயோகம் உடனடி அறிமுகம்
- எரிபொருளுக்கு 33.5% செலவிடப்படும் நிலையில், அதைக்குறைத்து CNG Gas திட்டம் படிப்படியாக அமல்படுத்தப்பட்டு, பேருந்துகள் CNG பேருந்துகளாக மாற்றி அமைக்கப்படும். இதன் மூலம் எரிபொருள் செலவு குறையும், சுற்றப்புற மாசு குறையும்.
- 10 சதவிகித எத்தனால் உபயோகம் அமலுக்கு வரும், அது படிப்படியாக எத்தனால் உற்பத்தி கொள்கைக்கேற்ப 50 சதவிகித உயர்த்தப்படும்.
- பயோ எரிபொருள் தயாரிப்பை ஊக்குவித்து ஜெட் எரிபொருள் உற்பத்தியை ஊக்குவிப்போம். அதன் மூலம் சர்வ தேச சந்தையில் போட்டியிட தமிழக விவசாயிகளை தயார் செய்வோம்.
- எமல்ஸிபிகேஷன் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பேருந்துகளின் டீஸல் பயன்பாட்டை குறைக்க பரிச்சார்த்த சோதனை நடத்தி, வெற்றி பெற்றால் தமிழகம் முழுவதும் அமலுக்கு வரும்.
- மக்கள் பேருந்து பயணத்திற்கு ரீ-சார்ஜபில் சுமார்ட் கார்டு அறிமுகப்படுத்தப்படும்
- அரசு போக்குவரத்து கழகங்களின் ஊழல்களையும், அரசியல் தலையீடுகளையும், அரசியல் சங்கங்களின் பெயரில்

வேலையின்றி அரசியல் செய்யும் சூழல் முற்றிலும் ஒழிக்கப்படும்.

- போக்குவரத்து துறையின் கடனை அடைக்க, சரக்கு போக்குவரத்து துறையிலும் கால்பதிக்கும், இது தனியாரோடு சேர்ந்து செயல்படும்.
- போக்குவரத்து பணியாளர்களுக்கு அதிக பணிசுமையால் ஏற்பட்ட மன அழுத்தத்தை குறைக்க பயிற்சி அளித்து தங்களின் பணியில் திறமையுடன் செயல்பட வழி செய்யப்படும்.
- டவுன் பஸ் மற்றும் நீண்ட தூர பயணப்படும் வாகனங்கள், சிறிய சொகுசு பேருந்துகள் பழயன கழித்து தானியங்கி புது வாகனங்கள் வாங்கப்படும். அதை சரியாக பராமரிக்க புது கொள்கை வகுக்கப்படும்.
- அரசின் தொலை தூர போக்குவரத்து தனியார்துறையை விட சொகுசு பயணமாக, நவீனமாக, பாதுகாப்பாக மாற்றி அமைக்கப்படும்.
- குளிர்சாதன பேருந்துகளின் எண்ணிக்கை அனைத்து மாநகரங்களிலும், தொலைதூர பேருந்துகளுக்கும் அதிகரிக்கப்படும்.
- தொலைதூரம் செல்லும் அரசு பேருந்து நல்ல முறையில் பராமரித்து, தரம் உயர்த்தி ஆம்னி பேருந்துகளுக்கு இணையாக செயல்படுத்தப்படும்.தொழில் நுட்ப உதவியுடன் போக்குவரத்து கண்காணிக்கப்படும். சேவைகள் தரம் உயர்த்தப்படும்.
- தனியார் பேருந்து நிறுவனங்கள் ஒரு பேருந்தை 2.7 நபர்களை வைத்து மேலாண்மை செய்து அதிக லாபத்தை ஈட்டுகிறது. ஒரு பேருந்திற்கு 2 நபர்களை வைத்து மேலாண்மை செய்யும் இலக்கு எட்டப்படும். மொத்தம் 1,44,818 பணியாளர்கள் இதை மேலாண்மை செய்கிறார்கள் அரசு போக்குவரத்து கழகத்தில் பணிபுரியும் ஊழியர்கள் பணி வரன் முறை செய்யப்பட்டு, அவர்கள் போக்குவரத்து கழகத்தில் பங்குதாரர்களாக்கப்படுவார்கள்.

**ஆட்டோ ஓட்டுனர்கள் நலன்**

- எலக்ட்ரிக்கல் ஆட்டோ உற்பத்தி ஊக்குவிக்கப்பட்டு, அதை 3 ஆணடுகளில் அறிமுகப்படுத்தும். அரசே M-ஆட்டோ சேவை (M-Auto) முறையை அறிமுகப்படுத்தும். அவர்களுக்கு M-ஆட்டோ வழங்கப்படும். இந்த திட்டத்தில் இணையும் ஆட்டோ ஓட்டுனர்கள் இந்த நிறுவனத்தில் பங்குதாரர்களாக

ஆக்கப்படுவார்கள், . இதற்கு தேவையான மென்பொருள் (Mobile App) மற்றும் கால் சென்டர் சேவை மூலம் மேலாண்மை செய்யப்படும்.

- அனைந்து ஆட்டோ ஒட்டுனர்கள், இதில் உறுப்பினர்களாக்கப்பட்டு சிறப்பு வாழ்வாதரம் கடன் மற்றும் ஆயுள் காப்பீடு திட்டம் செயல்படுத்தப்படும்.
- ஆட்டோ ஒட்டுனர்கள் குறைந்த பட்சம் ரூ 30,000 முதல் ரூ 50,000 மாத வருமானம் ஈட்ட நடவடிக்கை ஏற்படுத்தப்படும். அதை தாண்டி அவர்களுக்கு லாபத்தில் பங்கு வழங்கப்படும்.

## நகர்புற மேம்பாடு

- திட மற்றும் திரவ கழிவு மேலாண்மை (SLRM) திட்டம் மூலம், அனைத்து மாநகர் மற்றும் நகராட்சிகளில் சுத்தமான குடிநீர், நவீன கழிப்பறை மற்றும் இலவச பொது கழிப்பிட வசதிகள் செயல்படுத்த படும். ஏற்கனவே இருக்கும் இலவச பொது கழிப்பிடங்களை சீராக பராமரிக்கப்படும். அதில் மாற்று திறனாளிகள் உபயோகப்படுத்தும் வகையில் மாற்றி அமைக்கப்படும்.
- மாநகரங்களில், மக்கள் அதிகம் கூடும் இடங்களில் அதிவேக வை-பை(Wi-Fi) வசதி செயல்பாட்டுக்கு கொண்டு வரப்படும்.
- நகர சாலைகளில் பாதசாரிகளுக்கு தனி பாதை அமைத்து தரப்படும்.
- சாலையில் நடப்பவர்க்கு முதல் உரிமையும், சைக்கிளில் செல்வோருக்கு இரண்டாவது உரிமையும், மோட்டார் வாகனங்களில் செல்வோருக்கு மூன்றாவதுஉரிமையும் வழங்கப்பட்டு நடைமுறைபடுத்தப்படும்.
- மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் முதல் கட்டமாக காஞ்சிபுரம், வேலூர், ராணிப்பேட்டை, கடலூர் மற்றும் ஓசூர் போன்ற நகரங்களில் நிறுவப்பட்டு மழைநீர் வடிகால் அமைப்பு செய்யப்படும்.
- அனைத்து மாநகரங்களிலும் பாதாள சாக்கடை மறு சீரமைக்கப்படும். குறிப்பிட்ட இடைவெளியில் வடிகட்டிகள் அமைத்து சிக்கலில்லா பாதாள சாக்கடை சிறப்பாக செயல்பட வழி வகுக்கப்படும்.
- நவீன புறநகரங்கள் அமைக்கப்படும், அது ஒரு கார்பன் நீயுட்ரல் பசுமை நகரமாக உருவாக்கப்படும்.
- தற்போதய நெருக்கடி மிகுந்த தெருக்கள் கண்டறியப்பட்டு ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு அகலப்படுத்தப்படும், அங்கு தேவையான வசதிகள் உருவாக்கப்படும். வீடு தோறும் பழம், கனி கொடுக்கும் மரங்கள் நடுவது கட்டாயாமக்கப்படும்.

- மல்டிலெவல் பஸ் நிலையங்கள், பார்க்கிங் வசதிகளோடு செயல்பாட்டிற்கு வரும்.

## பிளாஸ்டிக் மற்றும் பாலிதீன் பைகள் தடை

- இன்றைக்கு அனைத்து மாசு படுதலுக்கும், மண் வளம், நீர் வளம், நில வளம், கடலில் மீன் வளம், விலங்குகள் அனைத்தையும் அழிக்கும் பொருளாக பிளாஸ்டிக், பாலிதீன் பைகள் மாறிவிட்டது. மத்திய அரசு 50 மைக்ரான் அளவுக்கும் மேல் உள்ள பிளாஸ்டிக், பாலிதீன் பைகளை அனுமதித்து இருக்கிறது. அதை 80 மைக்ரானுக்கும் மேல் இருந்தால் மறுசுழற்ச்சிக்கு சாத்தியம். ஆனால் இது எதுவும் நடக்கப்போவதில்லை. இந்த ஊழல் அரசுகளிடையே.
- எனவே பிளாஸ்டிக் மற்றும் பாலிதீன் பைகள் மற்றும் பொருள்கள் உபயோகம் முற்றிலும் தடை செய்யப்படும்.
- ஏற்கனவே பாழ் பட்டுப்போன பாலிதீன் பைகள், பிளாஸ்டிக் மாசுகளை முற்றிலும் இந்த மண்ணில் இருந்து அகற்றி, SLRM - திர மற்றும் திரவ பொருள் மேலாண்மை திட்டத்தின் மூலம் மறுசுழற்சி செய்வதற்கு கிராமத்திலும், நகரத்திலும் நடவடிக்கை எடுக்கப்படும்.
- அனைத்து கால்வாய்கள், சாக்கடைகளிலும் அது ஆற்று மற்றும் கடல் முகத்துவாரத்தில் தடுப்பு வலை பின்னப்பட்டு, தொடர்ந்து பிலாஸ்டிக் கழிவுகள், நீர் நிலைகள் அசுத்தப்படுத்தாமல் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- அதுமட்டமல்ல, உடனடி நடவடிக்கையாக, இளைஞர்களை மக்கும் பொருள்களில் இருந்து, மஞ்சள் பை, துணிப்பை, பேப்பர் பை, பேப்பர் பொருள்கள், சணல், வாழைமட்டை, போன்ற மக்கும் பொருள்களை தயாரிக்கும் கம்பெனிகள் உருவாக்க சிறப்பு நிதி ஒதுக்கப்பட்டு, தலை சிறந்த தொழில் நுட்பத்தில் இதற்கு சமமான மக்கும் பொருள்களில் நவீன வீட்டு உபயோக பொருள்கள், டீ கப், தட்டு, பைகள், கரண்டிகள் போன்றவைகள் உருவாக்கப்படும்.
- பிளாஸ்டிக் மற்றும் பாலீதீன் கம்பெனிகள் மூடப்படும், இல்லையென்றால் மக்கும்பொருள்கள் கம்பெனிகளாக மாற உதவிசெய்யப்படும்.

## பொருளாதார வளர்ச்சிக்கான பொருளாதார கட்டமைப்பு கொள்கை

- நீடித்த நிலையான அடிப்படை கட்டமைப்புகளான விவசாயம், தண்ணீர், போக்குவரத்து (நீர், நிலம் , ஆகாயம்), சாக்கடை, மழைநீர் சேகரிப்பு, தொழில், சேவை, தொலைதொடர்பு மற்றும் வை-பை (Wi-Fi) இணையம், மின்சார ஸ்மார்ட் கிரிடு கட்டமைப்புகளை சர்வதேச தரத்தில் மாற்றி அமைக்கப்படும்.
- வரும் 10-ஆண்டுகளில் பின் வரும் கட்டமைப்பு வசதி ஏற்படுத்தி நிதி வரவேற்கப்படும்.
- **எரிசக்தி கட்டமைப்பு** - (திட்ட கணிப்பு முதலீடு :1.92.000 எரிசக்தி உற்பத்தியை 50,000 MW ஆக உயர்த்தப்படும். (கூடுதலாக சூரிய ஒளி சக்தி -10000 MW, அனல்மின்சக்தி - 20,000 MW, காற்றாலை - 10000 MW, பயோ காஸ் - 10000 MW) - அடுத்த 10 ஆண்டுகளில்.
- **மாநில மாவட்ட நெடுஞ்சாலைகள்** - (திட்ட கணிப்பு முதலீடு :3,10,000 கோடி (2 முதல் 8 வழி சாலைகள் அமைத்து பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். (மாநில நெடுஞ்சாலை 1000 கி.மீ - 8 வழிச்சாலை, 2000 கி.மீ - 6 வழிச்சாலை, 7000 கி.மீ - 4 வழிச்சாலை, மாவட்ட நெடுஞ்சாலை 5000 கி.மீ - 4 வழிச்சாலை, பிற மாவட்டங்களில் 20000 கி.மீ - 2 வழிச்சாலை).
- மாநில சாலைகள், நீண்ட நாள் உழைக்க உலகத்தரத்துடன் அமைக் கப்படும்.
- நெடுஞ்சாலை ஓரங்களில் நவீன, சுகாதாரமான கழிப்பறை வசதிகள், மருத்துவ மையங்கள், ஓய்வு விடுதிகள், சுகாதாரமான உணவு விடுதிகள், ஆம்புலன்ஸ் சேவைகள் தேவைக்கு ஏற்ப ஏற்படுத்தப்படும்

## A. விமான நிலைய கட்டமைப்பு

- தனிநபர் விமான போக்குவரத்து Trips Per Capita-India (0.04) [சீனா (0.5), பிரேசில் (0.25), மற்றும் மலேசியா (0.54)] 0.55 அதிகரிக்க வழிவகுப்போம். .
- தற்சமயம் விமான போக்குவரத்தில் (Flight Traffic Frequency) இந்தியாவில் 2.89 மில்லியன் மக்களுக்கு 1 விமானம் என்ற அளவில் இருக்கிறது. (சீனா 1.14 மில்லியன் மக்கள், இந்தோனேசியா 0.89 மில்லியன், பிரேசில் 0.63 மில்லியன் மக்களுக்கு1 விமானம்) விமான பயணம் வளர்ச்சியடைந்தால் தான் பொருளாதாரம் வளர்ச்சியடைகிறது என்று அர்த்தம். 1 மில்லியன் மக்களுக்கு 1 விமானம் கட்டமைக்கப்பட வேண்டும்.
- சென்னை விமான நிலையத்தின் கட்டமைப்பை 20 மில்லியன் பயணிகள் இருந்து 50 மில்லியன் பயணிகள் உபயோககிக்கும் வகையில் உயர்த்துவோம்.
- கோவை, திருச்சி மற்றும் மதுரை விமான சேவையை 12 மில்லியன் பயணிகள் உபயோகிக்கும் வகையில் உயர்த்துவோம்.
- இந்திய அரசின் விமான வடிமைப்பு மற்றும் உற்பத்தி திட்டத்தில் தமிழக அரசு இணைந்து, விமானம் கட்டும் தொழில் தனியார் பங்களிப்போடு, பிரேஸில் நாட்டு மாதிரியில், இந்தியா பயணிகள் பயணிக்கும் விமான கட்டுமானத்தில், இந்தியா முதல் மாநிலமாக திகழும். அதனால், விமான தொழில்நுட்ப ஆராய்ச்சி மென்மேலும் பலப்படும், வலுப்பெறும். அதுமட்டுமல்ல, விமான கட்டுமான கேந்திரமாக தமிழகம் உருவாக நடவடிக்கை எடுக்கப்படும். விமானம் மற்றும் வான்வெளி துறையில் பல்துறை ஆராய்ச்சி ஊக்குவிக்கப்படும்.
- தொழில் துறை, உற்பத்தி துறை மற்றும் சேவைத்துறையின் வளர்ச்சி மாநிலம் முழுவதும் பரவலாக்கப்பட்டு, 15% - 20 % வளர்ச்சியை தொடர்ந்து 10 ஆண்டுகளுக்கு அமையும் வகையில் நீடித்த பொருளாதார கொள்கை வகுக்கப்படும்.

**B. சரக்கு போக்குவரத்துக்கான இரயில் சேவை கட்டமைப்பு திட்டம் மற்றும் மோனோ ரயில் திட்டம்**

- தமிழக அரசு அகில உலக சரக்கு போக்குவரத்துக்கான புதிய ரயில் சேவையை தொடங்கும்.
- நவீன தொழில்நுட்பம், அதிவேகம், துரித சேவை, இலாப நோக்கோடு செயல்படும்.
- இரயில் பாதையை அதிக அளவில் (Maximization) சரக்கு சேவைக்கு பயன்படுத்த வழி செய்யப்படும். .
- குறைவாக பயன்படுத்தப்படும் இரயில் பாதைகளை தேவைக்கேற்ப அதிவிரைவு இரயில் சேவைகளுக்கு பயன்படுத்த முயற்சி எடுக்கப்படும்.
- 10 சரக்கு ரயில் சேவை அறிமுகபடுத்தப்படும். .
- மோனோ ரயில் திட்டம் அனைத்து மாநகராட்சிகளிலும் செயல்படுத்தப்படும்.

**C. துறைமுக கட்டமைப்பு**

- இந்திய துறைமுகங்கள் ஆண்டு ஒன்றுக்கு 930 மில்லியன் டன் சரக்குகளை கையாள்கிறது.
- தமிழ்நாட்டு துறைமுகங்களில் ஆண்டு ஒன்றுக்கு 150 மில்லியன் டன் அளவில் சரக்கு போக்குவரத்து நடைபெறுகிறது.
- துறைமுக போக்குவரத்தை 15% அளவில் உயர்த்துவோம்.
- மிகச்சிறிய துறைமுகங்களின் (Minor Ports) வணிகப்போக்குவரத்தை 25% அளவில் உயர்த்துவோம்.
- குளச்சல் துறைமுகத்தை சிங்கப்பூர் துறைமுகம் போல் கட்டமைக்க 10,000 கோடியில் சிறப்பு திட்டம் செயல்படுத்தப்படும்
- தொழில் துறை, உற்பத்தி துறை மற்றும் சேவைத்துறையின் வளர்ச்சி மாநிலம் முழவதும் பரவலாக்கப்பட்டு, 15 சதவிகித வளர்ச்சியை, தொடர்ந்து 10 ஆண்டுகளுக்கு நீடித்த நிலைக்கும் வகையில் பொருளாதார கொள்கை வகுக்கப்படும்.

## தொழில்துறை சீரமைப்பு

- EASE OF DOING BUSINESS ல் தமிழகம் 2020ல் 14 வது இடத்தில் இருக்கிறது. அதை முதலிடத்திற்கு கொண்டு வர தீவிர நடவடிக்கை எடுக்கப்படும்.
- தொழிற்துறை செயல்பாட்டல் அரசு தலையீடு பெரும் அளவில் குறைக்கப்படும், ஒழுங்காக வரி கட்டி, மாசு ஏற்படுத்தாத நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படும்.
- தமிழ்நாட்டில் 2% குறைவான பருத்தி விளைகிறது இருப்பினும் நாட்டின் மொத்த உற்பத்தியில் 40% க்கும் அதிகமாக பருத்தி இழை உற்பத்தி செய்யப்படுகிறது. தண்ணீர் மற்றும் மின்சார பற்றாகுறையால் இது மேலும் பாதிக்கப்படுகிறது.
- பருத்தி உற்பத்திக்கு BTCOTTON முறையில் 50% உற்பத்திக்கு பெரியதிட்டம் செயல்பாட்டுக்கு வரும்.
- மதுரை-தூத்துக்குடி, கோவை-சேலம், சென்னை-ராணிபேட்டை, சென்னை- திருச்சி, ராணிப்பேட்டை- ஓசூர், கோவை-மதுரை "இன்டஸ்ரியல் காரிடார்" ஆக அறிவிக்கப்பட்டு அதற்கு தேவையான கட்டமைப்புகள் உருவாக்கப்படும்.
- ஒரு தொழிற்சாலை மீது பொய்யான குற்றச்சாட்டு சொல்லி, அது பொய் என்று நிரூபிக்கப்பட்டால், அந்த அரசு அதிகாரி மீது துறைசார்ந்த நடவடிக்கை பாயும்.
- கோயம்புத்தூரில் ஏற்றுமதியை மையமாக வைத்து ஜிவல்லரி பார்க் உருவாக்கப்படும். தங்கம் இறக்குமதி வரி 7.5 சதவிகிதித்தில் இருந்து 4 சதவிகிதமாக குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும். அதோடு ஜி.எஸ்.டி மீதான லெவியை 3% TO 1.5% குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- இந்த "இன்டஸ்ரியல் காரிடரில்" விவசாய உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை (Agro Food Processing Unit), உபகரணங்கள் தயாரிப்பு தொழிற்சாலைகளுக்கு முன்னுரிமை அளித்து வேலை வாய்ப்பு உருவாக்கப்படும். அதோடு அனைத்து தொழிற்சாலைகள், தொழிற்சாலை பார்க்குகளுக்கு, தங்கள் நிலத்தை அளிக்கும் விவசாயிகளை, அந்த தொழிலில் பங்குதாரர்களாக்குவோம்.

- SIDCO, TIDCO, TANSIDCO சீரமைக்கப்பட்டு சிறு, குறு மற்றும் பெரும் தொழில் வளர்ச்சிக்கு வித்திட்டு 15%-20% வளர்ச்சியை எட்டும் வகையில் மறு சீரமைக்கப்படும்.
- MSME மறுமலர்ச்சிக்கு ரூ2500 கோடி நிதி ஒதுக்கி மீட்டெடுக்கும் சிறப்பு திட்டம் செயல்படுத்தப்படும்.
- குறுந்தொழில்களுக்கு அடுக்கு மாடி தொழிற்பேட்டை உருவாக்கப்படும். அரசு தொழிற்பேட்டைகளுக்கு நிகராக தனியார் தொழிற்பேட்டை அமைக்க ஊக்கவிப்பு.
- கோவையில் சிறு உற்பத்தி பொருள்களை விற்பனை செய்ய பெரியஅளவில் தொழிற்சந்தை உருவாக்கப்படும்.
- MOTD யில் இருந்து சிறு மற்றும் குறுந்தொழில்களுக்கு விலக்கு அளிக்கப்படும்.
- மாநகராட்சி வழங்கும் RUNNING LICENSE முறை முற்றிலும் நீக்கப்படும்.
- கோவையில் ரயில் பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலை கொண்டுவரப்படும்.
- தமிழகத்தில் "ஏரோ பார்க்" மறுசீரமைப்பு செய்யப்பட்டு, செயல்பாட்டிற்கு தேவையான உடனடி நடவடிக்கைகள் உருவாக்கப்படும்.
- MSME செக்டாருக்கு முக்கியத்துவம் வழங்கி, நிதி மற்றும் நவீன தொழில் நுட்பத்தால் மேம்படுத்தவும், நலிந்த சிறு தொழில் நிறுவனங்களை மீட்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.
- தமிழகத்தை கப்பல் கட்டும் துறையில் முன்னோடியாக்குவோம்.
- சிறப்பு தொழில் கொள்கை உருவாக்கப்பட்டு, ஓற்றை சாரள முறையில் வெளிநாட்டு முதலீட்டை கவர திட்டம். .
- திருப்பூர் சாயக்கழிவுகளை சுத்தகரிக்க தேவையான தொழில் நுட்பத்துடன் விஞ்ஞான வழியில் கழிவு அகற்றும் நிலையம் உருவாக்கப்படும்.

## தொழில் மற்றும் தொழிலாளர்கள் நலன்

- தமிழக பட்டாசு தொழிலை காக்க வெளிநாட்டு பட்டாசு இறக்குமதி முற் ற்றிலும் தடை செய்யப்படும்.
- பட்டாசு தொழிலை நவீனப்படுத்த 1985 பட்டாசு உற்பத்தி சட்டங்கள் மாற்றி அமைக்கப்படும். சிவகாசி பட்டாசு தொழிற்சாலைகள் உலக தரத்திற்கு உயர்த்தி நவீன பட்டாசு தொழிற்சாலைகள் சீனாவுடன் போட்டி போட்டு உலக சந்தையில் வெற்றி பெற நடவடிக்கை எடுக்கப்படும்.
- சிவகாசி SPF City (Safety matches, Printing and Fireworks) - ரூ 2500 கோடியில் உருவாக்கப்படும். அதன் மூலம் 1.60 லட்சம் பேருக்கு மதிப்பு கூட்டப்பட்ட நேரடி வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்படும். இதன் மூலம் மறைமுக வேலைவாய்ப்பும் 2 மடங்கு உருவாக்கப்படும்.
- விபத்தில் சிக்கும் பட்டாசு தொழிலாளர்களுக்கு TERM INSURANCE அறிமுகப்படுத்தப்படும்.
- ஏற்றுமதியை ஊக்குவிக்க தமிழ்நாடு ஏற்றுமதி கவுன்சில் மதுரையில் நிறுவப்படும்.
- பல்லுயிர் பெருக்கம் மற்றும் குழுமம் (Tamilnadu Bio Diversity Board) மதுரையில் நிறுவப்படும்.

### அமைப்பு சாரா தொழிலாளர்கள் நலவாரியம் - UNO - UNORGANISED TO ORGANISED

- தமிழ்நாட்டின் அனைத்து அமைப்பு சாரா தொழிலாளர்கள் நலவாரியம் செயல்படாமல் இருக்கிறது. எனவே அது கலைக்கப்பட்டு அனைத்து தொழிலாளர்களையும் உள்ளடக்கிய சமூக நல மேம்பாட்டு நிறுவனம் அமைக்கப்பட்டு (UNO) அதிக நிதி உதவியுடன் செயல்படும் நிர்வாகம் ஏற்படுத்தி அமைப்பு சாரா தொழிலாளர்களின் நலன் பேணிகாக்கப்படும். இதில் தொழிலாளர்கள் அனைவரும் பங்கு தாரர்களாக்கப்படுவார்கள்.

- அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் நலவாழ்வு திட்டங்கள் தொடரும்.
- கல்வி, படிப்பு, திருமண உதவித்தொகை கூட்டி வழங்கப்படும்.
- தொழில் செய்யவதற்கு தேவையான கடனுதவி தினக்கடன் வங்கிகளில் வாங்கிக்கொள்ளலாம்.
- நலத்திட்டங்களின் பயன்கள் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு எளிய முறையில் கிடைக்க அனைவருக்கும் சுமார்ட் கார்டு வழங்கப்பட்டு வங்கியிலே சென்று வாங்கி கொள்ளும் வகையில் எளிதாக்கப்படும்.
- வாழ்நாள் உறுப்பினர் கட்டணமாக ஒரு நபருக்கு ரூ 2500 வீதம் வைப்பு நிதியாக (Life Time Reserve Premium) அரசே செலுத்தும். இந்த வைப்பு நிதியில் இருந்து வரும் வட்டியில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஆயுள் மற்றும் விபத்து காப்பீடு அரசு செலவில் செய்யப்படும். பணியில் இறந்தால் ரூ 10 லட்சம் வழங்கப்படும்..
- அனைவருக்கும் மருத்தவ காப்பீட்டு திட்டத்தில் இணைக்கப்படுவார்கள். இவர்களுக்கு வேலை வாய்ப்பு உறுதிசெய்யப்படும், நிரந்திர வருமானம் கிடைக்கும் வகையில் பொருளாதார முன்னேற்றம் இவர்கள் வாழ்வில் மறுமலர்ச்சியை கொண்டு வரும்.

## பெண்கள் நல்வாழ்வுக்கான 7 செயல்திட்டங்கள்

இல்லத்தரசிகளுக்கும் வருமானம்: இல்லத்தரசிகளின் கண்ணியம் காக்கப்படுவது மற்றும் அங்கீகாரம் வழங்கப்படுவதை மக்கள் நீதி மய்யம் உறுதி செய்யும்.

1. சீருடைப் பணியில் 50% பெண்கள்: அரசு சேவையில் இருக்கும் ஒவ்வொரு சீருடைத் துறையிலும் 50% பெண்கள் பிரதிநிதித்துவம் உறுதிசெய்யப்படும்.
2. துன்பத்தில் இருக்கும் பெண்களுக்கு பாதுகாப்பு: துன்பத்தில் இருக்கும் பெண்கள் இரவு நேரங்களில் தங்குவதற்கென்றே அவசரகால இலவச விடுதிகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்படுவதுடன், 181 பெண்கள் உதவி எண்ணில் பதிவு செய்யப்படும் புகார்கள் அனைத்தும் தொடர்ந்து கண்காணிக்கும் செயல்முறை நிறுவப்படும்.
3. பெண்களுக்கான தயாரிப்புகளின் பொது விநியோகம்: பெண்களுக்கான சுகாதார நாப்கின்களை அரசாங்கமே கொள்முதல் செய்து, கிராமம் மற்றும் நகர்ப்புற ஏழைப் பெண்கள் மற்றும் இளம்பருவ பெண் குழந்தைகளுக்கு பொது விநியோக முறையில் வழங்கப்படும்.
4. பெண்களுக்கான மாவட்ட அளவிலான மகளிர் வங்கி: பெண்களால்… பெண்களுக்காக… பெண்களுக்கென்று… இயங்கும் மகளிர் வங்கி உருவாக்கப்படும்.
5. ஒற்றை தாய்மார்களுக்கான ஆதரவின் குடை: கல்வி, வேலை, திறன் மேம்பாடு, மற்றும் சமூக பொருளாதார ஆதரவு போன்ற அனைத்து உதவிகளும் தனித்து வாழும் தாய்மார்களுக்கு வழங்கப்படுவது உறுதி செய்யப்படும்.
6. சிறப்பு பராமரிப்பு கட்டமைப்புகள்: அரசாங்கம், தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து பொது இடங்களில் பெண்களுக்கான சிறப்பு உள்கட்டமைப்பு வழங்குவதை உறுதி செய்தல். (பஸ் நிறுத்தங்கள், ரயில் நிலையங்கள் போன்றவை..)
7. இலவச ஆரோக்கியம் மற்றும் கருத்தரிப்பு பரிசோதனைகள்: ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கும் ஒரு முறையாவது அனைத்து பெண்களுக்கும் இலவச ஆரோக்கியம் மற்றும் கருத்தரிப்பு பரிசோதனை வழங்க அரசாங்கம் ஏற்பாடு செய்யும்.

## பத்திரிகையாளர் நலன்

- அங்கிகரிக்கப்பட்ட பத்திரிக்கையாளர்களின் திறன் மற்றும் தனித்திறன்களை மேம்படுத்த இந்திய மேலாண்மை கல்வி நிறுவனத்தில் (IIM) ஊக்கத்தொகையுடன் கூடிய 6 மாதம் முதல் 1 வருட படிப்பு மற்றும் பயிற்சி வழங்கப்படும்.
- அங்கிகரிக்கப்பட்ட பத்திரிக்கையாளர்களுக்கு நவீன பசுமை வீடுகள் (Smart Green House) கட்டிக்கொடுக்கப்படும்.
- அங்கிகரிக்கப்பட்ட பத்திரிக்கையாளர்களுக்கு ஆயுள் மற்றும் விபத்து காப்பீடு மற்றும் பணியில் இருந்து மரணமடையும் பத்திரிக்கையாளர்களுக்கு ரூ 10 லட்சம்.
- அங்கிகரிக்கப்பட்ட பத்திரிக்கையாளர்களுக்கு ஒய்வூதியம் ரூ 20,000 வழங்கப்படும்.
- அங்கிகரிக்கப்பட்ட பத்திரிக்கையாளர்களுக்கு Accridation Card வழங்கும் நடைமுறை சீரமைக்கப்படும்.

## திரைப்படத்துறை

- தமிழக திரையரங்குகள் பைபர்-டு-ஹோம் (Fiber to Home) முறையில் இணைக்கப்பட்டு மின் ஆளுமையில், பாதுகாப்புடன், யாரும், யாரையும் ஏமாற்றுவதற்கு வழியின்றி, சினிமா தொழிலில் வரும் வருமானம் அனைவருக்கும் நியாயமாக, வெளிப்படையாக கிடைக்கும் வகையில் மின்அணு கட்டமைப்பு உருவாக்கப்பட்டு, அதன் கீழ் அனைத்து தியேட்டர்களும் கொண்டுவரப்பட்டு, திரைப்படங்கள் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும்.
- கிராமப்புறத்தில் ஒன்றிய அளவில் கட்டமைக்கப்படவிருக்கும் I-Max தியேட்டர்களில் ஒரே நேரத்தில் புதிய திரைப்படம் வெளியிடும் வசதி.
- திரைத்துறை கலைஞர்களின் படைப்பாற்றலை (Creativity) காப்புரிமை செய்து அவர்களுக்கு 10% சதம் விற்பனையில் உரிமை பங்கு(Royalty) வழங்கும் சட்டம் இயற்றப்படும்.

## தகவல் தொழில் நுட்பத் துறை மேம்பாடு

- தமிழ்நாட்டு அரசு செய்ய வேண்டிய அனைத்து தகவல் தொழில் நுட்ப பணிகளுக்கும் தமிழ்நாட்டு தகவல் தொழில் நிறுவனங்களுக்குதான் முன்னுரிமை கொடுத்து பணி வழங்கப்படும். கூட்டு குழுமங்கள் டென்டர் எடுத்தால் அதில் தமிழ்நாட்டு நிறுவனங்கள் பெரிய பங்கு தாரர்களாக இருக்க வேண்டும்.
- தமிழ்நாட்டில் முதல் தலைமுறை தகவல் தொழில் நுட்ப நிறுவனங்களுக்கு ஐடி பூங்காக்களில் முன்னுரிமை, டென்டரில் 25 சதவிகிதம் மண்ணின் மைந்தர்களுக்கு, போன்ற சலுகைகள் தான் அவர்களை போட்டிகளை சமாளித்து உலகத்தோடு போட்டி போட வழிவகுக்கும் என்று நம்புகிறோம்.
- செயல்படாத தகவல் தொழில்நுட்ப பூங்காக்களை மேம்படுத்தி, சிறப்பாக செயல்படுத்தபடும்.
- செயல்படாத கிராமப்புற BPO மையங்களின் இன்றைய வடிவத்தை மாற்றம் செய்து செயல்படுத்தபடும்.
- மாவட்டம் தோறும், கிராமங்களில் 250 கிராமப்புற BPO மையங்கள் ஏற்படுத்தப்பட்டு, அவர்களுக்கு அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள் மூலமாக வேலைவாய்ப்பு ஏற்பாடு செய்யப்படும்.
- இதன் மூலம் 15,000 இளைஞர்களுக்கு நேரடியாகவும் மற்றும் 1 இலட்சம் கிராம மக்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பும் ஏற்படுத்தப்படும்.

## ஜவுளி துறை

### A. பருத்தி உற்பத்தி இரண்டு மடங்கு

- பாதியாக குறைந்துவிட்ட பருத்தி உற்பத்தி மற்றும் விளைச்சலை இரண்டு மடங்காக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
- பருத்தி விவசாயிகளின் தனிநபர் வருமானம் 2 மடங்காக உயர்த்த சிறப்பு திட்டங்கள் தீட்டப்படும்.
- 100 லட்சம் பேல் தேவைப்படும் தமிழகத்தில், 5 லட்சம் பேல் தான் உற்பத்தியாகிறது. எனவே வரும் 10 ஆண்டுகளில் பருத்தி உற்பத்தியில் சுயசார்பு எட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

### B. ஆடை அலங்கார பொருட்களுக்கான சிறப்பு பொருளாதார மண்டலங்கள்

- விவசாயிகளைப் பங்குதாராகக் கொண்ட 6 ஆடை அலங்கார (GARMENT) சிறப்பு பொருளாதார மண்டலங்கள்(கோவை, மதுரை, கரூர்,பெரம்பலூர், திருச்சி, விருதுநகர்) துவக்கப்படும்.
- இதன் மூலம் 8 லட்சம் பேருக்கு புதிய வேலை வாய்ப்பு உருவாக்கப்படும்.

### C. கைத்தறித் துறை மறுசீரமைப்பு

- நலிவடைந்த கைத்தறித் துறை, கைத்தறி கூட்டுறவு சங்கங்களை மீண்டும் சீரமைத்து, நெசவாளர்களுக்கு புதிய டிசைனில் ஆடைகள், உடைகள், வீட்டு அலங்காரப் பொருள்கள் உருவாக்க சிறப்பு பயிற்சி.
- 6 ஆடை அலங்கார பூங்காக்கள் (Apparel Parks) உருவாக்கப்படும்.
- கைத்தறிப் பொருள்கள் ஏற்றுமதிக்கு கைத்தறி ஏற்றுமதி கார்ப்பரேஷன் உருவாக்கப்படும்.

## காவல்துறை சீரமைப்பு

- அனைத்து காவல் நிலையங்களும் மின்னனு ஆளுமையின் கீழ் கொண்டு வரப்படும்.
- புலனாய்வு மற்றும் சைபர் குற்றங்களை விசாரிக்கும் அமைப்பை (intelligence and Cybercrime cell) நவீனப்படுத்தப்படும்.
- காவல் துறை சார்ந்த பழைய சட்டங்கள் மறுபரிசீலனை செய்யப்பட்டு, நவீன குற்றச்செயல்களை தடுக்கும் வகையில் தேவையான சட்டம் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.
- அதிரடிப்படை, சிறப்பு காவல் படை போன்றவைகளின் எண்ணிக்கைகள் கூடுதலாக 1 லட்சம் உயர்த்தப்பட்டு, செயல் பாடுகள் நவீன படுத்தப்படும்.
- சட்டம் ஒழுங்கு, போக்குவரத்து, VIP பாதுகாப்பு படைகள் தனியாக பிரிக்கப்பட்டு, அவர்களது எண்ணிக்கை இரண்டு மடங்காக உயர்த்த வழி வகை செய்யப்படும். தற்போதைய VIP பாதுகாப்பு முறை மாற்றியமைக்கப்பட்டு மோட்டார் பைக் எஸ்கார்ட்ஸ் போர்ஸ்(Motor Bike Escorts) ஆக மாற்றப்படும். VVIP, VIP ரூட் பாதுகாப்பு முறை Motor Bike Escorts மூலம் மாற்றி அமைக்கப்படும்.
- முக்கியமான பாதுகாப்பு பணியில் ஈடுபடும் பெண் காவலர்களுக்கு அழைப்பின் பேரில் நடமாடும் கழிப்பறை வசதி செய்து தரப்படும்.
- பெண் காவலர்களுக்கு ஏற்ற முறையில் சீருடை மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- தேசிய பாதுகாப்பு கல்வி நிலையதிற்கு (National Defence Academy) இணையாக தமிழ்நாடு காவல்துறை குற்றவியல் புலனாய்வு மற்றும் சைபர் கிரைம் கல்லூரி (TN Police Academy for Investigation, Crime & Cyber Crime College) தொடங்கப்படும்
- நவீன புதுவகை விசாரணை படை (Investigation Wing) உருவாக்கப்படும். அவர்கள் நவீன முறையில் விசாரித்து, குற்றவாளிகளுக்கு தண்டனை வாங்கிக்கொடுக்கும் பணியை மட்டும் செய்வார்கள். இவர்கள் சர்வ தேச காவல்துறையின் அனைத்து தகுதிகளும் பெற்றவர்களாக இருப்பார்கள். போக்குவரத்து காவல்துறை பணிச்சுமை சர்வ தேச தொழில்நுட்பத்தின் மூலம் குறைக்கப்படும்.

- ஆளில்லா விமானம் மூலம் உளவு கண்காணிப்பு படை(MOBILE UAV Force) மாவட்டம் தோறும் உருவாக்கப்படும்.
- பணியில் மரணமடையும் காவலர்களின் குடும்பத்திற்கு ரூ 20 லட்சம் சிறப்பு திட்டம். வாரிசு வேலைகள் வழங்க துரித நடவடிக்கை எடுக்கப்படும்.
- வீர, தீர செயல்களுக்கு சிறப்பு ஊக்கத்தொகை வழங்கப்படும்.
- காவலர்களுக்கு 3 ஷிப்ட் முறை வேலை கொண்டு வரப்படும். வாரத்தில் ஒரு நாள் விடுமுறை கொண்டுவரப்படும். தமிழ்நாடு முழுவதும் விடுமுறை நாளில் பணி செய்யும் அனைவருக்கும் ETR (Extra Time Remuneration) ரூ 1000 கொடுக்கப்படும். மற்ற துறைகளைப்போல ஊதிய முரண்பாடு களையவும், ஊதியம் உயர்த்த உயர்மட்ட குழு அமைத்து அதன் பரிந்துறை 3 ஆம் ஆண்டிற்குள் அமல்படுத்தப்படும்.
- பதவி உயர்வு காவலர்களுக்கு மிகவும் பிரச்சனை. காவலர் முதல் உயர் அதிகாரிகள் வரை அவர்களது பதவி உயர்வை வரன்முறை படுத்த உயர்மட்ட குழு அமைத்து சீரமைக்கப்படும். இப்போது இருக்கும் பதவி உயர்வு கால அளவை குறைத்து அவர்களுக்கு பணியில் ஆர்வம் ஏற்படுத்தப்படும்.
- பெண் காவலர்கள் பாலியல் தொல்லைக்கு உள்ளாக்கப்படுவதை தடுப்பதற்கு சிறப்பு திட்டம் அமலாக்கப்படும்.
- காவலர்கள் பணியில் ஏற்படும் குறை, நிறைகளை கலைவதற்கு - மாவட்டம் தோறும் சிறப்பு நீதிமன்ற குழு ஏற்படுத்தப்படும்.
- காவல் துறையினர் அவர்கள் குடும்பத்திற்கும் சிறப்பு மன வளக்கலை பயிற்சி, சிறப்பு மருத்துவ முகாம் நடத்தப்படும்.

## அரசு ஊழியர்கள் நலன்

- அரசு ஊழியர்களுக்கு தனி கடன் வங்கி தொடங்கப்படும். குறைந்த வட்டியில் சம்பளப்பிடித்ததில் தனிக்கடன் வாங்கிக்கொள்ளலாம்.
- அரசு ஊழியர்களுக்கு ஊதியத் திருத்தம் பத்தாண்டு துவக்கத்திலேயே அமலாக்கம். ஊதியக்குழு பரிந்துரைப்படியே ஊதிய நிர்ணயம்.
- நல வைப்புநிதியை முன்போல் மாற்றலுக்கு மாற்று திட்டம் பரிசீலித்து நடவடிக்கை.
- அவசியம் தவிர்த்து மற்றவர்களுக்கு வேண்டுதல் இடமாற்றம் மட்டும்.
- அரசின் அனைத்து காலிப் பணியிடமும் வெளிப்படையாக, நேர்மையாக சமூக நீதியின் அடிப்படையில் நிரப்புதல்.
- தற்காலிக அரசு ஊழியர் மற்றும் தற்காலிக ஆசிரியர் பணி நிரந்தரம்.
- லஞ்சம் பெறாத அரசு ஊழியர்கள் பாராட்டப்பட்டு, கவுரவிக்கப்படுவார்கள், 5 ஆண்டு பணி நீடிப்பு வழங்கப்படும். அவர்களது நேர்மையை பாராட்டி, அவர்களது வாரிசுகளுக்கு அரசு வேலை வாய்ப்பு, தகுதி தேர்வில், நேர்முகத்தேர்வில் கூடுதலாக 5 மதிப்பெண்கள் வழங்கப்படும்.
- லஞ்சம், திறமையின்மை, வெட்டி பேச்சு, அடுத்தவர்களை பழிவாங்கும் எண்ணம் கொண்டவர்கள் கண்டறியப்படுவார்கள், அவர்களுக்கு பணி மாற்றல், இடைநீக்கம். இதில் 3க்கும் மேற்பட்ட இடைநீக்கம் பெற்றால் அவர்கள் பணியில் இருந்து நீக்கம். உயர் அதிகாரிகள், சரியான காரணம் இன்றி மற்ற உடன் வேலை செய்யும் அதிகாரிகளை பணி நீக்கம் செய்தார்கள் என்று தெரியவந்தால், அவர்கள் பணி நீக்கம் செய்யப்படுவார்கள்.
- தேவையில்லாமல் அதிகாரிகளின் மேல் நிலுவையில் உள்ள வழக்குகள் திரும்ப பெறப்படும்.
- மக்களுக்கும், மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கும் மற்றும் அரசு அதிகாரிகளுக்கும், அமைச்சர்களும் உள்ள இடைவேளி குறைக்கப்படும்.

- அதிகாரிகளின் செயல்பாடுகள் அவர்களது திறமையின் அடிப்படையில் மதிப்பிடப்படுவார்கள், கட்சி சார்பற்ற முறையில் திறமைக்கும், செயல்பாட்டிற்கும், சாதனைகளுக்கும் மதிப்பும், கௌரவமும் வழங்கப்படும்.
- பணியிலிருக்கும் பொது அரசு ஊழியர்கள் இறந்தால் ரூ 20 லட்சம் வழங்கும் சிறப்பு திட்டம் அமலாக்கப்படும்.

## தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் அறிவுத்திறன்

- தொணடு நிறுவனங்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள், மக்கள் பணியாற்ற வருவதை வரவேற்று, அவர்களை அரசின் பணிக்கு இடையூறு என்று கருதாமல், அவர்களோடு இணைந்து மக்கள் பணியாற்றும் செயல்பாட்டு வழிமுறை வகுக்கப்படும். நல்ல நோக்கத்தோடு பணியாற்றும் தொண்டு நிறுவனங்களையும், சமூக ஆர்வலர்களையும் ஊக்கப்படுத்தி, அவர்களது சேவைகளை மென்மேலும் மெருகூட்டும் வகையில் திட்டங்கள் தீட்டப்பட்டு, அதை நிறைவேற்ற ஒரு குழு அமைக்கப்படும்.

## பால் வளத்தில் மீண்டும் ஒரு வெண்மை புரட்சி

- 19 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் யூனியன்கள் மூலம் தினமும் 2018-19ல் 33.23 லட்சம் லிட்டர் உற்பத்திசெய்யப்படுகிறது. இது 3 மடங்காக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு, இந்தியா முழுவதும் விற்பனை செய்யும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, மதிப்புகூட்டப்பட்டு ஏற்றுமதிக்கு வித்திடப்படும்.
- 12500 கிராம ஊராட்சிகளில் சீரமைக்கப்பட்ட பால் பண்ணைகள் தொடங்கப்படும்.
- 100 பெரிய பால் பண்ணைகள், பால் பதப்படுத்தும் நிலையங்கள், மாவட்டந்தோறும் மதிப்பு கூட்டப்பட்ட பால் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் உருவாக்கப்படும்.
- இதன் மூலம் 50,000 முதல் 1 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு உருவாக்கப்படும்.
- மானாவாரியாக வளரும் புல், கரும்பு சோகை சைலோவில் சேமித்து, கால்நடை அதிகமாக உள்ள கிராமத்திற்கு கூட்டு முயற்சியில் (PPP) பசுந்தீவனம் சேகரித்து விநியோகிக்கப்படும்.
- மாட்டுத் தீவனம் பயிரிட 5 மாடுகளுக்கு ஒரு ஏக்கர் என்ற அளவில் குத்தகைக்கு கொடுக்கப்படும்.
- கெட்டி தீவனம் (Concentrate) ஒரு கன்றுகுட்டிக்கு ஒரு கிலோ என்ற அளவில் 30 லட்சம் கன்றுகளுக்கு 6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## அறநிலையத்துறை

- ஆக்கிரமிக்கப்பட்ட கோவில் நிலங்கள் மீட்கப்பட்டு வருமானம் அதிகரிக்கப்படும்.
- மீட்கப்பட்ட கோவில் நிலங்களில் எரிசக்தி தோட்டங்கள், தோப்புகள் உருவாக்கப்பட்டு அதன் மூலம் வரும் வருவாய் கோவில்களுக்கு கொடுக்கப்படும்.
- பாழடைந்த கோவில்கள், புராதான கோவில்கள் மறுபுனரமைக்கப்படும். அது வரலாற்றின் தொன்மை மாறாமல், ஆவனப்படுத்தப்பட்டு, அப்படியே உயிர்பிக்கப்படும்
- அனைத்து கோயில்களிலும் தமிழில் அர்ச்சனை கட்டாயமாக்கப்படும். மற்ற மொழிகளில் வேண்டுவோருக்கு அந்த மொழியில் அர்ச்சனை செய்ய வழி வகை செய்யப்படும்.
- கிராம பூசாரிகளின் வழி வழி வந்த உரிமை, அவர்களது குல தெய்வ கோயில்களை நிர்வகிக்கும் உரிமை அவர்களுக்கு கிடைக்க சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களுக்கு மாத ஊக்கத்தொகை வழங்க அறநிலையத்துறையின் சார்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.
- அனைத்து கிராம குலதெய்வ கோவில்களில் கும்பாபிஷேகம் செய்யவும், அதன் கட்டமைப்போ மேம்படுத்த நிதிஉதவி அளிக்கப்படும்.
- இந்து கோவில்கள், சைவம், வைணவ கோவில்கள் மற்றும் அது சார்ந்த குளங்கள் புணரமைக்கப்பட்டு சீரமைக்கப்படும்.
- அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்படும். கோவில் பூசாரி பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கப்படும்.
- கோவில் பூசாரிகளின் நிரந்தர வருமானத்திற்கு அரசு வழிவகை செய்யப்படும், அதன் மூலம் அவர்களது தெய்வீக பணி பாதிக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- தமிழக கோவில் மற்றும் ஆன்மீக சுற்றுலாவிற்கு சிறப்பு திட்டம் அமலாக்கப்படும். அங்கு பயணம் செய்வோர்களுக்கு தேவையான சலுகைகள் வழங்கப்படும்.
- சிறுபான்மையினர் வழிபாட்டிற்கு எந்த வித இடையூறுகளையும் அனுமதிக்காது மற்றும் அவர்களது பாதுகாப்பு முற்றிலும் உறுதி செய்யப்படும். சிறுபான்மையினரின் ஜெருசலேம் மற்றும் மக்கா

பயணத்திற்கு இப்போது இருக்கும் நிதி உதவி சலுகைகள் அவர்களிடம் கலந்தாலோசித்து அதன் அடிப்படையில் உயர்த்தி வழங்கப்படும். இதற்கான மாணியங்கள் இரண்டு மடங்காக உயர்த்தப்படும்.

## விளையாட்டுத்துறை

- தமிழ்நாட்டில் ஒலிம்பிக் போட்டிக்கான தகுதியை ஏற்படுத்தும் வகையில் ஒரு உலகதரம் வாய்ந்த அகாடமி உருவாக்கப்படும். இந்த ஒலிம்பிக் போட்டிகளில் தேர்வு பெற கிராமங்கள், நகரத்தில் தேடி சென்று வீரர்களை கண்டறியும் சிறப்பு திட்டம் வருந்தோரும் நடைபெறும். அவர்களது படிப்பிற்கும், ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்வதற்கான அனைத்து செலவுகளையும் அரசு மற்றும் தனியார் இணைந்து உருவாக்கும் நிதியில் செயல்படுத்தப்படும். அவர்களுக்கு வேலைவாய்ப்பையும் உறுதி செய்யும்
- இந்த ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ளும் விளையாட்டு வீரர்களுக்கு உதவும் நிறுவனங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்படும்.
- பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் ஊக்குவிக்கப்படும். பாரம்பரிய கலைகள் போற்றி வளர்க்கப்படும்.
- சிலம்பம், கபடி, களரி, வாள்வீச்சு, மற்போர், வர்மம், மான்கொம்பு, நீ ச்சல், ஒட்டப்பந்தயம் ஊக்குவிக்கப்படும் நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், ஜிம்னாஸ்டிக், டேக்வான்டோ போன்ற அனைத்து ஒலிம்பிக் விளையாட்டு போட்டிகளுக்கும் மாவட்டம் தோறும் சிறப்பு விளையாட்டு திடல் ஒன்று அமைக்கப்பட்டு பராமரிக்கப்படும்.
- உலக தரம் வாய்ந்த பயிற்சியாளர்களை கொண்டு விளையாட்டு உபகரணங்கள், சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்படும்.
- தேசிய, சர்வதேச அளவிலான போட்டிகளில் திறமையை வெளிபடுத்தும் விளையாட்டு வீரர்கள் ஊக்குவிக்கப்பட்டு சிறப்பு கல்வி, வேலைவாய்ப்பு சலுகைகள் வழங்கப்படும். அது மட்டுமல்ல அவர்களுக்கு தமிழ்நாடு சிறப்பு விளையாட்டு விருது மற்றும் பணமுடிப்பு வழங்கப்படும்.
- அவர்களை மாநில சிறப்பு தூதர்களாக அங்கிகரிக்கப்பட்டு பல்வேறு துறைகளில் கவுரவப்படுத்தப்படுவார்கள்.
- நேர்மையான, வெளிப்படையான தேர்வின் மூலம் விளையாட்டு வீரர்கள் அடிமட்டத்திலிருந்து தேர்வு செய்யப்படுவார்கள். அதை தெரிந்தெடுக்கும் குழுவிற்கு தகுதி வரையருக்கப்படும், அதில்

பல்வேறு தரப்பட்ட வல்லுனர்கள் இடம் பெற வழி வகை செய்யப்படும்.

## சுற்றுலா மேம்பாடு

- கொடைக்கானல், ஊட்டி, ஏற்காடு, தேனி, ஒகேனக்கல், குற்றாலம், மகாபலிபுரம், சென்னை, கன்னியாகுமரி, இராமேஸ்வரம், மதுரை, தஞ்சாவூர் - ரூ 5000 கோடியில் மேம்பாடு செய்யப்படும். இது மாலத்தீவு சுற்றுலா கொள்கை மாடலில் செயல்படுத்தப்படும்.
- பக்தி சுற்றுலா, புரதான சுற்றுலா, மலை மற்றும் அருவி சுற்றுலா, கடற்கரை சுற்றுலா, கல்வி சுற்றுலா, மருத்துவ சுற்றுலா போன்ற சுற்றுலா திட்டங்கள் அதற்குரிய கட்டமைப்புகள், போக்குவரத்து வாய்ப்புகள் உருவாக்கப்படும்,
- சென்னை, மதுரை, கோவை, திருச்சி மற்றும் சேலம் ஆகிய நகரங்களில் அறிவியல் பூங்காவும், பொழுது போக்கு பூங்காவும் அமைக்கப்படும்.
- இந்தியா சுற்றுலாப்பயணிகளில் தமிழகத்தின் பங்கு 15% சதம் ஆகும். 2015-ம் ஆண்டு தமிழக சுற்றுலாதுறையின் வளர்ச்சி 16% ஆகும் .இதை 20% சதம் என்ற அளவில் உயர்த்துவோம்.
- தமிழ்நாட்டில் 2023ல் தினமும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை 41,000 ஆக உயரும் என்றும், உள்நாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தினமும் 13 லட்சமாக உயரும் என்று கணிக்கப்பட்டிருக்கிறது, ஒவ்வொரு 10 லட்சம் சுற்றுலா பணிகளின் வருகைக்கு சுமார் 30,000 கூடுதல் பயணிகள் தங்கும் அறைகள் உருவாக்கப்பட வேண்டும், அதனால் 6300 பேருக்கு கூடுதல் வேலைவாய்ப்பு உருவாகும்.
- ஆண்டு தோறும் 15 மில்லியன் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் மற்றும் 400 மில்லியன் உள்நாட்டு சுற்றுலா பயணிகள் மூலம் ஹோட்டல் மற்றும் ரெஸ்ட்ரான்ட் துறையில் முதலீடு மற்றும் மேம்பாடு எய்த நடவடிக்கை எடுக்கப்படும், அடுத்த 10 ஆண்டுகளில் இதை இரண்டு மடங்கிற்கு மேல் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- இதனால் அடுத்த 10 ஆண்டுகளில் இந்த துறையில் மட்டும் சுமார் 1 கோடி பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

## முதியோர்கள் மற்றும் ஆதரவற்றோர் நலன்

- ஒவ்வொரு மாவட்ட தலைநகரங்களிலும், முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற முதிய ஆண்கள் மற்றும் பெண்கள், மற்றும் ஆதரவற்ற குழந்தைகள் தங்குவதற்கு சிறப்பு தங்கும் விடுதிகள் ஏற்படுத்தப்படும்.
- மாவட்டங்களில் சிறப்பாக பணிசெய்யும் NGO-க்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுடன் அரசு இந்த திட்டத்தை அமல்படுத்தும்.
- வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ள முதியோர், உடல் ஊனமுற்றோர், மாதஒய்வூதியம் ரூ 3000 ஆக உயர்த்திக்கொடுக்கப்படும்.
- கணவனால் கைவிடப்பட்டோருக்கு, கைம்பெண்களுக்கு மாதம் குறைந்தது ரூ 10,000 சம்பாதிக்கும் அளவில் பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பு ஏற்படுத்தி தரப்படும்
- 75 வயதான முதியோர்கள் அனைவருக்கும், 80 சதவிகிதம் உடல் ஊனமுற்றோர், கணவனால் கைவிடப்பட்ட வேலை செய்ய இயலாத பெண்கள் மற்றும் கைம்பெண்களுக்கு மாத உதவித்தொகை ரூ 5000 வழங்கப்படும்.
- சர்க்கரை நோயாளிகள், இதய நோயாளிகள், உடல் பருமன், கண் பார்வை போன்ற குறைபாடு உள்ளவர்களுக்கு சிறுதானிய டிஸைனர் உணவு பொருள்கள், அதை சமையல் குறிப்போடு, ஒவ்வொரு மாதத்திற்கும், அவர்களது தேவைக்கேற்ப அனைத்து தரப்பினருக்கும் ரேஷன் கடைகளில் நியாய விலையில் கிடைக்கும். இந்த சிறுதானியங்களை, அலைபேசி மூலமாக ஆர்டர் செய்தால், அவர்கள் வீட்டிற்கே டெலிவரி கொடுக்கப்படும்.

## தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினர் நலன்

- மாவட்டம் தோறும் ஒரு உறைவிட பள்ளி சர்வசேத தரத்தில் உருவாக்கப்பட்டு அதில் இந்த பிரிவை சேர்ந்த மாணவர்கள் தரம் உயர்த்த முதல் நடவடிக்கை எடுக்கப்படும். இதே போல் அரசுப்பள்ளிகள் தரமும் உலக தரத்தில் அடுத்த 10 ஆண்டுகளில் தரம் உயர்த்தப்படும்.
- வேலைவாய்ப்பு உள்ள துறைகளில் சிறப்பு பயிற்சி அளிக்கபட்டு அவர்கள் வேலைவாய்ப்புக்கு தகுதி உடையவர்களாக உருவாக்கப்படுவர் .
- சுய தொழில் தொடங்க முனைவோருக்கு, 25% மானியத்தில் கடன் உதவித்தொகை வழங்கப்படும்.
- சுய தொழில் முனைவோர் பயிற்சி, அரசு பணி மற்றும் புதிய வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படும்.
- தனித்திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டு அவர்களை உலக தரத்தில் சிறந்த தனித்திறன் பெற்றவர்களாக உருவாக்கப்படுவார்கள், மேல்படிப்பிற்கு ஊக்குவிக்கப்படுவார்கள்.
- மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவில் சாதிவாரி கணக்கெடுப்பிற்கு பின் யாரையும் பாதிக்காத வகையில் நியாமான உள் ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

## வரிச்சீரமைப்பு

- ஊழலுக்கு வழிவகுக்கும் வரி விதிப்பு முறை நீக்கப்பட்டு, வெளிப்படையான வரிக்கொள்கை அமலாக்கப்படும் .
- வெளிப்படையான வரிக்கொள்கை, நேர்மையாக உழைக்கும் மக்களை வரிகட்ட ஊக்குவிப்பதன் மூலமும், விவசாயம், தொழில், உற்பத்தி, சேவைத்துறைகளை தொடர்ந்து வளர்ச்சிப்பாதைக்கு கொண்டு செல்வதின் மூலமும், தொழில் வளத்தை அதிகரிப்பதன் மூலம் வரிவருவாயை அதிகப்படுத்த முடியும் என்று நம்புகிறோம்.
- அதுமட்டுமல்ல, ஊழலை ஒழிக்கும் சட்டங்கள் இயற்றுவதின் மூலம், 40 சதவிகிதம் வரி வருமானம் ஊழல் வாதிகளின் கைகளில் இருந்து அரசுக்கு வரும் வகையில் சட்டங்கள் உருவாக்கப்படும்.
- இதன் மூலம் நீடித்த தொழில் மற்றும் உற்பத்தி திட்டங்களை தொடங்குவதின் மூலம் ரூ 50,000 கோடி கூடுதல் இலக்கு நிர்ணயித்து செயல்பாட்டிற்கு வரும். 3 வது ஆண்டில் இந்த இலக்கு எட்டப்படும்.
- பத்திரப்பதிவு, DTCP, CMDA வில் நடக்கும் ஊழல் முற்றிலும் கலையப்பட்டு, வரி விதிப்பு குறைக்கப்படும்.
- மத்தியில் வருமான வரி நீக்க முயற்சி மேற்கொள்ளப்படும், செலவு வரியை அமல்படுத்த முயற்சி மற்றும் நடவடிக்கை எடுக்கப்படும்

## வணிகர்கள் நலன்

- சில்லரை வியாபாரத்தில் அன்னிய முதலீடு தடை தொடரும்.
- ஆன் லைன் வர்த்தகம் தடைசெய்யப்படும் அல்லது வரைமுறைப்படுத்த சட்டம் கொண்டு வரப்பட்டு அதன் மூலம் ஆன்லைன் வர்த்தகத்தில் ஈடுபடும் நிறுவனங்கள், உள்ளூர் வணிகர்களுடன் ஒப்பந்தம் செய்து, அவர்கள் மூலமாக வியாபாரம் நடக்க இருவரும் வெற்றி பெரும் (win-win situation) ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தால் அனுமதி வழங்கப்படும்.
- அனைத்து வசதிகளும் கொண்ட நவீன மக்கள் சந்தை உருவாக்கப்படும் .
- வியாபரிகள் தங்கள் திறமையை பயன்படுத்தி வியாபாரம் செய்யவேண்டும், அரசு வியாபாரத்தை பெருக்க தேவையான கட்டமைப்புகள், நிதி உதவியை முதலீடாக ஏற்பாடு செய்து கொடுக்கும்.
- பதிவு செய்து வியாபாரம் செய்யும் வணிகர்களுக்கு, தங்கள் வணிகத்தை பெருக்க தேவையான முதலீடு, தனிக்கடன் வங்கிகள் மூலமாக கொடுக்கப்படும். அதன் பற்று பணப்பரிமாற்றம் மூலம் நடைபெற வழிவகை செய்து வியாபாரத்தை பெருக்கவும் சிறப்பு திட்டம் செயல்படுத்தப்படும்.
- சிறுவணிகத்தை நலிவடையச் செய்யும் FDI யின் தலையீடு தடுக்கப்படும்.

## தமிழ்நாடு தினக்கடன் மற்றும் மேம்பாட்டு வங்கி

- உழைப்பவரைத் துயரத்திலும், உறிஞ்சுபவரை உயரத்திலும் வைக்கும் கந்து வட்டிக் கொடுமையால், உழைக்கும் வர்க்கம் கண்ணீரில் கலங்குவதையும், தற்கொலைக்குத் தள்ளப்படுவதையும் கருத்தில் கொண்டு, முதன்முறையாக "தினக்கடன் வங்கி" (DLB - Daily Loan & Development Bank) தொடங்கப்பட்டு தினசரி வியாபாரிகளுக்கு குறைந்த வட்டியில் (6 சதவிகிதம் ஆண்டு வட்டியில்) தினக்கடன் கிடைக்கும்.
- தினக்கடனில் 1 சதவிகிதம் காப்பீடு செய்ய நடைமுறைப்படுத்தப்படும்.
- இதற்கு அனைத்து வங்கிகளிலும் தனிப்பிரிவு ஏற்படுத்தி செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.
- இதற்கு தேவையான பட்ஜெட் முதலில் ரூ 1000 கோடி ஒதுக்கப்படும். அதை பெறுவதற்கான நடைமுறை எளிதாக்கப்பட்டு, ஒவ்வொரு வங்கியிலும் இதற்கென சேவை மையங்கள் உருவாக்கப்படும்.
- தினக்கடனில் 1 சதவிகிதத்தை காப்பீடு செய்து, அதன் பலன் இந்த திட்டத்தை உபயோகிப்பவர்களின் குடும்பத்திற்கு பலன் ஏற்படும் வகையில் நடைமுறைப்படுத்தப்படும்.
- வருடாவருடம் இதை தினமும் ஒழுங்காக கட்டி வரும் வியாபாரிகளுக்கும், சிறு, குறுந் தொழில் புரிவோருக்கு வட்டி குறைந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்
- இதற்கென பட்ஜெட்டில் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.
- நிலத்தையும், மண்ணையும் சொத்தாக மதித்துதான் வங்கி கடன் கொடுக்கும் என்ற நிலையை மாற்றி, அறிவை சொத்தாக மதித்து, நேர்மைக்கு மதிப்பளித்து குறைந்த வட்டியில் கடன் கொடுத்து, நாட்டை அறிவு சார்ந்த நாடாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்

## தமிழ்நாடு அறிவுசார் சொத்து மேம்பாட்டு வங்கி

- மாணவர்களும், இளைஞர்களும், தொழில்முனைவோர்களும், மக்களும் தனது அறிவால் கண்டுபிடிக்கும் புது கண்டுபிடிப்புகளை ஊக்கப்படுத்தும் விதமாக "அறிவுசார் சொத்து மேம்பாட்டு வங்கி" (Intellectual Property Development Bank) ரூ 5000 கோடியில் உருவாக்கப்படும். .
- இதில் 25% அரசும், 75% தனியார் (PPP) என்ற வகையில் முதலீடு செய்யப்படும்.
- இந்த வங்கியில், கல்வி நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள், அறிவுசார் சொத்து உரிமை நிறுவனங்களை இணைத்து - புது கண்டுபிடிப்புகளுக்கு காப்புரிமை பெற்று, அதை தொழில்நுட்பமாக மாற்றும் நிறுவனங்களை கண்டறிந்து தமிழகத்தின் அறிவுசார்ந்த சொத்தாக மாற்றி, அதன் மூலம் தமிழகம் உலகத்து நாடுகளில் போட்டி போட்டு வளரும் விதத்தில் உருவாக்கப்படும்.
- அறிவுசார் சொத்து - வர்த்தக தொழில்நுட்பமாக மாற்றம் பெரும்பொழுது, அதை தமிழகத்திலேயே வர்த்தக பொருளாக உற்பத்தி செய்து, ஏற்றுமதி செய்ய முன்னுரிமை கொடுத்து ஊக்குவிக்கப்படும். இந்த புது அறிவுசார் சொத்தை கண்டுபிடித்தவருக்கும், அதை வர்த்தகமாக மாற்றி பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்டவர்களுக்கு ஊக்கத்தொகை கொடுக்கப்படும்.

## தனித்திறன் பெற்றவர்கள்

- மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநங்கைகளுக்கு தகுதித்திறன் பயிற்சியளித்து வேலைவாய்ப்பில் முன்னுரிமையும், அரசு மற்றும் தனியார் துறையில் வேலைவாய்ப்பையும் உறுதி செய்வோம்.
- கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் மாற்று திறனாளிகளுக்கு 3% இட ஒதுக்கீடு உறுதியாக உடனடியாக அமல்படுத்தப்படும்.
- சுய தொழில் செய்ய முன்வரும் மாற்றுத்திறனாளிகளுக்கு ஐ-மேக்ஸ் தியேட்டர், கிராம/நகர BPO/KPO, ஐடி பார்க், விவசாய மதிப்பு கூட்டும் தொழிற்சாலை பார்க் மற்றும் வணிக வளாகங்களில் முன்னுரிமை.
- மாற்றுத்திறனாளிகளின், பார்வையற்றோருக்கு BPO/KPO மையங்க ளில் வேலை வாய்ப்பில் 30 சதவிகித முன்னுரிமை.
- மாற்றுத்திறனாளிகளின் அடிப்படை உதவித்தொகை ரூ 1000 கூட்டி வழங்கப்படும்.
- பொது மற்றும் தனியார் கட்டிடங்கள், பேருந்து நிறுத்தங்களில் உள்ள கழிப்பறை வசதிகள் நவீன படுத்தப்பட்டு, மாற்று திறனாளிகளின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## மணல் கொள்கை.

- வெளிநாடுகளில் இருந்து மட்டும் மணல் இறக்குமதி செய்வது சட்டமாகும்.
- மணல் விலை நிர்ணயம் செய்யப்பட்டு, மக்களுக்கு குறைந்த விலையில் இறக்குமதி மணல் விற்பனை செய்யப்படும்.
- எம்-சாண்டு எடுத்தல் முற்றிலும் தடை செய்யப்படும். எம்-சாண்டு எடுக்கும் அணைத்து காண்ட்ர்களும் ரத்து செய்யப்பட்டு மலை வளம் காக்கப்படும்.
- மாற்று கட்டுமான பொருள்கள் மற்றும் விஞ்ஞான வளர்ச்சியினால் விளைந்த உறுதியான காம்போஸிட் கட்டுமானம் ஊக்குவிக்கப்பட்டு, மணலின் தேவை கணிசமாக குறைக்கப்படும்.
- பசுமை கட்டிடங்கள் சார்ந்த தொழில் நுட்ப வழிமுறை ஊக்குவிக்கப்படும் .
- மணலுக்கும், கண்மாய் மண்ணுக்கும் வேறுபாடு தெரியாத ஆட்சியை மாற்றி மண்ணால் பிழைக்கும் மக்களின் - குறிப்பாக மண்பாண்டம், செங்கல் மற்றும் ஒடு உற்பத்தி தொழிலில் பரம்பறையாக ஈடுபடுவோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும், மற்றும் விவசாய நிலங்களை செறிவூட்ட மண் தேவப்படும் விவசாயிகள் கண்மாய்கள், குளங்களில் இலவசமாகவும், தனியார் நிலங்களில் மண் தடையில்லாமல் எடுக்கவும் வழி வகை செய்யப்படும். காவல்துறை வழக்குகள் அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்டு, புது வழக்குகள் போடா வண்ணம் நடவடிக்கை எடுக்கப்படும். அழிக்கப்பட்ட மண்பாண்டம், செங்கல் மற்றும் ஒடு தொழில் மீட்டெடுக்கப்படும். அவர்களின் வாழ்வாதாரம் மீட்டெடுக்கப்படும். இந்த தொழிலில் ஈடுபடும் மற்றவர்களுக்கும் வரன் முறை செய்து தொழிலை மீட்டெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## சுற்றுச்சூழல்பாதுகாப்பு

- **சுழற்சி பொருளாதாரத்தை நிறுவுதல்**:

  மறுசுழற்சி மற்றும் மறுபயன்பாடு விதிகளை வகுப்பதன் மூலம் நீர், நெகிழி மற்றும் மின் கழிவு போன்ற போன்ற பொருட்களுக்கு ஒரு சுழற்சி பொருளாதாரத்தை நிறுவுதல் குடிசைத் .தொழில்கள் மற்றும் சுய உதவிக்குழுக்களால் நெகிழி இல்லாத மாற்று உற்பத்திகளை ஊக்குவித்தல்.

- **மாசுபாட்டின் தரங்களை கண்காணித்தல் மற்றும் செயல்படுத்துதல்** :

  2017-ஆம் ஆண்டின் உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின் படி அனைத்து மாசு கண்காணிப்புத் தரவுகளும் தொடர்ச்சியாக "OCEMS - ஆன்லைன் தொடர்ச்சியான உமிழ்வு மற்றும் கண்காணிப்பு அமைப்புகள் மூலமாக தொடர்ச்சியாக பதிவேற்றம் செய்யப்பட்டு கண்காணிக்கப்படும்.

- **கடுமையான நிலத்தடி நீர் கட்டுப்பாடு** :

  விவசாயிகள், பொதுமக்கள் மற்றும் எதிர்கால சந்ததியினர் நலனுக்காக விரிவான மற்றும் கடுமையான நிலத்தடி நீர் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு பெரிய அளவிலான நிலத்தடி நீர் உற்பத்திக்கு வழிவகுக்கப்படும். ஏரிகள், கண்மாய்கள், நீர் நிலைகள், நீர்வழிகள் மற்றும் சதுப்புநில பாதுகாப்பை உறுதி செய்ய விதிகள் திருத்தி அமைக்கப்படும்.

- **மாநிலம் தழுவிய சுற்றுச்சூழல் நிலப்படம் உருவாக்கப்படும்**:

  மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் தொழில்துறை தளங்களுக்கென தனி அளவுகோல்கள் வடிவமைக்கப்படும்.

- **நிலையான வளர்ச்சி இலக்குகளுடன் முன்னேற்றம்**:

சுற்றுச்சூழலுக்கு இணக்கமான மற்றும்பசுமைத் தொழில்களை செயல்படுத்த வெகுவாக ஊக்குவிப்போம்.

- **உள்ளூர் மக்களின் பங்கேற்பை உறுதி செய்தல்**:

  உள்ளூர்மக்கள் அடங்கிய சுற்றுச்சூழல் குழுக்கள் துவங்கப்பட்டு , TNPCB மற்றும் மாவட்ட நிர்வாக உதவியுடன் பெருமளவு , மாசுபடுத்தும் இடங்கள் கண்டறியப்பட்டு தொழில்துறை மாசுக்கள் கட்டுப்படுத்தப்படும்.

- **உயிர்ச்சூழல் அமைப்புகள் பாதுகாப்பு** :

  தொழிசாலைகள் மற்றும் பொதுமக்கள் இடையே உயிர்ச்சூழல் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றிய விழிப்புணர்வு உண்டாக்கப்பட்டு சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் பாதுகாக்கப்படும் .

## கனிம வள மேம்பாட்டு கொள்கை

- கனிம வளக்கொள்கை மாற்றி அமைக்கப்பட்டு, மதிப்பு கூட்டப்படும் தொழில்கள் உருவாக ஊக்குவிக்கப்படும். இதற்கு தேவையான சர்வ தேச தொழில் நுட்பங்கள், சர்வ தேச தொழில் நிறுவனங்களுடன் இணைந்த தொழிற்சாலைகள் உருவாக்கப்படும். இதன் மூலம், அரசிற்கு வருமானம் வரும் வகையில் நேர்மையான கொள்கைகள் உருவாக்கப்படும்.
- கனிம வள அரசு நிறுவனங்களின் ஆட்சிமுறை நிர்வாகம் மாற்றி அமைக்கப்படும்.
- கனிம வள ஏற்றுமதி 50 சதவிகிதமாகவும், மதிப்பு கூட்டப்பட்டு ஏற்றுமதி 50 சதவிகிதமாகவும் - கொள்கை வடிவமைக்கப்படும். அது படிப்படியாக முழுவதும் மதிப்பு கூட்டப்பட்டு ஏற்றமதி செய்யப்படும் என்ற நிலை எய்த வழி வகை செய்யப்படும்.
- அரசு மற்றும் தனியார் இணைந்து கனிம வளம் உற்பத்தி, மதிப்பு கூட்டுதல், ஏற்றமதி தொழிலில் ஈடுபடும்.
- அரசு கனிம வளம் இருக்கும் இடம் கண்டறிந்து, ஒதுக்கீடு செய்து, ஆரம்ப முதலீடு செய்து பங்கு தாரர் ஆகும்.
- தனியார்கள் தொழில்நுட்பம், தோண்டுதல், மனித வள மேம்பாடு, மதிப்பு கூட்டுதல், ஏற்றுமதியில் ஈடுபடுவார்கள்.
- கனிம வள தோண்டுதல் தொழில்நுட்ப மேம்பாட்டிற்கும், ஆராய்ச்சிக்கும், மதிப்பு கூட்டுதல் துறைக்கும் சேர்த்து ரூ 10,000 கோடி அரசு முதலீடு செய்யும்.
- கிரானைட் உற்பத்தி, மதிப்பு கூட்டுதல் மற்றும் ஏற்றுமதிக்கு அரசு மற்றும் தனியார் இணைந்து செய்யும் தொழிலில் ரூ 10,000 கோடி அரசு முதலீடு செய்து, வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிறுவனங்களோடு இணைந்த தொழில்கள் உருவாக்கப்படும் மற்றும் அன்னிய மூலதனத்திற்கு ஏற்பாடு செய்யும்.

## தீர்க்க முடியாத பிரச்சனைகளுக்கு தீர்வு

**கச்ச தீவு மற்றும் மீனவர்நலன் பிரச்சினைக்கு தீர்வு-**

- கச்ச தீவு நமது தீவு. இது பாராளுமன்றத்தில் ஒப்புதல் பெற்று அமல்படுத்தாத காரணத்தால், பாரளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி திரும்ப பெற வேண்டும், இல்லையென்றால் சுப்ரீம் கோர்ட் மூலம் மேற்கு வங்காளத் தீவு தாரை வார்க்கப்பட்டதை முன்னுதாரணமாக காட்டி திரும்ப பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- ஆனால் இந்த இரண்டையும் ஆண்ட கட்சிகள் செய்திருந்தால் இந்த இழி நிலை தமிழக மீனவர்களுக்கு வந்திருக்காது. கடந்த 30 வருடங்களாக முடியாத பிரச்சினை இந்த அரசியல் கட்சிகளின் நிறைவேற்ற முடியாத தேர்தல் அறிக்கைகளால் நடக்கும் என்று நாங்கள் நம்பவில்லை. எது உடனடி சாத்தியமோ, மாற்று தீர்வோ, அது தான் எங்கள் வழி.
- எனவே கட்ச தீவு இப்போது பிரச்சினை அல்ல. மீனவர்களுக்கு வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துவது தான் முக்கிய பிரச்சினை. எனவே உடனடியாக மீன்பிடித்தலுக்கு தனி அமைச்சகம் உருவாக்கப்படும்.
- மீனவர் நலக்கொள்கை உருவாக்கப்படும். அதில் கீழ்கண்ட மூன்று முக்கிய பெரிய திட்டங்கள் செயல் பாட்டிற்கு வரும்.
- ஆழ்கடல் மீன் பிடிப்பு முறை அறிமுகம். அதற்கு ஆழ்கடல் மீன்படி டிராலர்ஸ் 1000 டன் எடை கொண்ட - 4 கப்பல்கள் மீனவர்களுக்கு ஆழ்கடல் மீன் பிடிப்பு படகுகள் 13 கடற்கரை மாவட்டங்களுக்கு 150 டன் எடை கொண்ட 130 படகுகள், ஆழ்கடல் மீன் பிடிக்க சிறப்பு பயிற்சிகள், கப்பலில் பதப்படுத்துதல், மதிப்பு கூட்டுதல், ஏற்றுமதி எல்லாம் கடலிலே நடைபெற நடவடிக்கை.
- மீன்பிடி தடை காலங்களில் மீனவர்கள் வருமானத்திற்காக மீனவ பெண்களுக்கு கடல் பாசி வளர்ப்பு பயிற்சியும், நிதி உதவியும் அளிக்கப்படும்.
- 1076 கிமீ கடற்கரையில் கடலில் கூண்டு மீன்வளர்ப்பு திட்டம். மீனவர்களின் தொடர்ந்த வருமானத்திற்கு உறுதி செய்யும்.
- மீனவர்களின் படித்த மாணவர்களுக்கு தனித்திறன் பயிற்சி சுற்றுலாதுறையில் அளிக்கப்படும்.

- மீனவர் நலவாரியத்தில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் அனைவருக்கும் சிறப்பு நலவாழ்வு திட்டம் செயல்படுத்தப்படும். அதன் படி அவர்களது, படிப்பு, மருத்துவம், விபத்து காப்பீடு, உயிர் காப்பீடு திட்டம், அனைத்து மீனவர்களுக்கும் பசுமை வீடு திட்டம் முழுமையாக அமலுக்கு வரும். மீன் பிடிக்கும் போது இறந்தால் ரூ 10 லட்சம்.
- கடற்கரை சுற்றுலா திட்டமும், மீனவர்களுக்கு மதிப்புக்கூட்டப்பட்ட வாழ்வாதரத்தை உறுதி செய்யும் நிறுவனங்களை உருவாக்கி அதில் மீனவர்களும் பங்கு தாரர்களாக ஆக்கும் வகையில் செயல்பாட்டிற்கு வரும். மீனவர்களின் வாழ்வில் முன்னேற்றம் ஏற்பட கச்ச தீவு சட்டப்படி நமக்கு வரும் முன் இந்த திட்டங்கள் கண்டிப்பாக செயல்பாட்டிற்கு வரும்.
- இலங்கை மற்றும் இந்திய மீனவர்கள் வாரத்தில் பாதி நாள் பகிர்ந்து கொண்டு மீன் பிடித்தல் செயல்திட்டம் வகுத்து நடைமுறைப்படுத்தப்படும்.
- இந்திய கடற்படை இந்திய மீனவர்களை காக்க நடவடிக்கை எடுக்கப்படும். தமிழக கடற்கரை சிறப்பு அதிரடிப்படை உருவாக்கப்படும், இதன் மூலம் தமிழக மீனவர்களை காக்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

## காவிரி, முல்லை பெரியார் நதி நீர் பிரச்சினைகளுக்கு தீர்வு

- அதிதிறன் நீர் வழிச்சாலை உருவாக்கி தமிழகம், கர்நாடகா, ஆந்திரா மற்றும் கேரளா மூலம் 3000 டி.எம்.சி வெள்ள நீரை பகிர்ந்து கொள்ள ஏற்பாடு.
- முல்லை பெரியார் அணையில் 152 அடி தண்ணீர் தேக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
- முல்லை பெரியார் அணையில் இருந்து தமிழக பகுதியில் குளம் உருவாக்க வாய்ப்பிருக்கிறது. அதை உருவாக்க நடவடிக்கை எடுத்து மழை நீரை சேமித்து அதை அந்த பகுதி நீர் பாசனத்திற்கு கொடுக்க தேவையான அணை மற்றும் கால்வாய்கள் உருவாக்கப்படும். இதற்கு ISRO வின் உதவியுடன் திட்டம் உருவாக்கப்பட்டு ஒன்றிய மற்றும் கேரளா அரசுகளின் உதவியோடு இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## எரிவாயு திட்டம்

- மீத்தேன் மற்றும் ஷேல் எரி வாயுத்திட்டம் நிலத்தை, நிலத்தடி நீரை பாழ்படுத்தும் என்பதால் எதிர்ப்பு.
- கெயிலுக்கு தேசிய நெடுஞ்சாலையில் மாற்றுப்பாதை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- ஹைட்ரோ கார்பன் திட்டம் டெல்டா மாவடங்களில் செயல்படுத்த அனுமதிக்க முடியாது. வேளாண் பசுமை மண்டலமாக அதை தமிழக அரசு அறிவித்ததை வரன் முறைபடுத்தி செயலாக்கத்திற்கு கொண்டு வருவோம். அதை ஆழ்கடலில் செயல்படுத்தினாலே தேவையான எரிவாயு கிடைக்கும் எனவே அதை செயல்படுத்த இந்திய ஒன்றிய அரசை வலியுறுத்துவோம்.

## மதுவிலக்கு பிரச்சினை

- மதுவிலக்கு அமல் இலட்சியம். ஆட்சிக்கு வந்தவுடன் டாஸ்மாக் மதுக்கடைகள் பாதியாக குறைக்கப்படும். பள்ளி, கல்லூரிகள், சாலைகளில், பொதுமக்கள் வாழும் இடங்களில் முதலில் மூடப்படும். மதுக்கடைகளின் அருகாமை குறைக்கப்படும்.
- டாஸ்மாக் மது விற்பனை துறை அரசின் பங்கு ஒரு குறிப்பிட்ட அளவில் தனியாருக்கு விற்கப்படும். மதுபான விலை அதிகரிக்கப்பட்டு, ஒரு பங்கு தனியாருக்கும், ஒரு பங்கு அரசிற்கும், ஒரு பங்கு குடிக்கும் குடிமகன்களின் மனைவிகளின் அல்லது தாய்மார்களின் அல்லது வீட்டின் முதியோர்கள் மக்கள் கேன்டீனில் பொருள்கள் வாங்கி கொள்ளலாம்.
- மதுவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையங்கள் உருவாக்கப்படும்.
- கள்ளை தடை செய்யும் சட்டம் நீக்கப்படும். அதை உணவு பானமாக அறிவிக்கப்படும். தென்னை மற்றும் பனை மரத்தில் இருந்து நவீன முறையில் சாராயத்திற்கு பதில் உடல்நலத்தை பாதிக்காத கள்ளை பானமாக சுத்திகரித்து வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- மதுவினால் வரும் வருமான இழப்பை சுத்தமான குடிதண்ணீர் உற்பத்தி திட்டத்தால் சரி செய்யப்படும்.

## வெளிநாட்டு வாழ் இந்தியர்கள்

- வெளிநாட்டு வாழ் இந்தியர்கள், அங்கு தங்கள் உழைப்பினால் சேமித்த பணத்தை FDR - FOREIGN DIRECT REMITTANCE மூலம் 2018-19ல் இந்தியாவிற்கு அனுப்பியது மட்டும் ரூ 5,60,000 கோடி. ($80 Billion). இதில் 60 சதவிகிதம் கேரளா, தமிழ்நாடு, மகாராஷ்டிரா, கர்நாடகா மாநில வெளிநாட்டு வாழ் இந்தியர்களிடம் இருந்து வருகிறது. 2014-19 வரை இந்தியாவில் அன்னிய முதலீடு மட்டும் 21 லட்சம் கோடி, அதே காலகட்டத்தில் FDR மட்டும் 26.5 லட்சம் கோடி
- இதில் அதிக மக்கள் வெளிநாட்டில் வசித்து, பணத்தை தங்கள் சொந்த நாடுகளுக்கு அனுப்பும் பட்டியலில், இந்தியா முதலிடத்திலும், சீனா இரண்டாம் இடத்தில், அடுத்து பிலிப்பைன்ஸ், மெக்ஸிகோ,பிரான்ஸ், நைஜீரியா, பாகிஸ்தான், ஜெர்மனி, வியட்நாம், ஸ்பெயின், லெபனான், இந்தோனேஸியா போன்ற நாடுகள் வருகிறது.
- இதில் இந்தியா முதலிடத்தில் இருக்கிறது என்றால், இங்கிருந்து சென்ற இந்தியர்கள் அதிகம் பேர் இந்தியாவிற்கு மீண்டும் வரவேண்டும் என்று விரும்பும் வெளிநாட்டு வாழ் இந்திய குடிமக்கள். இங்கு அவர்கள் திறமைக்கேற்ற வேலைவாய்ப்பு ஏற்படுத்தி, அவர்கள் படிப்பிற்கேற்ற மதிப்புக்கூட்டப்பட்ட வேலை வாய்ப்பில்லாமல், வெளிநாடு சென்று பல பேர் தாய், தந்தையரை பிரிந்து, மனைவி, குழந்தைகளை பிரிந்து கடுமையாக உழைத்து, தாங்கள் பட்ட கடன்களை அடைப்பதற்கும், உற்றார், உறவினரது நல்வாழ்க்கைக்கும் தங்களை அர்பணிக்கின்ற நல் உள்ளங்கள்.
- அவர்களுக்கு பல்வேறு பிரச்சினைகள், வேலை பார்க்கும் இடத்தில் பிரச்சினை, வேலைக்கு அழைத்து சென்று ஏமாற்றும் இடைத்தரகர்களால் பிரச்சினை, ஏமாற்றப்பட்டு பாஸ்போர்ட்டை இழந்து ஜெயிலில் வாடும் பேர் எத்தனையோ, வேலையில் பிரச்சினை, தங்கும் இடத்தில் பிரச்சினை, உடல்நலக்குறைவு ஏற்பட்டால், விபத்து ஏற்பட்டால், மரணமடைந்தால் இப்படி பல்வேறு பிரச்சனைகளை தினமும் அனுபவித்து இந்தியாவிற்கு 2 மாநில பட்ஜெட் தொகை அனுப்பி இந்திய பொருளாதாரத்தை பலப்படுத்தும் அவர்களுக்கு சரியான, தேவையான உதவியை

அன்போடு செய்து தரும் இந்திய தூதரகங்கள் மிகக் குறைவு. இது வரக்கூடிய அம்பாஸிடரை அல்லது கவுன்ஸல் ஜெனரலைப் பொருத்தது .

- இதில் அதிகம் பாதிக்கப்படுவது வெளிநாட்டு வாழ் தமிழர்கள் தான்.அவர்கள் தான் மொழியால், பேச்சால் இரண்டாம் தர குடிமக்கள் போன்று பார்க்கும் நிலைமை இருக்கிறது. அவர்கள் படும் துயரம் அதிகம்.
- வெளிநாட்டு வாழ் தமிழர்களின் குடும்பங்களுக்கு தமிழகத்தில் தேவையான அனைத்து சட்ட உதவிகளையும், வெளிநாட்டு வாழ் தமிழர்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்த, மேன்மைப்படுத்த சிறப்பு விபத்து மற்றும் மருத்துவ காப்பீட்டு திட்டத்தை அமல்படுத்தும். தனிநபர் கடன் திட்டத்தையும் அமல்படுத்தும்.
- அவர்களது தற்போதைய துயரங்களை போக்கும் முயற்சியாக, இதற்கென்று வெளிநாட்டு வாழ் தமிழர்கள் நலவாழ்வுக்கு தனி சட்டமன்ற, தனி பாராளுமன்ற குழுவும் அமைக்கப்படும். அவர்களுது பிரச்சினைகளை உடனுக்குடன் வெளிநாட்டு இந்திய தூதரகங்களின் கவனத்திற்கு எடுத்து சென்று உடனடி தீர்வுக்கு வழிசெய்யும். ஏனென்றால் இந்த பிரச்சனை 5 ஆண்டுகளுக்குள் முடிவுக்கு கொண்டுவரப்படும்.
- இனி 10 ஆண்டுகளில் வெளிநாட்டில் வாழும் தமிழர்கள், தமிழ்நாட்டில் வாழ்வதை பெருமையாக எண்ணும் சூழலை, வெளிநாட்டில் கிடைக்கும் சம்பளத்தோடு வேலைவாய்ப்பையும் உருவாக்குவதே எங்கள் இலட்சியம்.
- தமிழகம் வளர்ந்த நாட்டுக்கு இணையான நாடாக மாறும் போது, வெளிநாட்டினர் தமிழகத்திற்கு அதிக எண்ணிக்கையில் வந்து வேலை செய்யும் நிலைமை ஏற்படுத்தப்படும்.

**ஈழப் பிரச்சனை**

- இந்தியாவை சுற்றி உள்ள எந்த சார்க் நாடுகளிடமும் ஜனநாயக ஆட்சிமுறை நிர்வாகம் இல்லை. இனத்தை சார்ந்தோ, மதத்தை சார்ந்தோ இல்லை. மொழியை சார்ந்தே தான் நம்மை சுற்றி ஆளுகின்ற அரசுகள் இயங்கிக்கொண்டிருக்கிறது. அங்கு சிறுபான்மையினருக்கு வாழ உரிமையில்லை எனும் பொழுது அங்கே எப்படி அமைதி நிலவும். அதைத்தான் இலங்கையில் 2 லட்சம் இலங்கையின் சொந்த தமிழ் குடிமக்கள் கொல்லப்பட்டு, சர்வ தேச குற்றம் அந்த நாடு புரிந்தது, ஒரு ஈனச்செயலாக,

மனித உரிமையை மதிக்கிற உலக மக்கள் வெட்கி தலை குனியும் செயலாக பார்க்கிறார்கள்.

- கடந்த 28 ஆண்டுகளாக இந்திய அரசு கடைப்பிடித்த வெளியுறவு கொள்கையின் காரணமாகவும், நம்மைச்சுற்றி உள்ள எந்த நாடும், இந்தியாவுடன் கைகுலுக்கி கொண்டு, சைனாவுடன் சேர்ந்து கொண்டு இந்தியாவிற்கு எதிராகத்தான செயல்பட்டுக்கொண்டு வருகிறது. இந்திய வெளியுறவு அதிகாரிகள், வளர்ந்த நாடுகளிடம் வாலாட்டவும், நம்மை சுற்றி உள்ள அண்டை நாடுகளிடம் பெரியண்ணன் தோரணையுடன் செயல்படுவதால், இந்தியாவைச் சுற்றி உள்ள நாடுகள் நமக்கு எதிரான மனநிலையில், சர்வதேச அளவில் செயல் படுகிறார்கள். இதற்கு உதாரணம், இலங்கை பிரச்சினையில் இந்தியா தலையிட்டு, ஈழத்தமிழ் மக்கள் அழிவிற்கு காரணமாக இருந்தது இந்தியாவின் மத்திய அரசு காங்கிரஸ் கட்சிதான். பின் ஆட்சிக்கு வந்த பா.ஜ.கவும் அதில் இருந்து சிறிதும் மாறாமல் அதே கொள்கைகளுடன் அண்டை நாடுகளை அணுகுவதால், நம்மைச்சுற்றி ஆபத்து தான் காத்திருக்கிறது என்பது வெள்ளிடை மலை.
- இந்தியா பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்றால், இந்தியாவின் வெளியுறவுக்கொள்கையில் மிகப்பெரிய மாற்றம் வரவேண்டும்.
- இந்தியாவைச் சுற்றியுள்ள நாடுகளில் இந்தியாவைப்போல் இல்லை அமெரிக்காவைப்போல் ஜனநாயகம் மத்திய, மாநில ஆட்சிமுறை நிர்வாகம், அனைத்து பிரிவை சேர்ந்த மக்கள் சமத்துவமாக வாழ வழி, இனம், மொழி, மதம் கடந்து, அனைவருக்கும், அனைத்திலும் பிரதிநித்துவம் கிடைக்கும் வகையில் ஜனநாயகம் மலர, இந்தியா அந்த நாடுகளோடு இணைந்து உதவ வேண்டும். இல்லை என்றால், இந்த நாடுகளில் அமைதி நிலவாது, தீவரவாதமும், பயங்கரவாதமும் தலைதூக்கும், அதை சீனா போன்ற மேலை நாடுகள், தங்களது பொருளாதார வளர்ச்சிக்கு சாதகமாக பார்க்கும், அது இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக மாறும்.
- எனவே குறிப்பாக இலங்கையில், மத்திய, மாநில ஆட்சிமுறை நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டு பெடரல் ஜனநாயக ஆட்சி முறை நிர்வாகம் அமைய இந்தியா உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கை தமிழர்களுக்கு நில உரிமை, காவல்துறை உரிமை, 13+ அரசியல் சாசன சட்ட மாற்றத்தை அமல்படுத்த

ஆக்கப்பூர்வ நடவடிக்கையை உடனடியாக வெளியுறவு துறை மட்டத்தில், சர்வ தேச அழுத்தம் கொடுத்து, ஐக்கிய நாடுகள் சபையின் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- இதை செய்ய இந்தியாவிற்கு முடியவில்லை என்று சொன்னால், பங்களாதேசம் எப்படி பாகிஸ்தானில் இருந்து பிரிவதற்கு இந்தியா உதவியதோ, அதைப்போல் இலங்கையில் இருந்து ஈழதேசம் உருவாக இந்தியா அதிரடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இது காலத்தின் கட்டாயம். இதை இந்தியா செய்ய வேண்டிய சூழல் வரும்போது பின்வாங்ககூடாது. முதல் முயற்சியை இந்தியா எடுக்க வேண்டும், தவறும் பட்சத்தில் இரண்டாம் முயற்சி கண்டிப்பாக எடுக்கப்பட வேண்டும்.
- இந்த கொள்கைகளை இந்திய அரசிடமும், இந்திய அரசியல் கட்சிகளிடமும் இலங்கை பிரச்சினையின் உண்மை பரிணாமத்தை புரிய வைக்க முயற்சி எடுத்து, இந்திய அரசின் வெளியுறவுக் கொள்கையை மாற்ற முயற்சி செய்யப்படும்.
- இலங்கை தமிழ் மக்கள் இந்தியாவில் அகதிகளாக, இலங்கையை விட கொடுமையான சுழலில் வாழும் நிலை மாற்றி அமைக்கப்பட்டு, அவர்களை இங்கு அடிமை மாதிரி நடத்தும் சூழல் நீக்கப்பட்டு, அவர்கள் வாழ்வாதரம் மேம்பட கல்வி, மருத்துவம், சுத்தமான சுகாதாரமான குடியிருப்பு, வேலைவாய்ப்பு பெற, மற்ற நலதிட்ட உதவிகள் பெற தேவையான நடவடிக்கைகளை தமிழகஅரசு எடுக்கும்.
- முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் அவர்கள் ஈழத்தமிழ் மக்கள் மேல் வைத்த அதே அன்பு, பற்று, பாசம் மீண்டும் அவர்களுக்கு தமிழகத்தில் கிடைக்கும்.
- இல்லாத ஒன்றுக்கு எப்படி தடை?, விடுதலைப்புலிகளே இல்லை என்றான போது அதற்கு எதற்கு தடை?, அதைச்சொல்லியே அப்பாவி ஈழமக்களை பலிகடா ஆக்குவது இந்தியாவில் நடக்கிறது. எனவே விடுதலைப்புலிகளின் மீதான தடையை நீக்கவேண்டும், அதை நீக்க அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் எடுப்போம். அதை நீக்கி விட்டால் இலங்கை தமிழ் அகதிகளாக இருக்கும் மக்களுக்கு இந்திய குடியுரிமை சாத்தியம்.
- எனவே அவர்களுக்கு இன்றைய தேவை இந்திய குடியுரிமை. அதை பெற்று தர ஆக்கப்பூர்வமான நடவடிக்கை

எடுக்கப்படும். இலங்கையில் வாழும் சூழ்நிலை ஏற்படும் வரை அவர்களை மற்ற வளர்ந்த நாடுகள் எப்படி குடியுரிமை கொடுத்து அவர்களது பாதுகாத்ததோ அதைப்போல் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக இந்தியாவின் அனைத்து கட்சிகளிடம் ஒருமித்த கருத்தை ஏற்படுத்தி, பாராளுமன்றத்தில் இதை சட்டமாக்கி செயல்படுத்த வேண்டிய பணியை நாம் செய்வோம்.

- ஈழப்போரில் இலங்கை அரசின் மனித உரிமை மீறல் சர்வ தேச நீதி மன்றத்தில் நிறுத்தி நீதி பெற்று தருவதற்கு இந்தியாவின் வெளியுறவுக்கொள்கையில் மாற்றம் செய்ய வேண்டிய வழிவகைகளை கடைப்பிடிப்போம்ய
- இலங்கையில் வட கிழக்கு மாநிலங்களில், இந்திய நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டில் வாழும் ஈழத்தமிழர்களின் நிறுவனங்கள் இணைந்து அன்னிய நாட்டு மூலதனம் கல்வியிலும், விவசாயத்திலும், மீன்பிடித்தலிலும், தொழில் மற்றும் சேவைத்துறைகளில் வெளிநாட்டு மூலதனம் உருவாக்கப்பட்டால் தான் இலங்கை தமிழர்களின் வாழ்வு மலரும். அவர்களுக்கு பாதுகாப்பு கிடைக்கும். இதை செய்து இலங்கை தமிழர்கள், ஈழத்தில் வாழ வழி வகை செய்யப்படவேண்டும்.
- இதில் எதுவும் நடக்காவிட்டால் ஈழத்தை மலரச் செய்யும் ஆட்சி இந்தியாவில் மலரச் செய்வோம்.

## இலவசம் அல்ல சமூக, பொருளாதார மேம்பாட்டு திட்டங்கள்

- தமிழகத்தில் 11 சதவிகிதம் வறுமைக்கோட்டுக்கு கீழே இருக்கும் மக்களுக்காக சில மக்கள் நல திட்டங்கள்
- தமிழக அரசுடன் அரசின் திட்டங்களையும் சேவைகளையும் மக்கள் உடனுக்குடன் பெறுவதற்கும் அரசுக்கும் மக்களுக்கும் நேரடி இணைப்பாக இருப்பதற்கும் வறுமைக்கோட்டுக்கு கீழே இருக்கும் அனைத்து மக்களுக்கும் வீட்டிற்கு ஒரு கணிணி வழங்கப்பட்டு e-governance முறையில் மக்களும் அரசும் நேரடி தொடர்பில் இருப்பதை உறுதி செய்யப்படும். இதன் மூலம் மக்கள் தங்களது தனித்திறனை வளர்த்துக் கொள்வதற்கும் புதிதாக கற்றுக் கொள்வதற்கும் மருத்துவர்கள் உடன் மருத்துவ ஆலோசனை, மருந்து, ரத்த பரிசோதனை போன்ற வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் உபயோகப்படுத்தப்படும்.
- படித்த மகளிருக்கு GIG Workers வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டு இதன் மூலம் அவர்கள் ஒய்வு நேரத்தில் குறந்தது ரூ 10,000 முதல் ரூ 20,000 சம்பாதிக்க வழி வகை செய்யப்படும். அதற்கான திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படும்.
- வீட்டு வேலை மட்டும் செய்யும் இல்லத்தரசிகளுக்கு மதிப்பு உரிமைத்தொகையாக ரூ 3000 வழங்கப்படும்.
- ஓர் இளைஞர் 5 அல்லது அதற்கு மேற்பட்ட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கினால், அவர் சிறப்பு நிதி சலுகைகள் பெறுவதற்கு தகுதியுடையவர் ஆகிறார்.
- முதல்முறை தொழிலாளர்களுக்கு வட்டியில்லா மின் பைக்குகள் வழங்கப்படும்.
- மாணவ மாணவிகளுக்கு 10 இன்ச் ஸ்மார்ட் டேப்லட் வழங்கப்பட்டு அரசு பள்ளிக்கூடம் வை-பை இணைப்போடு ஒரு டிஜிட்டல் பள்ளி ஆசிரியர்களும் மாணவர்களும் 1:1 என்ற முறையில் பயிற்றுவிக்கப்படும்.
- ஆதரவற்ற மாணவர்களை அரசே தத்தெடுத்து, படிக்க வைத்து வேலை வாய்ப்பை உருவாக்கிகொடுக்கும்.
- தமிழகத்தில் இருக்கக்கூடிய 12,500 ஊராட்சிகள் மற்றும் அதனை உள்ளடக்கிய கிராமங்களில் அப்துல் கலாம் கிராமப்புற சுயசார்ப்பு திட்டங்கள் உருவாக்கப்படும். அதில் பெண்கள் மற்றும் ஆண்கள் சுய உதவி குழுக்கள் உருவாக்கப்பட்டு, அதன் மூலம் ஒருங்கிணைந்த பண்ணைகள் - மாட்டுப்பண்ணை,

ஆட்டுப்பண்ணை கோழிப் பண்ணை, மீன் பண்ணை, SMART FARMING & VERTICAL FARMING, பாரம்பரிய கிராமப்புற தொழில்கள் சொசைட்டி அமைக்கப்படும்.

- அதை மேலாண்மை செய்வதும் நிர்வாகம் செய்வதும் அதை லாபமாக கொண்டுவருவதற்கு சுய உதவிக் குழுக்கள் சொசைட்டி மூலமாக தேவையான தொழில் நுட்ப உதவி, மேலாண்மை, விற்பனை மற்றும் ஏற்றுமதி பயிற்சிகள் கொடுக்கப்படும். இந்த சொசைட்டியில் சம்பளத்துடன் கூடிய வேலையும், வரும் லாபத்தில் பங்கும் அந்த சுய உதவி குழுக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும்.
- இந்த பண்ணகளுக்கு தேவையான தீவனங்கள் உருவாக்குவதற்கு ஒவ்வொரு கிராமத்திலும் அரசு புறம்போக்கு நிலங்கள் ஒதுக்கப்பட்டு அதற்கு அந்த தீவனத்தை உருவாக்குவதற்கு ஒரு அமைப்பு ஏற்படுத்தப்படும் இளைஞர்களை கொண்ட ஒரு வேளாண்மை அமைப்பு ஏற்படுத்தப்படும்.
- இவர்கள் அரசு திட்டத்திலும் காண்ராக்ட் எடுத்து செய்ய வழிவகை செய்யப்படும். பெட்ரோல் பங்குகள், டீஸல் பங்குகள், எரிவாயு ஏஜென்ஸி வைக்க சுய உதவிக்குழுக்களுக்கு தேவையான உதவி செய்யப்பட்டு அவர்கள் வாழ்வாதார மேம்பாட்டிற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
- இதில் உற்பத்தியாகும் பொருட்கள் மதிப்பு கூட்டப்பட்ட அந்த மாவட்டத்தில் அமைந்திருக்கக் கூடிய தொழிற்சாலைகள் மூலமாக தமிழ்நாட்டுக்கும், இந்தியாவிற்கும், ஏற்றுமதி செய்யக்கூடிய ஒரு ஈகோ சிஸ்டம் உருவாக்கப்பட்டு அதன் மூலமாக பல லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு உருவாக்கித் தரப்பட்டு 234 அப்துல்கலாம் புரா குழும திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும்
- ஏழை எளிய மக்களுக்கு தமிழர் திருநாளான்று பட்டு சேலை, பட்டு வேஷ்டி வழங்கப்படும் இதன் மூலம் கைத்தறி நெசவு ஊக்குவிக்கப்படும், அதனால் நெசவாளர்கள் வாழ்வு ஊக்கம் பெறும்.
- ஏழை எளிய மக்களுக்கு சூரிய ஒளி மின்சார கட்டமைப்பு உருவாக்கித் தரப்படும் அதன்மூலம் மூன்று எல்இடி பல்ப் ஒரு ஃபேன் ஒரு டிவி மற்றும் மொபைல் சார்ஜர் கொண்ட ஒரு கிட் சோலார் கிட் வழங்கப்படும் இதன் மூலம் பசுமை மின்சார

உருவாக்கம் நடைபெறும் இதன் மூலம் ஏழை எளிய மக்களுக்கு மின்சார கட்டணத்தின் சுமையிலிருந்து அவர்கள் ஒட்டு மொத்தமாக விடுவிக்கப்படுவார்கள்

- மூன்று ஏக்கருக்கு கீழே இருக்கக்கூடிய அனைத்து விவசாயிகளுக்கும் டீசல் மின்சார பம்பு செட்டுகளுக்கு பதிலாக சோலார் கட்டமைப்பு உருவாக்கித் தரப்படும்.
- மின்சார கட்டணம் மாதம் ஒருமுறை கணக்கிடப்பட்டு அதிக மின்சார கட்டணம் சுமையிலிருந்து மக்கள் விடுவிக்கப்படுவார்கள்.
- ராணுவத்தில் இயங்கும் சலுகை விலை கேண்டினைப்போல் **"மக்கள் கேன்டீன்"** ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் உருவாக்கப்படும். ரேஷன் கடைகள் நவீனப்படுத்தப்பட்டு, ரேஷன் பொருட்கள் வாங்குவதிலும் விற்பதிலும் நடைபெறும் ஊழல் முற்றிலும் ஒழிக்கப்பட்டு மக்கள் கேண்டீன் உடன் இணைக்கப்படும். மக்கள் கிராமங்களிலேயே உற்பத்தி செய்யும் பொருட்கள், காய்கறிகள், பழங்கள் முற்றும் FMGC சில்லறை விற்பனைக்கான அனைத்து பொருட்களும், வெளிப்படையான நேர்மையுடன் செயல்படும் செயல்படக்கூடிய கொள்முதல் முறையை அமைத்து, அரசு கொள்முதல் செய்து மக்களுக்கு ராணுவத்தில் கிடைக்கும் சலுகை விலையில் மக்கள் கேன்டீன் மூலமாகவும், ரேஷன் கடை மூலமாகவும் மக்களுக்கு கிடைக்கும் படி செய்யப்படும். ஆன்லைன் மூலமாக ஆர்டர் செய்து இந்தப் பொருள்கள் நேரடியாக வீட்டுக்கே சப்ளை செய்யப்படும். மக்கள் சுய உதவி குழு மூலமாகவும் வீட்டிலேயே பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய தனித் திறன் பயிற்சி கொடுக்கப்பட்டு பண உதவி முதலீடு செய்யப்பட்டு உற்பத்தி தர நிர்ணயம் செய்து உயர்த்தக்கூடிய நடவடிக்கையாக இது அமையும்.
- ஒவ்வொரு கிராமமும் வைஃபை வசதி கொண்ட கிராமமாக இணைக்கப்படும்
- அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் ஆதரவு பெற்ற முதியோர் கைவிடப்பட்ட பெண்கள் கைவிடப்பட்ட குழந்தைகள் காப்பகங்கள் அரசு நிதி உதவியுடன் சுய உதவி குழு மற்றும் இன்று தனியார் தொண்டு நிறுவனங்கள் மூலமாக உருவாக்கப்படும்.

- சத்துணவு திட்டத்தில் பால், பழம், காய்கறிகள், முட்டை சேர்த்து வழங்கப்படும், OAP பென்ஷன் பெறும் முதியோர்களை சத்துணவு திட்டத்தில் இணைத்து மதிய உணவு வழங்கப்படும்.
- சத்துணவு திட்டத்தில் வழங்கப்படும் முட்டைகள், பால், பழங்கள், காய்கறிகள் அனைத்தும் அந்தந்த கிராம சுய உதவிக்குழுக்களிடம் இருந்து கொள்முதல் செய்யப்படும்.
- ஒய்வூதியம் இல்லாத 60 வயதை கடந்த அனைவருக்கும் ஒய்வூதியம்.
- திருமண நிதியுதவி திட்டம் தாலிக்கு தங்கம், பட்டதாரி பெண்களுக்கு ரூ 60000, பட்டாதாரி அல்லாத பெண்களுக்கு ரூ 70,000 ஆகவும் உயர்த்தி வழங்கப்படும்.
- நலிந்த நாட்டுபுறக் கலைஞர்களுக்கு நிகழ்ச்சி இல்லாத காலங்களில் ரூ 10,000 வழங்கப்படும்.
- ஏற்கனவே செயல்படுத்தப்படும் மக்கள் நல திட்டங்கள் மேம்படுத்தப்பட்டு தொடரும்.

**தமிழக பிரச்சினைகளுக்கு தீர்வை நோக்கி**

நம்மை விட நாடு உயர்ந்தது என்ற எண்ணத்தை அனைவரிடமும் வளர்ப்போம்.

**ஒரு நல்ல அடைமழை, சாக்கடையை சுத்தப்படுத்தும்!**
**இளைஞர்களே, பெற்றோர்களே,**
**வாருங்கள் நல்ல அடைமழையாய் மாறுவோம்!**
**தமிழக அரசியல் சாக்கடையை சுத்தப்படுத்துவோம்!.**
**தமிழகத்தை சீரமைப்போம்.**


நம்ம சின்னம்
டார்ச் லைட்
சீரமைப்போம்
தமிழகத்தை